# ஔவை-யார்?

ம. பொ. சிவஞானம்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு : 1-1-1968.
உரிமை பதிவு.

விலை. ரூ. 2-50

அச்சிட்டோர் : ஜீவன் அச்சகம், சென்னை-5 (1210)

# முன்னுரை

இராமலிங்க சுவாமிகள் பாடியது போன்று தமிழகத்திலே வாழையடி வாழையென ஞானியர் பலர் தோன்றி வந்துள்ளனர். தமிழகத்தில் தோன்றிய கவிஞர்களெல்லாம் ஐம்புலன்களின் மீது ஆணை செலுத்திய ஞானியர்களாக விளங்கினர்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனல், ஞானியரெல்லாம் கவிஞர்களாக விளங்கினர்கள் என்பது வரலாறு காட்டும் உண்மை.

தமிழகம் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த நூற்றாண்டுகளில்கூட உரிமையிழந்து, அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருந்த தமிழர்கள் மத்தியிலே இராமலிங்க சுவாமிகள், சுப்பிரமணிய பாரதியார் போன்ற மகாகவிகளான ஞானியர்கள் தோன்றியுள்ளனர். ஆம்; அந்நியருடைய அரசியல் ஆதிக்கம்கூட தமிழினத்தின் ஆன்மாவை அடிமைப்படுத்தவில்லை.

மனித சமுதாயம் தோன்றிய காலம் தொட்டே ஆணினத்தார் பெண்ணினத்தார்மீது ஏதேனும் ஒருவகையில் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கின்றனர். அந்த ஆதிக்கம் காலத்திற்கு ஒருவிதமாக, கண்டத்திற்கு ஒருவிதமாக, ஒரே கண்டத்திலும் நாட்டுக்கொருவிதமாக இருந்து வந்திருக்கிறது. அதனல் ஆணினத்தோடு போட்டி போட்டு பெண்ணினத்திலே ஞானியர்களான மகாகவிகள் தோன்றுதல் அரிதாக இருந்து வந்திருக்கின்றது. அப்படியிருந்தும், தமிழினம் செய்த தவத்தால் ஔவையார், ஆண்டாள் காரைக்காலம்மையார் போன்ற பெண் புலவர்கள் தோன்றியிருக்கின்றனர். இவர்களிலே தலைசிறந்தவர் ஔவையார்.

ஔவையாரின் வரலாற்றை எழுத வேண்டுமென்ற ஆசை நெடுங்காலமாக எனக்கு இருந்து வந்திருக்கிறது. இந்த ஆசையை ஏற்படுத்தியவர் என் பெருமதிப்புக்குரிய நண்பர் ஔவை தி. க. சண்முகம் ஆவர்.

வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்னும் நூலை நான் வெளியிட்ட பின்னர் ஔவையாரைப் பற்றியும் எழுத வேண்டுமென்ற என்னுடைய நெடுங்கால ஆசை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. அதன் விளைவாக ஓய்வு கிடைத்த போதெல்லாம் ஔவையார் பற்றிய செய்திகளைச் சேகரித்து இந்த நூலை உருவாக்கியுள்ளேன்.

ஔவையாரைப் பற்றிய தகவல்கள் முழுவதையும் இந் நூலில் சேர்த்துவிட வேண்டுமென்று யான் விரும்பினேன். அந்த விருப்பம் எந்த அளவில் நிறைவேறியிருக்கிறதோ யான் அறியேன். ஆனால், இதற்கு முன் ஔவையாரைப்பற்றி வெளியான நூல்களிலே கிடைக்காத தகவல்கள் பலவற்றை இந்நூலிலே காண முடியும்.

ஔவையார் இயற்றியதாகச் சொல்லப்படும் 'கல் ஒழுக்கம்' என்ற நூல் மறைந்து போய்விட்டதாகவே புல பெருமக்கள் கருதி வந்தனர். ஆனால், யான் எடுத் கொண்ட பெருமுயற்சியின் காரணமாக, அந்நூலே ல னிலுள்ள பிரிட்டிஷ் நூல் நிலையத்திலிருந்து பெற முடிந் இதற்குப் பேருதவி புரிந்த தமிழக அரசின் தொல்பொ துறை அதிகாரி திரு. நாகசாமி அவர்களுக்கு செலுத்துகின்றேன்.

ஔவையாரின் வரலாற்றையும் அவர் பெயரால் உள்ள இலக்கியங்களையும் புலமைக் கண்கொண்டு ஆராய்ந்தால் போதாது. சாதி சமய மொழிப் பற்றுகளுக்கு அப்பாற்பட்டு, மனித சமுதாயம் முழுவதையும் மனத்திற்கொண்டு, அரசியல்—ஜனநாயகம்—சோஷலிசம் ஆகிய பண்புகளிலே உரைத்துப் பார்த்து ஆராய வேண்டும். இருபதாம் நூற் றூண்டுக்குத் தேவைப்படும் ஆராய்ச்சி இதுவேயாகும். இந்த முறையில் ஆராய்ந்துதான் ஔவை—யார்? என்ற நூலை உரு வாக்கியிருக்கின்றேன்.

யான் நடத்திவரும் 'செங்கோல்' இதழில் தொடர் கட்டுரையாக எழுதி வந்ததனையே சிறிதளவு திருத்தங்கள் செய்து நூலாக்கியுள்ளேன். குறைகள் ஏதேனுமிருப்பின் எனக்குத் தெரிவிக்குமாறு இந்நூலைப் படிக்கும் அன்பர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

என்னுடைய நூல்களை வெளியிடுவதில் எப்போதும் தனி ஆர்வம் காட்டிவரும் இன்ப நிலையம் உரிமையாளர் திரு. சோம. சுவாமிநாதன் அவர்கள் இந்த நூலையும் வெளியிடப் பொறுப்பேற்றது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்னை,
30—1—67

**ம. பொ. சிவஞானம்**



# படையல்

நாடகத்தின் வாயிலாக அறிவுக்கரசி ஔவையாரின் புகழ் பரப்பி வரும் என் கெழுதகை நண்பர் ஔவை தி. க. ஷண்முகம் அவர்களுக்கு இந் நூலை உரிமையாக்குகின்றேன்.

ம. பொ. சிவஞானம்

# ம. பொ. சி. எழுதிய நூல்கள்

| | | |
|---|---|---|
| கம்பர் கவியின்பம் | 3 | 50 |
| வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (மலிவுப் பதிப்பு) | 3 | 00 |
| வள்ளலாரும் பாரதியும் | 1 | 50 |
| இலக்கியத்தில் சோஷலிசம் | 2 | 50 |
| மலாசியாவில் ஒரு மாதம் | 2 | 50 |
| பாரதி கண்ட ஒருமைப்பாடு | 2 | 00 |
| காந்தியடிகளும் ஆங்கிலமும் | 1 | 50 |
| பாரதியும் ஆங்கிலமும் | 1 | 50 |
| தமிழா, ஆங்கிலமா ? | 2 | 50 |
| தமிழும் கலப்படமும் | 1 | 50 |
| வள்ளுவர் வகுத்த வழி | 0 | 50 |
| வீரக் கண்ணகி | 3 | 00 |
| இலக்கியச் செல்வம் | 2 | 50 |
| சிலப்பதிகாரமும் தமிழும் | 0 | 50 |
| எங்கள் கவி பாரதி | 0 | 50 |
| கட்டுரைக் களஞ்சியம் | 3 | 00 |
| இன்பத் தமிழகம் | 2 | 25 |
| முரசு முழங்குகிறது | 1 | 25 |
| வானொலியில் ம. பொ. சி. | 1 | 50 |
| இலக்கியத்தின் எதிரிகள் | 0 | 50 |
| ம. பொ. சி. கூறுகிறார் | 1 | 00 |
| சுயாட்சியா, பிரிவினையா ? | 1 | 50 |
| பிரிவினை வரலாறு | 0 | 50 |
| கயத்தாற்றில் கட்டபொம்மன் | 0 | 50 |
| சுதந்திர வீரன் கட்டபொம்மன் | 2 | 00 |
| தமிழர் கண்ட காந்தி | 0 | 50 |
| சுதந்திரப் போரில் தமிழகம் | 0 | 50 |
| வீரபாண்டியக் கட்ட பொம்மன் | 1 | 75 |
| கப்பலோட்டிய தமிழன் | 1 | 75 |

*  *  *  *

| | | |
|---|---|---|
| தலைவர் ம. பொ. சி. | 2 | 50 |
| ம. பொ. சி. வாழ்க்கை வரலாறு | 1 | 50 |
| தமிழகம் தந்த ம. பொ. சி. | 2 | 50 |
| கவிஞர் கண்ட ம. பொ. சி. | 2 | 50 |

# ஔவையாரின் பெருமை

இந்திய சமுதாயம் பெண்மைக்குப் பெருமை தரும் பண்புடையதாகும். வேத காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில்—குறிப்பாக, பௌராணிகமும் புரோகிதமும் மக்கள் வாழ்வில் புகுந்த காலத்தில், பெண்மையைப் பெருமைப் படுத்தும் தாய்மை வழிபாடு சிறிது அருகிய தென்ருலும், முற்றிலும் அழிந்துவிடவில்லை.

இடைக்கால—பிற்கால நிலை எதுவாயினும் சரி; வேத காலம் எனப்படும் பண்டைக்காலத்தில், தாய்மையை வழிபட்டு வாழ்ந்தனர் பாரத மக்கள். இதில், வடவருக்கும் தென்னவருக்கும் வேறுபாடு இல்லை எனலாம்.

**சர்வம் சக்தி மயம்!**

ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலாப் பரம்பொருளை நாம ரூபத் தன்மைகளால் காட்சிப்படுத்திய தத்துவ ஞானியர் கூட, பெண்பாதி ஆண்பாதியான. அர்த்த நாரியாகவே—அம்மையப்பராகவே அறிமுகப் படுத்தின ரென்ருல், பெண்மையின் பெருமை பேசுந்தரத்ததோ!

இன்னும் ஒருபடி மேலே சென்று, அகிலமனைத்தையும் அன்னை வடிவிலே கண்டு, "ஞால முற்றும் பராசக்தி தோற்றம் (சர்வம் சக்தி மயம் ஜகத்)" என்று முழங்கினர் முன்னேர். அதையே, 'வந்தேமாதரம்' என்றனர் பிற்கால மக்கள்.

கடலால் சூழப்பட்ட புவியனைத்தையும் தாய்வடிவில் காணும் பண்டை நெறியினை,

அலைநீர் ஆடை மலைமுலை ஆகத்து
ஆரப் பேரியாற்று மாரிக் கூந்தல்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை

*[சிலம்பு; 5: 1-3]*

என்னும் வரிகளில் நினைவூட்டுகின்றார், சேர மாமுனி இளங்கோ. ஆம்; "மண்ணக மடந்தையானவள், அலை வீசும் கடல் நீரை ஆடையாக அணிந்து, மலைகளை முலைகளாகப் பெற்று, ஆறுகளை மாலைகளாகக் கொண்டு விளங்குகின்றாள்" என்கின்றார். இளங்கோவுக்கும் முன்னோடியாக,

இலமென் றசைஇ இருப்பாரைக் காணில்
நிலமென்னும் நல்லாள் நகும்.

என்னும் குறளில், 'நிலமென்னும் நல்லாள்' என்னும் சொல்வழி, மண்பரப்பைத் தாய் வடிவில் காணும் வேத காலக் கொள்கை தமிழருக்கும் உடன்பாடென்பதைக் காட்டியுள்ளார் திருவள்ளுவர்.

## தாய்மை வழிபாடு

தெய்வத்தைத் தாயாகவும் காணும் வேதகால நெறியைப் பின்பற்றியே, 'தாயுமானவன்' என்று ஆண்டவனை அழைத்தனர், "தாயேயாகித் தாங்கினை போற்றி" என்றும் பாடினர் முன்னோர்.

நாளடைவில், "பத்து மாதம் சுமந்து பெற்ற தாயே தெய்வத்தினும் சிறந்தவள்" என்ற பொருளில், "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்ற சமுதாய நீதியும் பிறந்தது.

இயற்கைச் சக்திகளுள் ஒவ்வொன்றையும் தனித் தனித் தெய்வமாகக் கருதி வழிபட்ட காலத்தும்,

அவற்றுள் மண்ணையும் நீரையும் தாய் வடிவத்திலே கண்டனர் மக்கள். கல்விக்குக் 'கலைமகள்' என்றும், செல்வத்திற்குத் 'திருமகள்' என்றும் பெயரிட்டு வழிபடலாயினர். தாங்கள் பிறந்து வாழ்ந்த மாநிலத்தைத் 'தாய் நாடு' என்றும் வருணித்தனர்.

தொகுத்துரைத்தால், வேத காலந்தொட்டுத் தாய்மையை வழிபட்டு வந்த பாரத மக்கள், ஆண்டவனை அம்மையப்பராகக் கண்டனர்; பின், 'அகில மனைத்தும் அன்னை வடிவம்' என்றனர்; நாளடைவில் "கருவில் காத்த கடவுளை விட, கருவுற்ற காலத்தில் சுமந்து, உருவுற்று வெளிப்பட்ட பின்னர், அரும்பாடுபட்டு வளர்த்த அன்னையே சிறந்தவள்" என்றொரு சித்தாந்தமும் பேசினர்.

இப்படி, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பெண்மைக்கு - அதாவது, தாய்மைக்குப் பெருமை தந்த பாரத மக்கள், 'ஆணுக்கொரு நீதி,' 'பெண்ணுக்கொரு நீதி' என்ற அநீதியை அறியாத சமுதாயத்தினர், இடைக் காலத்தில், அதாவது, 'இதிகாச-புராண காலத்தில்' தாய்க்குலத்தை அடிமைப்படுத்த முயன்று, மனித குலத்துக்கே மாசு தேடிவிட்டனர்.

எத்தனையோ அரிய நீதிகளை வகுத்து, மானிட சமுதாயத்தை ஒழுக்க நெறியில் நிறுத்திய மனு என்பார், சில அநீதிகளையும் தமது நூலிலே சேர்த்து விட்டார், கலம் பாலில் துளி விஷத்தைக் கலந்தாற்போல! அவற்றுள், "பெண் குலத்துக்கு ஏட்டுக் கல்வி கூடாது" என்று கூறியதும் ஒன்றாகும். அவர் காலத்திற்கு இப்படியும் ஒரு (அ)நீதி தேவைப்பட்டது போலும்!

பாரத நாட்டின் வடபுலத்தில், பெண்மையை வழிபட்ட பெருமை அழிந்து, தாய்க்குலம் அடிமைப்பட்ட காலத்திலும், தென் பாரதமாகிய தமிழகத்தில் மட்டும்

பெண்ணுரிமை அழியவில்லை. ஆணுக்குப் பெண் சமம் என்னும் வேதகால நீதி வேரூன்றியிருந்தது. அந்தச் சூழ்நிலையில், தமிழகத்து மங்கையர் நடுவே பெருமைக் குரிய மக்கள் கவி யொருவர் தோன்றினர். அவர், **ஔவைப் பெருமாட்டியாராவார்.**

## வேத காலத்தில்....

பாரத முழுவதிலும் பெண்ணுரிமை தழைத்திருந்த வேத காலத்தில் பெண் கவிஞர் பலர் வடபாரதத்திலும் தோன்றி வாழ்ந்து புகழ் பெற்றனர். அவர்களுள் பல ருடைய பெயர்களும் அவர்கள் இயற்றிய கவிதைகளும் அழிந்தொழிந்தன. எஞ்சிய சிலருடைய பெயர்களும் கவிதைகளும் நால்வேதங்களுள் முதல்வேதமாகக் கருதப்படும் ரிக்வேதத்தில் காணப்படுகின்றன.

அகத்திய முனிவரின் உடன்பிறந்தாளான **விசுவாவரை**, அம்மாமுனியின் காதல் மனைவியான **உலோபாமுத்திரை**, ஆம்ரி முனிவரின் அருமை மகள் **வாக்தேவியார்** ஆகியோர் ரிக் வேதத்தின் வாயிலாக அறிமுகமாகும் புகழ் மிக்க பெண்பாற் கவிஞர்களாவர்.

மற்றும் **கோஸா, அபலா, மைத்ரேயி, கார்க்கி, தேவஹூதி** ஆகிய பெண்பாற் கவிஞர்களின் செய்யுள் களும் ரிக் வேதத்தில் காணப்படுகின்றன.

ரிக்வேத காலத்தில் தமிழகத்திலும் பெண்பாற் கவிஞர்கள் எண்ணற்றோர் வாழ்ந்திருக்கக் கூடும். கடல்கொண்டுபோன முதற் சங்க—இடைச்சங்க இலக் கியங்கள் கிடைத்தால், அச்சங்கங்களில் அங்கம் வகித்த 'ஔவை மூதாட்டியர்'களை அறியலாம். அந்த அற்புதத்தைச் செய்வார் யார் ?

இந்(து)திய மக்களால் போற்றப்பட்டு வரும் வேதமானது, இறைவனுல் கூறப்பட்ட தென்பது புராதனக் கொள்கை. அதனுல், வேதத்திற்கு 'எழுதாக் கிளவி' என்ற பெயரும் பிறந்தது. இறைவாக்கு

என்ற காரணத்தால், பிற்காலத்தில் மானிடர்களால் எழுதப்பட்ட நூல்களுக்கெல்லாம் வேதமே முதல் நூலாகக் கொள்ளப்பட்டது.

## வேத வாக்கு

வேதத்தில் கூறப்பெற்றவெல்லாம் சத்திய மொழியாகக் கொள்ளப்பட்ட வழக்கத்தால், மானிடர் வாக்கை மதிப்பிடுங்கால், "இது என்ன வேத வாக்கோ?" என்று கேட்கும் வழக்கமும் பிறந்தது. அதனால், "மானிடர் வாக்கு எதுவும் வேதவாக்குக்கு இணையாகாது" என்பது மக்கள் நம்பிக்கை என்றும் கொள்ளலாம். ஆனால், புராதனப் பெருமையுடைய தமிழ் மொழி—உயர் ஆரியத்திற்கு நிகரான நம் தாய் மொழி—வேத வாக்குக்கு மறுவாக்கைத் தந்தது. ஆம்; வேத வாக்குக்கு மாறுபட்ட வாக்கன்று; மறுவாக்கு! அந்த வாக்கு யாருடையது?—என்பதனை, வேதியர் குலத்தில் தோன்றி, நம்மிடையே வாழ்ந்துவரும் உத்தமர் ஒருவருடைய உரையைக் கொண்டே உணர்த்துவோம் :

"தமிழ்ப் பாஷை தெரிந்தவர்களுக்கு ஔவை யார் என்றால் தெரியாமல் இருக்காது. அவருடைய ஒரு வாக்கியமாவது எல்லோருக்கும் தெரிந்திருக்கும்"

*[ஆசாரிய சுவாமிகள் உபந்நியாசங்கள்: பகுதி 2, பக். 47]*

"ஔவை வாசகத்தில் பொய்யே இருக்காது. ஏதாவது ஒரு விஷயம் 'பொய்யில்லை, உண்மை தான்' என்பதற்கு, 'இது வேத வாக்கு' என்பார்கள். 'வேதவாக்கு' என்றால், 'சத்திய வாக்கு' என்று பொருள். அதற்கு அடுத்தபடி, 'ஔவை வாக்கு' என்று சொல்வது வழக்கம். 'ஔவை வாக்கு' என்றால், சத்தியம்.

*[ஆசாரிய சுவாமிகள் உபந்நியாசங்கள்: பகுதி 1, பக்.95]*

இவை, காஞ்சி காமகோடி பீடத்திற்கு ஆதிசங்கரரின் வாரிசுகளாக வாழையடி வாழையென வந்துள்ள சங்கராசாரியர்களுள்ளே, தற்காலத்துச் **சங்கராசாரிய சுவாமிகள்** (பெரியவாள்) கூறிய பொன் மொழிகளாகும் **ஆம்;** ஆசாரிய சுவாமிகளே வேதவாக்குக்கு மறுவாக்காகக் கருதும் அமுத வாக்கை அருளினர் ஔவையார்.

## பாரதி போற்றிய பாட்டி

அப்பழுக்கற்ற அந்தணராய் விளங்கிய **மகாகவி சுப்பிரமணிய பாரதியார், "தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம்"** என்று பாடியுள்ளார். மரணத்தைப் போக்கும் தேவாமிருதத்துடன் மனித குலத்தின் அறியாமையைப் போக்கும் ஔவையினுடைய பொன்மொழியை ஒப்பிடுகின்றார் அமரகவி பாரதியார். அவர், 'ஔவை' என்று சொல்லாமல், 'தமிழ் மகள்' என்று சொல்லியது ஆழ்ந்த பொருளுடையதாகும். 'ஔவை' என்ற சொல்லுக்கு 'அன்னை' என்று பொருள் தோன்றும்படி புனித வாழ்க்கை நடத்தினர், அந்தப் பெயர் தாங்கிய பெருமாட்டியார். அவருடைய வாக்கை வேதவாக்காக, அமரருக்கும் எளிதில் கிட்டாத அமுதம் போன்ற வாக்காக—அருள் வாக்காகக் கொள்கின்றார், அருளாளரான பாரதியார்.

"ஆண் - பெண் அனைவருக்கும் ஔவையாரின் நீதியே வழிகாட்டி. தமிழ் ஜனங்களில் பெரும்பான்மையோருக்குச் சுமார் சென்ற இரண்டாயிரம் வருஷங்களாக ஔவையாரின் நீதியே ப்ரமாணமாக நடைபெற்று வருகின்றது."

"தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களை யெல்லாம் இழந்துவிடப் பிரியமா ? ஔவையின் நூல்களை இழந்துவிடப் பிரியமா ?"—என்று நம்மிடம் யாரேனும்

கேட்பார்களாயின், "மற்றச் செல்வங்களை யெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ் நாடு மீட்டும் சமைத்துக்கொள்ள வல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்பட மாட்டோம். அது மீட்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப்பெருஞ் செல்வம்."

இது, 'பாரதி கட்டுரை' என்ற நூலில், 'தமிழ் நாட்டு நாகரிகம்' என்னும் தலைப்பின் கீழ்க் காணப்படு வதாகும்.

சுப்பிரமணிய பாரதியார், வெறும் ஆவேசக் கவி யாக மட்டுமல்லாமல் ஆன்மிகத் துறையில் அனுபூதித் தன்மையுடைய அருட்கவியுமாவார். அந்த மெய்ஞ் ஞானி, ஔவையின் வாக்கை வேத வாக்காகக் கருது கின்ருரெனில், அம்மூதாட்டியின் பெருமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ !

ரிக் வேதத்தில் சேர்க்கப்பட்டுள்ள கவிதைகளை இயற்றியவர்களான விசுவாவரை, உலோபாமுத்திரை போன்ற வடமொழிப் பெண்பாற் கவிஞர்களின் வாக் குக்கூட இன்றைய சமுதாயத்தினரால் போற்றப் படவில்லை. ஆனுல், வேத மொழியல்லாத மானிடர் மொழியில் கவிதைகள் இயற்றிய ஔவைப் பெரு மாட்டியாரின் வாக்கை வேதவாக்காக்க் கருதுகின் றது இன்றைய தமிழர் சமுதாயம்.

இத்தகைய உயர்நிலை பெற்ற பெண்ணரசியாரைப் பெற்றெடுத்த தமிழகம் பெருமை யுடையதன்றே !

ஔவையார் என்னும் பெயர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களிலே இடம் பெற்றிருக்கிறது. அன்று தொட்டு இன்றுவரை அந்தப் பெயர் தமிழர் வாழ்விலே பிணைந்து, பிரியாத நிலைபெற்றுவிட்டது.

ஔவையாரின் பிறப்பு வளர்ப்புப் பற்றி ஆராய்வதற்கு முன்னர், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் - இந்த மல்லன்மா ஞாலத்திற்கு அப்பெருமாட்டி அறிமுகமானபோது - தமிழ் மொழியின் நிலை என்ன? என்பது பற்றி ஆராய்வோம்.

தமிழ் வழங்கும் நிலப்பரப்பு அளவிட்டுச் சொல்ல முடியாதவாறு முன் எப்போதோ ஒரு காலத்தில் ஆஸ்திரேலியாக் கண்டம் வரை நீண்டு இருந்ததாக நிலநூல் வல்லார் கூறுகின்றனர். பின்னர் தோன்றிய கடல்கோளால் தற்போதுள்ள குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த தமிழ் நிலப்பரப்பு முழுவதும் நீர்ப்பரப்பாக மாறியதென்பர். இதனை,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு,
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி !"
[சிலம்பு; 11: 19—22]

என்று இளங்கோவடிகள் பாண்டியனைக் குறிப்பிடுவதாலும் அறிகிறோம்.

## நேரு கூறுகிறார் !

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்தகுடியினரான தமிழினத்தார், தெற்கே பெருமளவு நிலப்பரப்பை இழந்த பின்னர், வடக்கேயுள்ள கங்கையையும் இமயத்தையும் உரிமையாக்கிக் கொண்டு, பாரத நாடு முழுவதிலும் பரந்து வாழ்ந்தனர் போலும். 'உலக சரித்திரம்' என்னும் தமது நூலில் இதனை நினைவூட்டுகின்றார் நேரு பெருமகனார். அவரது கருத்து வருமாறு:

"ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தபொழுது அது ஏற்கெனவே நாகரிகம் வாய்ந்த நாடாக இருந்

தது. மொகஞ்ஜோ தாரோவில் நமக்குக் கிடைத் திருப்பனவற்றிலிருந்து ஆரியர்களின் வருகைக்கு நெடுங் காலத்துக்கு முன்னரே இந்தியாவின் வட மேற்குப் பாகத்தில் ஒரு பெரிய நாகரிகம் இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

"இஃதன்றியும், தென்னிந்தியாவில் — ஒரு வேளை வட இந்தியாவில் கூட—திராவிடர்களின் நாகரிகம் மிகவும் சிறப்புற்றிருந்தது என்பது தெளிவாகத் தெரிகின்றது. அவர்களுடைய மொழி ஆரியர்களின் சம்ஸ்கிருதத்திலிருந்து பிறந்ததன்று. மிகவும் பழமையான அம் மொழியில் சிறந்த இலக்கியங்கள் காணப்படுகின்றன."

புவியியல் வல்லுநரும் ஆராய்ச்சியாளரும் முன்னொரு காலத்தில் தமிழரின் நாகரிகம் வடபாரதத்திலும் பரவியிருந்த தென்பதை உறுதிப்படுத்துகின்றனர்.

இப்படி, இமயம்வரை பரந்து கிடநத தமிழ்மொழி, காலப் போக்கில் விந்தியம்வரை பின்வாங்கி, அதற்கும் பின்னர் வேங்கட மலைவரை குறுகி, கி. மு. முதல் நூற்றாண்டில் அம்மலையையே தன் வடக்கெல்லையாகக் கொண்டிருந்தது. அந்தக் காலத்தில்தான் அறிவுக்கரசி ஔவைப் பெருமாட்டியார் தோன்றினார். அவர் தோன்றிய காலத்தில், வடவேங்கடத்திற்கும் தென்குமரிக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பே தமிழ் கூறும் நல்லுலகமாக இருந்ததென்பதை,

> "வடவேங்கடந் தென்குமரி
> ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்,"
>
> [தொல்காப்பியம் - பாயிரம்]

என வரும் பனம்பாரனார் வாக்கால் அறிகின்றோம்.

## தமிழ்ச் சங்கம்

பாண்டி மண்டிலத்தின் தலைநகரில் தமிழ்ச் சங்கம் அமைத்து மொழி வளர்த்தனர் பண்டைப் புலவர்கள். தலைச் சங்கம்—இடைச்சங்கம்—கடைச் சங்கம் என ஒன்றன்பின் ஒன்ருக மூன்று சங்கங்களைக் கண்டது தமிழ்நாடு.

தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய இறையனாரகப் பொருள் என்னும் நூலின் உரையில், முதல்—இடை—கடை என்னும் மூச்சங்கங்களைப் பற்றிக் கூறுங்கால், முதற் சங்கம் கடல் கொண்ட மதுரையிலும், இடைச் சங்கம் கபாடபுரத்திலும் இருந்தன வென்றும், இவை கடல் கொள்ளப்பட்ட பின்னர் கடைச் சங்கம் இன்றுள்ள மதுரையில் அமைந்த தென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைச்சங்க காலத்தில் 4449 புலவர்களும், இடைச் சங்க காலத்தில் 3700 புலவர்களும் இருந்து தமிழ் வளர்த்தனர் என்று ஒரு கதை உண்டு. கடைச்சங்க காலத்தில் 449 புலவர்கள் இருந்தனர் என்பதனை நமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்களால் அறிய முடிகிறது. கடைச்சங்கப் புலவருள் பெண்பாற் புலவர் முப்பதின்மராவர். அந்த முப்பதின்மருள் தலையானவர் ஔவையார். 449 புலவர்களைக் கொண்ட கடைச்சங்க காலத்தி லிருந்த பெண்பாற்புலவர் முப்பதின்மர் என்ருல், 4449 புலவர்கள் வாழ்ந்த தலைச் சங்கத்திலும், 3700 புலவர்கள் வாழ்ந்த இடைச் சங்கத்திலும் இருந்த பெண்பாற் புலவர் இன்னும் அதிகமானவர்களாக இருந்திருக்கலாமன்ரே !

ஔவையாருக்கு முன்பு அவரைப் போன்ற பெண்பாற் கவிஞரை உலக மொழிகளில் எந்த ஒரு மொழியும் பெற்றிருக்கவில்லை என்று வரலாறு கூறுகின்றது.

ரிக்வேத காலத்தில் சம்ஸ்கிருத மொழிக் கவிஞர்களாக விளங்கிய விசுவாவரை, உலோபாமுத்திரை, வாக்தேவியார் முதலிய பெண்பாற் கவிஞர்கள் இயற்றிய இலக்கிய நூல் எதுவும் இதுகாறும் கிடைத்தில. தனிப்பாடல்களின் சிற்சில வரிகள் மட்டுமே கிடைத்துள்ளன. அந்த வரிகளைக்கொண்டு ஆராய்ந்தால் ஔவைக்கிருந்த அரசியல் பெருமையும் சமுதாயத் தலைமையும் அவர்களுக்கில்லை யென்பது தெளிவு. இந்தியாவில் பேச்சு வழக்கிலுள்ள மொழிகளுள் முதன்முதலாகப் பெண்பாற் கவியைப் பெற்றெடுத்த பெருமை தமிழ் மொழிக்கே உரியதாகும்.

## ஸாப்போ

இனி, உலக மொழிகளை நோக்குவோம். உலகில் தமிழ்மொழிக்கு இணையான புகழ்மிக்க மொழி கிரேக்கமாகும். அம்மொழியில் அத்தி பூத்தாற் போன்று கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் ஸாப்போ என்ற பெண்பாற் கவிஞர் தோன்றினார். அவர் தம் காலத்தில் பெருமதிப்புடன் வாழ்ந்தார். பிற்காலத்திலும் அவரது மதிப்பு மங்கவில்லை. ஸாப்போவின் கவிதைகள், காதற்கவிதைகளே. திருமணப் பாடல்களும் இயற்றியுள்ளார். எல்லாம் இசைப்பாடல்கள்! அவை, ஏழு தொகுதிகளாக வெளியிடப்பெற்றுள்ளன.

அவருக்கு முன்னும் பின்னும் கிரேக்க மொழியும் வேறு ஸாப்போக்களைப் பெறவில்லை. கிரேக்க ஸாப்போவும் நம் சங்ககால ஔவைக்கு இணையாக மாட்டார்.

கி. மு. முதல் நூற்றாண்டில் தோன்றிய ஔவையாரின் பாடல்களில், வீரம் - காதல் - அன்பு - அவலம்- அறிவு ஆகிய அத்தனையுமுண்டு. ஒரு பெண்பாற் கவிஞரிடம் - இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு

வாழ்ந்தவரிடம் - இத்துணைப் பண்புகளையும் ஒருங்கே காண முடிகிறதென்றால், தமிழ்செய்த தவம் என்னே!

ஔவையாருக்கு முன்னும் பின்னும் இந்தியாவிலும் உலக நாடுகளிலும் தோன்றிய பெண்பாற் கவிஞர்களுடன் அவரை ஒப்பிட்டுப் பார்த்தால், அம் மூதாட்டிக்குள்ள இடம் தனியானது. அவர், உலகத்தின் ஒப்பற்ற கவியாவார்!

# பிறப்பு வளர்ப்பு

உலகில் தோன்றிய பெண்பாற் கவிஞர்களுள்ளே தலைசிறந்தவராக விளங்கும் ஔவையாரின் இயற் பெயர் இன்னதென்று தெரியவில்லை.

'ஔவை' என்னும் சொல், 'அன்னை' என்னும் பொருளில் இலக்கியங்களிலே வழங்கி வருகிறது. மக்கள் பேச்சு வழக்கிலே 'பாட்டி'-'கிழவி' என்னும். பொருளில் வழங்கி வருகிறது. வேற்று மொழியான தெலுங்கிலும் கன்னடத்திலும்'தாய்' —'பாட்டி'-'கிழவி' என்னும் பொருள்களில் வழங்கப்பட்டு வருகிறது. தெலுங்கில் 'அவ்வ' என்றும், கன்னடத்தில் 'அவ்வெ' என்றும் உச்சரிக்கப்படுகிறது.

கன்னடமொழி அகராதிக்காரர் கிற்றெல் என்பார், "அவ்வெ என்பது அன்புக்கும் ஆதரத்திற்கும் அறி குறியான பட்டப்பெயருமாகும்" என்கிறார். 'தமிழ்க் கலைக் களஞ்சிய'த்தில்.

> "அம்மை என்பதன் திரிபாகிய அவ்வை என்ற சொல்லுடன் சிறப்புணர்த்தும் விகுதியாகிய'ஆர்' சேர்ந்து ஔவையார் (அம்மையார்) என்னும் சொல், பெண்களில் உயர்ந்தவரைக் குறிக்க வழங் கியது,"
>
> [பகுதி 1, பக்கம் 754]

என்று விளக்கம் தரப்பட்டுள்ளது.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதி காரம் வாழ்த்துக் காதையுள்,

அவ்வை மகளிவள்தான் அம்மணம் பட்டிலா,
வையெயிற்று ஐயையைக் கண்டாயோ, தோழி !

என்றும்; மணிமேகலைக் காப்பியத்துள்,

தவ்வைய ராகிய தாரையும் வீரையும்
அவ்வைய ராயினீர்...

[11 : 136-37.]

என்றும் வரும் வரிகளில், 'தமக்கை' என்னும் பொருளில் 'தவ்வை' என்ற சொல்லும், 'தாய்' என்னும் பொருளில் 'அவ்வை' என்ற சொல்லும் வழங்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளிலும், 'தமக்கை' என்னும் பொருளில் 'தவ்வை' என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் வள்ளுவர். பிற்காலச் சிற்றிலக்கியங்களிலும் 'அன்னை' என்னும் பொருளிலேயே 'ஔவை' வழங்கப்பட்டுள்ளது.

ஔவை, எங்குப் பிறந்தார்? பெற்றோர் பெயரென்ன? இந்த வினாக்களுக்கு விடைகாண முயன்ற புலவர்கள், ஒருமித்த கருத்துடன் முடிவு கூறவில்லை. ஆனால், கடைச்சங்க காலத்தில் ஔவையார் என்ற பெயருடைய பெண்பாற் புலவரொருவர் வாழ்ந்தார் என்பதனை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

## சங்க இலக்கியங்களிலே...

அகிலம் போற்றும் ஔவையார் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தார் என்பது, சங்கப் புலவரான நத்தத்தனார் பாடியுள்ள சிறுபாணாற்றுப்படையுள், "கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி, அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கு ஈந்த...அதிகனும்" என்னும் வரிகளில், அதியனிடம் ஔவையார் நெல்லிக்கனி பெற்ற செய்தியைக் கூறுவதாலும் உறுதிப்படுகின்றது.

சங்க இலக்கியங்களிலுள்ள ஔவையார் செய்யுள்கள் 59 ஆகும். அவற்றுள், 23 செய்யுள்கள் அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் சிற்றரசனைப் பற்றியவை

யாகும். அந்தச் செய்யுள்களால், அதியமானின் அரச வைப் புலவராக ஔவை இருந்தாரென்று அறிய முடிகிறது.

புறம் 99இல் ''இன்றும் பரணன் பாடினன்'' என ஔவை குறிப்பிட்டிருப்பதால், அவர், சங்க காலத்து பெரும் புலவரான பரணரின் நண்பர் என்பது புலனு கின்றது.

புறம் 35இல், அதியமான் சார்பில் தொண்டைமானி டம்—இருவருக்கும் நேரவிருந்த போரைத் தவிர்க்க— ஔவையார் தூது சென்றதாக அறிகிறோம்.

புறநானூற்றில் அதியன் மகன் பொகுட்டெழினியை ஔவையார் பாடியிருத்தலால், அவன் காலத்திலும் அவர் வாழ்ந்திருந்தார் என்பது உறுதிப்படுகிறது.

புறம் 367இல், சேரமான் மாரி வெண்கோ, பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவேந்தரும் ஒருங்கிருக்கக் கண்டு அவர்களை ஔவையார் வாழ்த்தியதால், தமிழ் மூவேந் தர் ஔவையைப் பெரிதும் மதித்தனர் என்பது புலனுகின்றது.

புறம் 91ஆவது செய்யுளில்,

—தொல்நிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்அகத்து அடக்கி,
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே !

என்று ஔவையார் பாடியிருப்பதால், உயிர் வளர்க்கும் நெல்லிக்கனி யொன்றை ஔவையாருக்கு அதியன் தந்ததும், அதனையுண்டதால் அவ்வம்மையார் நெடுங் காலம் வாழ்ந்ததும் புலனுகின்றன.

இவை தவிர, ஔவையாரின் பிறப்பு வளர்ப்புப் பற்றிச் சங்கப் பாடல்களில் செய்தியில்லை.

தனிப் பாடல்களை ஆராய்ந்தால், ஔவையார் வாழ்க்கை பற்றிய சில குறிப்புகள் கிடைக்கின்றன. அந்தப் பாடல்களிலும் ஔவையாரின் பிறப்பு வளர்ப்பு பற்றிக் குறிப்பில்லை. ஔவையின் நீதிநூல்கள் சமய நூல்கள் நிலையும் இதுதான். ஆனால், வேறு புலவர்கள் நூல்களிலே ஔவையாரின் பிறப்பு வளர்ப்பு பற்றித் தகவல்கள் தரப்பட்டுள்ளன. அவை—**கபிலர் அகவல், திருவள்ளுவர் கதை, ஞானமிர்தம், பன்னிரு புலவர் சரித்திரம், புலவர் புராணம், விநோத ரசமஞ்சரி** ஆகியனவாகும்.

## கபிலர் அகவல்

இவற்றுள், காலத்தால் முற்பட்டது 'கபிலர் அகவல்'. அதில், **'ஆதி'** என்னும் புலைச்சிக்கும் **'பகவன்'** என்னும் அந்தணனுக்கும் மக்களாகத் தானும் மற்றும் அறுவரும் பிறந்ததாகவும், தன்னுடன் பிறந்தவர்களில் ஔவையாரும் ஒருவரென்றும் அறிவிக்கின்றார் கபிலர். அது வருமாறு :

**அருந்தவ மாமுனி யாம்பக வற்குக்**
**கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி**
**ஆதி வயிற்றினில் அன்றவ தரித்த**
**கான்முளை யாகிய கபிலனும் யானே ;**
**என்னுடன் பிறந்தவர் எத்தனை பேர்எனில்,**
**ஆண்பால் மூவர்; பெண்பால் நால்வர்;**
**யாம்வளர் திறம்சிறிது இயம்புவல் கேண்மின் !**
**ஊற்றுக் காடெனும் ஊர்தனில் தங்கியே,**
**வண்ணார் அகத்தினில் உப்பை வளர்ந்தனன் ;**
**காவிரிப்பூம் பட்டினத்தில் கள்விலைஞர் சேரியில்**
**சான்றார் அகந்தனில் உறுவை வளர்ந்தனன் ;**

நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியில்
பாணர் அகத்தினில் ஔவை வளர்ந்தனள் ;
குறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்
வண்மலைச் சாரலில், வள்ளி வளர்ந்தனள் ;
தொண்டை மண்டலத்தில் வண்தமிழ் மயிலைப்
பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர் :
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதிகன் இலலிடை அதிகமான் வளர்ந்தனன் ;
பாரூர் நீர்நாட்டு ஆரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்."

## திருவள்ளுவர் கதை

'திருவள்ளுவர் கதை'யில் ஔவையார் பிறப்பு பற்றியுள்ள கதையின் சுருக்கம் வருமாறு :

"பாண்டி நாட்டில் தமிழ்ச் சங்கத்திருந்த புலவர்கள், தம் புலமைச் செருக்கால் சிவபெருமானை மதியாதிருந்தனர். அதனைப் பொறுக்க மாட்டாச் சிவன், அப்புலவர்களின் செருக்கை யடக்கும் பொருட்டாக, நான்முகனைத் திருவள்ளுவராகவும், திருமாலை இடைக்காட ராகவும், கலைமகளை ஔவையாராகவும் உலகிற்கு அனுப்பத் திருவுள்ளம் கொண்டனர்.

"குறுமுனிவராகிய அகத்தியர், கடற்கன்னி யொருத்தியை மணந்து, பெருஞ்சாகரன் என்ற மகனைப் பெற்றார். அவன் திருவாரூர்ப் புலைச்சி ஒருத்தியை மணந்து, பகவன் என்பானை மகனாகப் பெற்றான்.

"இஃது இங்ஙனமாக, பிரம்மகுலத்துதித்த தவமுனி என்பவ ரொருவர், அருண் மங்கை என்ற நங்கையை மணந்து, அவளிடமாகப் பெண் மகவு ஒன்றைப் பெற்று, பின் அம்மகவைத் துறந்து, தவஞ்செய்யச் சென்று விட்டார். தவ

முனியால் கைவிடப்பட்ட பெண்மகவை உறையூர்ச் சேரியில் வாழும் பெரும் பறையன் என்பான் எடுத்து வளர்த்து வந்தான்.

"குழந்தை வளர்ந்து வரும் நாளில், எதிர் பாராமல் தோன்றிய மண்மாரியால், உறையூர்ச்சேரி முழுவதும் அழிந்து விட்டது. ஆனால், பெரும் பறையனால் வளர்க்கப்பட்டுவரும் பெண்மகவு மட்டும் எப்படியோ பிழைத்து, மேலூர் அகரத்தில் வாழும் நீதியையன் என்பவனின் வீட்டில் வளர்ந்து வந்தது.

"இந்நிலையில், பல்கலை பயின்று பண்டிதனாகிக் கங்கை நீராடக் காசி செல்லும் பகவன் என்னும் அந்தணன், வழியில் மேலூர் அகரத்தை அடைந்து, அங்கிருந்த சத்திரமொன்றில் தங்கி, தனக்குத் தேவையான உணவிற்கு ஆவன செய்து கொண்டிருந்தபோது, அந்தச் சத்திரத்தின் காவலனான நீதியையனின் வளர்ப்புப் பெண்ணானவள் அவனை அணுக, அவன், "நீ புலைச்சியோ?" எனச் சினந்து கூறி, தன் கையிலிருந்த சட்டுவத்தால் அவள் தலையில் இரத்தம் பீறிட அடித்து அவளைத் துரத்தினான்; பின் காசி சென்றான்.

"காசி சென்ற பகவன், பல ஆண்டுகள் கழிந்தபின் ஊர் திரும்புங்கால், மீண்டும் பழைய சத்திரத்திலே தங்கினான். அப்போது, அழகு வாய்ந்த ஓர் பருவப் பெண் அவனை நெருங்க, அவன் அவளைக் காதலித்து, அவளுடைய தந்தையான நீதியையனின் அனுமதி பெற்று அவளைத் திருமணம் செய்து கொண்டான்.

"திருமணம் நிகழ்ந்த ஐந்தாம் நாளன்று, தன் மனைவி எண்ணெய் தேய்த்து நீராடியபோது, அவள் தலையில் அடிபட்ட வடு இருக்கக்கண்டு,

அவள் வரலாறு கேட்டறிந்து, முன்பு தன்னிடம் சட்டுவத்தால் அடியுண்ட ஆதியளே (பழைய பெண்ணே) என்பதறிந்து, அவளை வெறுத் தொதுக்கி வெளியேறிவிட்டான். 'ஆதியள்' எனப் பகவன் கூறியதால், அன்று முதல் 'ஆதி'என்றே பெயராயிற்று.

''பகவன் ஆதியை வெறுத்தும், அவள் அவனை விடாமல் பின்பற்றலானாள். ஆதி பிடிவாதத்துடன் பின்தொடர்ந்ததால், அவளுடன் கூடி வாழ்க்கை நடத்த நிபந்தனை விதித்தான் பகவன். ஆதிக்குக் குழந்தைகள் பிறந்தால், அவற்றைப் பிறந்த இடத்திலேயே விட்டு, அவனைப் பின்தொடர வேண்டும் என்பது நிபந்தனை. ஆதியும் மனமின்றி வருத்தத்தோடு இசைந்து, பின் சென்றாள். வழியில் பாணர் சேரியில் ஒரு நாள் இரவு ஆதியும் பகவனும் தங்கினர். அங்கே ஆதி ஒருபெண் மகவைப் பெற்றாள். சிவபெருமான் திருவுள்ளப்படி கலைமகளானவள் ஔவையாக அவதரித்தாள்.

''கணவருக்குத் தான் முன்னர் தந்த உறுதி மொழிப்படி குழந்தையை விட்டுப் பிரியத் துணிந்த ஆதி, அக்குழந்தையின் திருமுகம் நோக்கி, அதன் எதிர்காலத்தை நினைந்து கலங்கினாள். அன்னையின் துயர்கண்ட அத்தெய்வீகக் குழந்தை,

'' இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னும்செத்து விட்டானோ ?—முட்டமுட்டப்
பஞ்சமே ஆனாலும், பாரம் அவனுக்கு; அன்னாய் !
நெஞ்சமே அஞ்சாதே நீ''

என்று பாடி, ஆதிக்கு ஆறுதல் கூறியது.

''இப்படியே, ஆதியும் பகவனும் யாத்திரை சென்று கொண்டே, வழியில் ஊருக்கொருவராக உப்பை, அதிகமான், உறுவை, கபிலர், வள்ளி, வள்ளுவர் ஆகிய அறுவரைப் பெற்றனர். அந்த ஆறு குழந்தைகளும் ஔவையாரைப் போன்றே பிறந்த மறுகணத்திலேயே ஒவ்வொரு பாடல் பாடி ஆதியின் மனத்துயர் போக்கின."

## ஞானமிர்தம்

இற்றைக்குச் சுமார் ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட தெனக் கருதப்படும் வாகீச முனிவர் அருளிய 'ஞானமிர்தம்' என்னும் நூலிலும் சிறிது மாறுதலுடன் கபிலர் அகவலில் கூறப்படும் கதை உறுதி செய்யப்படுகிறது.

"கூவற் றூண்டு மாதப் புலைச்சி
காதற் காசனி யாகி மேதினி
இன்னிசை எழுவர்ப் பயந்தோள் ஈண்டே"

என்பது 'ஞானமிர்தம்' தரும் செய்தியாகும். இதற்கு எழுதப்பட்ட பழைய உரை வருமாறு:

"யாளிதத்த முனிவன் (தனக்கு விகிர்தமாய்த்) தன்னாலே வெட்டுண்ட கிணற்றிலே வீழ்த்தப் பட்ட அறிவில்லாத சண்டாளப் பெண்ணை ஓர் பிராமணன் எடுத்துக்கொண்டு போய் உத்தர பூமியிலே வளர்த்து இவனுக்கே பின்னர் கொடுக்க, இவனுக்கு அவள் காதலித்த பார்ப்பனியாய் இந் நிலவுலகின் கண்ணே இனிய கீர்த்தி பெற்ற கபிலர் முதலிய பிள்ளைகள் எழுவரை ஈங்குப் பெற்றாள்."

* 'அபிதான சிந்தாமணி (பக்கம் 302)'யில் தரப்பட்டுள்ள ஒரு பழம் பாடல் வருமாறு:

கபிலர் அதிகமான் கார்க்குறவர் பாவை
முகிலனைய கூந்தல் முறுவை—நிகரிலா
வள்ளுவர் அவ்வை வயலூற்றுக் காட்டிலுப்பை
யெண்ணில் எழுவர் இவர்

## விநோதரச மஞ்சரி

*1876*ஆம் ஆண்டில் **அஷ்டாவதானம் வீராச்சாமி செட்டியார்** என்பவரால் இயற்றி வெளியிடப்பெற்ற ‘விநோதரச மஞ்சரி’ என்னும் நூலில், ஔவையாரின் பிறப்பு வளர்ப்புப் பற்றித் தரப்பட்டுள்ள குறிப்பு வருமாறு :

“தென்னாட்டிலே பாண்டியர்கள் செங்கோல் நடாத்திய மதுரைமா நகரிலே கடைச்சங்க மிருந்த காலத்திலே ஔவையார் என்னும் மாது சிரோமணி, சோழ தேசத்திலே உறையூர் என்னும் பட்டணத்தின் ஒரு சாவடியிலே ஆதி என்பவளுக்கும் பகவன் என்னும் ஓர் அந்தணனுக்கும் சிரேஷ்ட புத்திரியாகப் பிறந்தனர். அப்போது ஆதி பகவன் என்னும் தாய் தந்தையருக்குள் ஏற்பட்டிருந்த உறுதி மொழிப்படி பிறந்த குழந்தையை விட்டு நீங்க மனமெழாது தாம் வருந்திய போது அக்குழந்தை சொல்லிய,

வெண்பா

இட்டமுடனென் தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னும்செத்து விட்டானோ?-முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ

இதுகேட்டுத் தாய் வருத்தம் நீங்கிக் குழந்தையை விட்டேகினள்.பின்பு அடுத்தசேரியிலிருந்த பாணர்கள் அக்குழந்தையை எடுத்து வளர்க்க வளர்ந்து இயல்பாகவே சகல கலைகளையும் அறிந்து தமிழ் நாட்டிலே கல்வியிற் சிறந்த பெண்களுள் முதன்மை பெற்றிருந்தனர்.”

## தண்டபாணி சுவாமிகளும் பாரதியாரும்

தண்டபாணி சுவாமிகள் என்னும் தவயோகியார், தாம் இயற்றிய புலவர் புராணத்துள், ஔவையார் வரலாறு கூறுங்கால்,

பிரமனங் கிசத்தோனை பிராமணப் பகவன்தானும்
கரவிலசீர் ஆதியென்னும் கலைமினங் கிசத்தினளும்
இரவொடு பகலுமோடி வினிதுசேர்ந் திடமொவ்வொன்றிற்
றரவரு மகவோர்ஏழிற் தலைமகள் ஔவைதானே

என்று பாடியுள்ளார்.

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் புலமையுடையவரும் சீர்திருத்தப் புரட்சியாளரும் உள்ளொளி பெற்ற ஆன்ம ஞானியுமான சி. சுப்பிரமணிய பாரதியாரும் ஔவையின் பிறப்புப் பற்றிக் கபிலரகவல் கூறும் கதையை நம்பினர் என அறிகிறோம். "பாரதி நூல்கள்-கட்டுரை"யில் 'பஞ்சமர்' என்னும் தலைப்பிலுள்ள கட்டுரையில் பாரதியார் வெளியிட்டுள்ள கருத்து வருமாறு :

"பகவன் என்ற பிராமணருக்கும் ஆதி என்ற பறைச்சிக்கும் ஔவை, திருவள்ளுவர், கபிலர், அதிகன், உப்பை, உறுவை, வள்ளி என்ற குழந்தைகள் பிறந்து உபய குலத்துக்கும் நீங்காத கீர்த்தி ஏற்படுத்தியதை இக்காலத்திலும் பறையர் மறந்து போகவில்லை.

"சிறிது காலத்துக்கு முன்பு ஒரு கிழச் சாம்பான் என்னிடம் வந்து...பறை யென்பது சத்தியின் பெயரென்றும், அவளே ஆதியென்றும் சிவனே பகவன் என்ற பிராமண ரூபங்கொண்டு அவளுடன் வாழ்ந்தானென்று...பலவித நீதிகளைச் சொன்னான்."

இதுவரை ஔவையாரின் பிறப்பு வளர்ப்புபற்றிக் கபிலரகவல், திருவள்ளுவர்கதை, ஞானமிர்தம், புலவர்

புராணம், அபிதான சிந்தாமணி, பாரதியார் கட்டுரை ஆகிய நூல்களில் தரப்பட்டுள்ள குறிப்புகளை அறிந்தோம்.

இந்த நூல்கள் தரும் செய்திகளில் முரண்பாடு இருத்தலால், அவற்றை நாம் அப்படியே நம்பி விடுவ தற்கில்லை.

கபிலர் அகவல், அருந்தவ மாமுனியால் பகவ னுக்கும் ஆதி என்னும் புலைச்சிக்கும் மகளாகப்பிறந்து பாணர் சேரியில் வளர்ந்தவர் ஔவையார் என்கிறது.

ஞானாமிர்தம், கபிலர் அகவலிலிருந்து சிறிது மாறு பட்டு, ஔவையாரின் தந்தை பெயர் பகவன் என்பதை ஏற்காமல், யாளிதத்தன் என்று கூறுகிறது.

திருவள்ளுவர் கதை, நாமகளே ஔவையாராக அவதரித்தார் என்று புராண ரீதியில் கூறுகின்றது.

புலவர்புராணம், திருவள்ளுவர் சரிதத்தையே பின் பற்றி, கலைமகளின் அவதாரமாக ஔவையாரை அறிமுகப்படுத்துகின்றது.

கி. பி. 1876 ஆம் ஆண்டில் தோன்றிய 'விநோதரச மஞ்சரி' என்னும் நூல், திருவள்ளுவர் சரித்திரத்தை அடியொற்றி, ஔவையாரை ஆதி என்பாள் பெற்ற வுடனே, "இட்டமுடன் என் தலையில்..." என்ற பாட் டைப் பாடி, குழந்தையாகிய ஔவை தன் அன்னைக்கு ஆறுதல் கூறியதாக உரைக்கிறது.

ஔவையாரின் பிறப்பைக் கூறும் நூல்களிலே காலத்தால் முற்பட்டது கபிலர் அகவல் என்றே கொள்ளவேண்டி யிருக்கின்றது. அடுத்தது ஞானா மிர்தமாக இருக்கலாம். இந்த இரண்டையும் பின்பற்றி தங்கள் கற்பனையையும் சிறிது கலந்து ஔவையாரின் பிறப்பு பற்றிக் கூறுகின்றனர் மற்ற நூலாசிரியர்கள்.

## பரிதிமாற் கலைஞர்

புலவர் புராணம், விநோத ரச மஞ்சரி ஆகிய இரண்டும் வரலாற்று நூற்களன்று. இதனை, 'பரிதி மாற் கலைஞர்' என்னும் புனைப்பெயர் கொண்ட **வீ. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும்** நமக்கு அறிவிக் கின்றார்.

> "**திருப்புகழ்ச் சுவாமிகள்**" என்ற முருகதாச சுவாமி யார் இயற்றிய 'புலவர்புராணம்'என்றதோர் நூல் வெளிப்போந்துளது. இந்நூல் முழுதுஞ் செய்யு ளானியன்றுளது. சாமானியப் புலவர் வீடுகளிற் கதையாகச் சொல்லிக்கொள்ளும் விஷயங்களெல் லாம் ஒருவாறு தொகுத்து இந்நூலின்கட் கூறப் பட்டுள. காலவரையறை, நூலாராய்ச்சி முதலி யன இந்நூலின் கண்டிலேம்".

> "சில்லாண்டுகட்கு முன்னர் அஷ்டாவதானி வீராசாமி செட்டியார் என்பார் 'விநோதரச மஞ்சரி' என்பதோர் நூலியற்றி யிருக்கின்றனர். அஃது அதன் பெயர்ப் பொருளின்படி விநோதார்த்தமாக எழுதப்பட்டதோர் கதைத் தொகுதி யெனக் கொள்ளற்பாலதே யன்றித் தமிழ்ப் புலவர்களைப் பற்றியதோர் மெய்ச் சரிதமாகக் கொள்ளப்படுவ தன்று."

'விநோத ரச மஞ்சரி'யின் முதல் பதிப்பில் ஔவையார் வரலாறு இல்லையென்றும் இதன் ஆசிரி யர் காலமான பின்னர் 1891இல் வெளியான இரண் டாம் பதிப்பில் வேறு யாராலோ ஔவையார் வரலாறு எழுதிசேர்க்கப்பட்டுள்ளதென்றும் அனவரத விநாயகம் பிள்ளை தமது 'அவ்வையார்' நூலில் கூறியுள்ளார்.

இதுகாறும் எடுத்துக்காட்டிய சான்றுகளால், ஔவையாரின் பிறப்புப் பற்றிக் கூறும் நூல்களில் கபிலரகவல் ஒன்றே நம் ஆராய்ச்சிக்குரிய தென்பது

புலனுகும். மற்றவை அநேகமாக கபிலரகவலைப் பின் பற்றியே ஔவையாரின் பிறப்புவளர்ப்புபற்றிக் கூறு கின்றமையால் அவற்றில் ஒவ்வொன்றையும் தனித் தனியே ஆராயத் தேவையில்லை. கபிலர் அகவல் ஒன்றை ஆராய்ந்தால் போதும்.

கபிலரகவல் பாடியவர் பற்றிப் புலவர் பெருமக்க ளிடையே கருத்து வேற்றுமையிருந்து வருகின்றது. ஔவையார் காலத்தில் வாழ்ந்த கடைச்சங்கப் புலவர் களிலொருவரான கபிலரேயென்று ஒரு சாராரும், பிற் காலத்தில் யாரோ ஒருவர் பாடி, அது கபிலர் பெயரால் விடப்பட்ட தென்று மற்ெருரு சாராரும் கூறு கின்றனர்.

**பூரணலிங்கம் பிள்ளை**

இந்த நூற்றுண்டில் தோன்றி நம் மத்தி யிலே வாழ்ந்த, இன்னமும் வாழ்கின்ற வேறு புலவர் சிலரும் கபிலர் அகவலை ஔவையார் காலத்தில் வாழ்ந்த கடைச் சங்கக் கபிலர் இயற்றியதாகவே கருதி ஔவையார்பிறப்புப்பற்றி அந்நூல் கூறும்செய்தியை நம்புகின்றனர்.

> "திருக்குறள் செய்த திருவள்ளுவருடைய சகோதரியார்நால்வரில் முதல்வர் ஔவையார். இம் மாதரசியார் அறிவிலும் ஞானத்திலும் முதிர்ந்தவ ராதலால் 'ஔவை' என்ற பதத்திற்கே'முதியவள்' என்ற அர்த்தம் வந்தது போலும். ஔவை போன்று சரஸ்வதி கடாக்ஷம் பெற்று விளங்கிய பெண்ணுயகங்களும் ஔவை யென்றே நாம மிட்டழைக்கப்பட்டனர்.
>
> "திருவள்ளுவர்தம் சகோதரியார் செய்த நூல்கள் எல்லாம் நன்னெறிகளையே குறிக்கும்"

இது, 'ஞானக் குறள்' என்னும் ஔவைப் பெருமாட் டியார் இயற்றிய நூலுக்கு **அரியூர் எஸ். சாமிநாதய்யர்** எழுதிய உரையைப் பாராட்டி திரு. **பூரணலிங்கம் பிள்ளை**

பி. ஏ. அவர்கள் தந்துள்ள முன்னுரையின் பகுதியாகும்.

திரு. பிள்ளையவர்கள், ஆங்கில மொழியிலும் புலமை பெற்று, நவீனகால ஆராய்ச்சிக் கண்கொண்டு கபிலர் அகவலைப் படித்தவராவார். அவர், ஔவையாரை திருவள்ளுவரின் சகோதரியாகக் கொள்வதால் கபிலர் அகவலை நம்புகிறார் என்பது புலனாகின்றது.

**மறைமலையடிகளார்**

ஆராய்ச்சித் துறையிலேயே பெரும் பொழுதைக் கழித்த பேராசிரியரான **மறைமலையடிகளார்** கருத்து வருமாறு :

"இனி, திருவள்ளுவரின் பெற்றோர் யாரென ஆராய்வாம் : எண்ணூறு ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட ஞானாமிர்தம் என்ற நூலில் அவர்கள் பெயர் யாளிதத்தன் என்றும் ஆதியென்றும்குறிக்கப்பட்டுள்ளன. கபிலர் அகவல் என்ற மற்றொரு சிறந்த தமிழ்ச் செய்யுணூலில் அவை பகவன் என்றும் ஆதியென்றும் குறிக்கப்பட்டுள்ளன. இக்கபிலர் சங்ககாலக் கபிலரே யென்பதும், இவர் கூறிய கதையில் பிறழ்ச்சியொன்றுமில்லை யென்பதும் உண்மைகளாகும்."

"கலப்பில்லாத் தூய தமிழில் எழுதப்பட்டுள்ள ஒரு நூலின் தொடக்கத்திலேயே ஆதி பகவன் என்ற இரு வட சொற்களையமைத்திருத்தற்கு ஒரு சிறப்புக் காரணம் இருந்திருத்தல் வேண்டுமென்பது எளிதில் ஊகிக்கப்படும். தம்மை ஈன்றெடுத்த தாய் தந்தையரை ஒழுக்கத்திற் சிறந்த ஆசிரியர் போற்றுவதற்காகவே அவ்விரு சொற்களையும் முதற்கண் வைத்தாரென்று கோடல் மிகையாகாதென்பதே என் கருத்தாகும்"

[திருவள்ளுவர் நினைவு மலர்-**1935**, பக்கம் **117**]

திருவள்ளுவர் பிறப்புப் பற்றி மறைமலையடிகள் ஆராய்ந்து வெளியிட்டுள்ள இக்கருத்து ஔவையாரின் பிறப்புப் பற்றி கபிலர் கூறியுள்ளதை உறுதிப்படுத்துவதாகும்.

நம் தமிழினத்திற் பிறந்த தமிழ்ப் புலவர்களேயன்றி, தமிழ் இலக்கியப் பயிற்சியும் ஆராய்ச்சியுமுடைய பிறமொழியினரும் கபிலரகவல் தரும் செய்தியை நம்புகின்றனர்.

## பிறமொழியினர் கருத்து

தமது வங்கமொழிப் பெயரைத் தமிழில் 'நன்னெறி முருகன்' என மாற்றிக் கொண்ட வங்காளியும் இந்திய மொழி அறிஞருமான சுனீதகுமார் சாட்டர்ஜி என்பார், தாம் இயற்றிய "இந்தியனிஸமும் இந்தியாவின் கூட்டுப் பண்பும்" என்னும் ஆங்கில நூலுள், பக்கம் 102ல், "ஔவையார் திருவள்ளுவரின் சகோதரி" என்று கூறியுள்ளார்.

ரைட் ரெவரெண்ட் ராபர்ட் பி. டி. எல். எல். டி. என்ற ஐரோப்பியர், திருக்குறளைப் பற்றிய தம் கருத்தைத் தெரிவிக்கையில்,

> "பறையரென்று கருதப்பட்டவராயினும் திருவள்ளுவர் தெய்வத்தன்மை வாய்ந்த புலவர் பெருமானாகவே மதிக்கப்பட்டு வந்தார்"

என்று கூறியுள்ளார்.

திருவள்ளுவர் பறைச்சாதியில் பிறந்தவர் என்று முதன் முதலாகக் கூறிய நூல் கபிலர் அகவலாகும். அதனை, அறிவுக்கண்கொண்டு இலக்கியத்தை ஆராயுந்திறனுடைய ஐரோப்பியரான ரைட் ரெவரண்ட் ராபர்ட் அவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பேராசிரியர் விண்டர்னிட்ஸ் என்பார், "புத்தர்களும் சமணர்களும் வைணவர்களும் சைவர்களும் பறையர் வகுப்பைச் சேர்ந்த புலவரான வள்ளுவரைத் தத்தம்

மதத்தைச் சார்ந்தவர் என உரிமை கொண்டாடுகின் றனர்" என்று கூறியிருத்தலால், அவரும் கபிலர் அகவல் கூறும் செய்தியை நம்பியவராகின்றார்.

ந. மு. வே. நாட்டார்

இனி, கபிலர் அகவல் சங்ககாலக் கபிலர் இயற்றிய தல்ல வென்று கூறுவாரின் கருத்துக்களையும் கவனிப் போம்.

> "இது சங்கப் புலவர் பாட்டு என்பதற்கு யாதொரு சான்றும்இல்லை. சான்றோர் பாட்டுடன் சேர்த்து எண்ணத்தகும் நடைப்பெருமை முதலி யன இதன்கட் சிறிதும் இல்லை. சில தொன்னூற் கருத்துக்களையும், தொடர்களையும் ஒரோ வழி அமைத்திருப்பதே இதிற் காணப்படும் அழகாகும். இப்பாட்டிற் கூறப்படும் எழுவர் வரலாறும், முதற் குறளிலுள்ள 'ஆதி பகவன்' என்னுந் தொடரைத் திருவள்ளுவரது தாய் தந்தையரின் பெயரெனத்திரிபுபடக்கருதிக்கொண்ட ஒருவனது சூழ்ச்சித் திறனால் விளைந்த புனைந்துரையே யன்றி வேறல்ல. தன் கொள்கையினை உலகில் வெளிப் படுத்தற்கு ஏற்ற பெற்றியாக இக்கதையினை ஆக்கிக் கொண்டதே அவனது சூழ்ச்சித் திறனா கும்."
>
> "கபிலரது ஊர் பாண்டிய நாட்டுத் திருவாத வூர் என்று பழைய திருவிளையாடல் கூறுவதற்கு மாறாக, சோணாட்டுத் திருவாரூர் என்றும், அதி யனது ஊர் தகடூர் எனப் பழைய நூற்கள் கூறு வதற்கு மாறாக, வஞ்சி என்றும் இவ்வகவல் கூறு வது பிழையாகும். அதியர்குடி என்னும் பழங் குடியிற்றோன்றி, வள்ளலாக விளங்கிய அதிய மான் நெடுமான் அஞ்சியென்னும் சிற்றரசனையும், அவனைப் பல பாட்டுக்களால் புகழ்ந்து பாடிப் பரிசில் பல பெற்றுப் பலவூர்களிலும் திரிந்து

வாழ்நாள் நடத்திய ஔவை என்னும் தொன் முதாட்டியையும் உடன் பிறந்தார் எனக் கூறு தற்கு அறிவுடையோர் எங்ஙனம் ஒருப்படுவர்.''

இது, பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், 'கபிலர்' என்ற தம் நூலில் தெரிவித்துள்ள கருத்தாகும்.

## அனவரத விஞயகஞர்

ஔவையார் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் மிக அண்மைக் காலத்திலேயே வெளிவரலாயின. அவற் றுள் தலையாயது, எஸ். அனவரத விநாயகம் பிள்ளை எழுதிய 'அவ்வையார்'. இந்நூலில், 'கபிலரகவல் கடைச்சங்க காலத்திலிருந்த கபிலர் பாடியதன்று' என்கிருர் ஆசிரி யர்.

> "இவ்வகவல் கபிலர் வாக்கன்று; பிற்காலத் துப் புலவரொருவர் அவர் பெயராற் பாடிவைத்த தென்பதே ஆராய்ச்சி வல்லவர் அபிப்பிராயம்.
>
> "உலகில் வழங்கி வந்த கதைகளை ஆதார மாகக் கொண்டு பிற்காலத்துப் புலவரொருவர் இந்தச் சிறு நூலை இயற்றினர் என்பதே பொருத்த முடைத்தாம்."

(பக். 69—70)

இதுகாறும் ஔவையாரின் பிறப்பு வளர்ப்பைக் கூறும் கபிலரகவல் பற்றிப் புலவர்கள் கொண்டுள்ள மாறுபட்ட கருத்துக்களைக் கண்டோம். இனி, அவற் றில் எது உண்மை என்பதை ஆராய்ந்தறிவோம்.

கபிலரகவல் பெரும்பாலும் திருவள்ளுவருடைய பிறப்பினை அறிய முயன்ற புலவர்களாலேயே ஆராயப் பட்டுள்ளது. அவர்களில் சிலர், கபிலரும் ஔவையும் வாழ்ந்த சங்ககால சமுதாய நிலையை மறந்து, தங்கள் காலத்திலுள்ள சாதிப் பாகுபாடுகளை நினைவில் வைத்தே ஆராய்ந்தனர். அதனால், உலகப் பெருமறை தந்த வள்ளுவர் புலைச்சியின் மகனென்று கபிலரகவல்

கூறுவதை ஏற்பது இழுக்காகுமென்று எண்ணினர். அது காரணமாகவே, கபிலரகவலை பிற்காலத்துப் பாடலாக்க முயன்றுள்ளனர்.

'திருவள்ளுவ மாலை'யுள் மாமூலனார் பாடியதாக வுள்ள ஒரு வெண்பா வருமாறு :

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமிந் நான்கின்
றிறந்தெரிந்து செப்பிய தேவை - மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்

இந்த வெண்பா, பிற்காலத்துப் புலவரொருவரால் பாடப்பட்டு, சங்ககாலப் புலவரான மாமூலனார் பெயரில் உலவவிடப்பட்டதாகும். இவ்வெண்பாவைப் பாடியவர், 'வள்ளுவர்' என்பதற்குப் 'பறையர்' எனப் பொருள் கொண்டு, திருக்குறள் ஆசிரியர் வள்ளுவ சாதியினர் என்று கூறுவோரை, 'பேதையர்' என்று ஏசுகின்றார்.

கபிலரகவலை ஆராய்ந்து கருத்தறிவித்துள்ள தற்காலப் புலவர்களிலும் ஒரு சாரார், வள்ளுவர் புலைச்சிக்குப் பிறந்தவர் என்ற கூற்றை வெறுக்கின்றனர். அதனாலேயே, கபிலரகவல் முழுவதையுமே ஒதுக்க அவர்கள் முயல்கின்றனர்போலும்!

கபிலரகவல், 'புலைச்சி' என்ற சொல்லை இழிந்த பொருளில் குறிப்பிடவில்லை யென்பதை அதனை ஆழ்ந்து படிப்போர் அறிந்து கொள்ள இயலும். அதில் வரும்,

கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும்புலைச்சி
ஆதி வயிற்றின் அன்றவ தரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே

என்ற வரிகளில், புலைச்சியாகிய ஆதியைத் தன் அன்னையென்ற பெருமதிப்புடன் அறிமுகப்படுத்து

கின்ருர் ஆசிரியர். ஆகவே, இழிந்த பொருளுடன் கூறிஞரென்று எண்ணுவதற்கு இடமே இல்லை. கபில ரகவலை சங்ககாலக் கபிலர்தான் பாடிஞர் என்று கொண்டால், அக்காலத்தில் 'புலேச்சி' என்ற சொல் இழிந்த பொருளில் பயன்படுத்தப் பெறவில்லையென் பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

## உரையால் வந்த குறை

கபிலரகவலுக்குப் பின்தோன்றிய 'ஞாஞமிர்தம்' என்ற சித்தாந்த நூலின் உரையாசிரியர், ஆதியை 'அறிவில்லாத சண்டாளப் பெண்' என்று எழுதி வைத்தார். இதனை மனத்தில் கொண்டே, கபிலரக வலில் வரும் 'புலேச்சி' என்ற சொல்லை வெறுத்து அகவல் முழுவதையுமே அங்கீகரிக்க மறுக்கின்றனர் தற்காலப் புலவர்கள்.

'பறையன்'—'புலேயன்' என்ற சாதிப் பெயர்கள், புறநானூற்றில் முறையே 335, 360 ஆம் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அங்கெல்லாம் இழிந்த பொரு ளில் அப்பெயர்கள் பயன்படுத்தப்படவில்லை என்பது புலவர்கள் அறியாததன்று.

> "சங்கத் தமிழிற் கபிலர் வாக்கிற்கும், இதற் கும் பேதம் அஜகஜாந்தர மென்னலாம். 'அவ தரித்த'—'எத்தனைபேர்'—'சான்ருேர்' என்னும் பிரயோகங்களை நோக்குக."
>
> [அவ்வையார் பக்.—69—70]

என்கிருர், அனவரத விநாயகனர். கடைச் சங்க காலத் தில் இயற்றப்பட்ட நூல்கள் அனைத்துமே நமக்குக் கிடைத்து விடவில்லை. மறைந்தொழிந்தவை மலையள வாகும்! ஆகவே, கிடைத்துள்ள பத்துப் பாட்டு—எட்டுத் தொகை ஆகிய நூற்களை மட்டுமே வைத்துக் கொண்டு, சங்ககாலத்தில் பயன்படுத்தப்பெற்ற சொற் களை நாம் வரையறை செய்வதற்கில்லை என்பதை

கருத்தில் கொள்ளவேண்டும். இது, இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் எல்லோரும் நினைவில் கொள்ள வேண்டிய உண்மையுமாகும். ஆகவே, கபிலரகவலிலுள்ள ஒரு சில சொற்கள் சங்ககால இலக்கியங்களில்—குறிப்பாக, கபிலர் செய்யுள்களில் இல்லையென்பதற்காக, அவ்வகவலைப் பிற்காலத்தவர் பாடியதென்று கூறிவிட முடியாது.

கபிலர் அகவலின் செய்யுள் அமைதிபற்றிய கருத்து வேற்றுமை புலமைக்கும் பொது அறிவுக்குமிடையே தோன்றியுள்ளதாக மட்டும் இல்லை. ஆராய்ச்சித் திறனுடைய பெரும் புலவர்களிடையேயும் ஏற்பட்டுள்ளதாகும்.

> "சொற்போக்கு, பொருள் வளம், நடை முதலியவற்றை ஒப்பிடுவோர்க்கு இவ்வகவல் சங்ககாலத்ததே என்பது புலனாகும்."

[திருவள்ளுவர் நினைவு மலர், 1935]

என்று மறைமலை யடிகளார் கூறியுள்ளதால் அறியலாம்.

கருத்து வேற்றுமைக்குரியதாகிவிட்ட கபிலரகவல், தனக்கு உபநயனச்சடங்கு தடைப்பட்ட பொழுது கபிலர் பாடப்பட்டதென்று ஒரு கதையுண்டு. அந்தக் கதைக்கு அவ்வகவலில் சான்றில்லை.

138 வரிகளுள்ள அவ்வகவலில், 55ஆவது வரி, "பார்ப்பன மாந்தர்காள்! பகர்வது கேண்மின் !" என்று, பார்ப்பனரைப் பார்த்துப் பேசுவதாக உள்ளது. இதனை வைத்துக் கொண்டு, அகவல் முழுவதுமே பார்ப்பனர்க்கு செய்யப்பட்ட உபதேசமாகக் கொள்ளப்படுகிறது. இதுவும் பிழையான கருத்தாகும். 55ஆவது வரிக்கு முன்புள்ள 15ஆவது வரியிலே, "உலகத்தீரே ! உலகத்தீரே !" என்று உலகத்தோர் எல்லோரையும்

கூவியழைத்து, யாக்கை நிலையாமையைப் போதிக்கின்றது கபிலரகவல்

கபிலருக்கு அவருடைய பெற்றோர் பூணூலணிவிக்கும் சடங்கு நிகழ்த்த முற்பட்டபோது, அவரது பிறப்பிற்கு இழிதன்மை கற்பித்து, வைதிக அந்தணர் அச்சடங்கு நிகழ்வதை எதிர்த்ததாகவும், அவ்வமயம் கபிலரகவல் பாடப்பட்டதாகவும் ஒரு கதை சொல்லப் படுகிறது. இந்தக் கதைக்குக் கபிலரகவலில் சான்றில்லை.

அறிவுக்குப் புறம்பானவற்றை அறவே ஒதுக்கி, அறிவின் துணைகொண்டு ஆராயும் திறனுடைய மேனுட்டறிஞர்களும் கபிலரகவல் கூறும் 'கதையை' உண்மையென்று நம்புகின்றனர்கள்.

1885ல் திருக்குறளை ஆங்கிலச் செய்யுள் வடிவமாக்கிப் பதிப்பித்தளித்த ஈ. ஜே. ராபின்சன் என்பார், தம் நூலுக்குத் 'தெய்வப் பறையன் (The Divine Pariah)' என்று பெயரிட்டுள்ளார். இதனால், அவர் கபிலரகவல் 'கதை'யை நம்பினரென்பது புலனாகின்றது.

ரைட் ரெவரண்டு ராபர்ட் கால்டுவெல் டி. டி., எல். எல். டி., பேராசிரியர் வின்டர்னிஸ்ட் ஆகிய இருவரும் கபிலரகவல் 'கதை'யை நம்பி வள்ளுவர் பற்றித் தெரிவித்த கருத்துக்களை ஏற்கெனவே கூறியுள்ளோம்.

'தமிழ்ப் புலவர் குலம்' என்ற நூலின் ஆசிரியர் **திரு. ஜே. ஆர். ஆர்னல்டு** (Mr. J. R. Arnold, Author of Calaxy of Tamil Pocts) என்பாரும் கபிலர் அகவல் 'கதை'யை அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளார்.

**இவர்கள் சாதி உயர்வு தாழ்வுகளை நெஞ்சாலும் நினை**யாதவர்களாதலால், கபிலரகவல் தரும் செய்தியில் களங்கம் காணுதவராயினர். மற்று, 'கபிலரகவல்' மீது பிற்காலத்தவரால் சுமத்தப்பட்ட கற்பனைக் கதைகளையெல்

லாம் ஒதுக்கி, அவ்வகவல் ஒன்றை மட்டுமே ஆழ்ந்து படித்து ஆராய்ந்தவராதல் வேண்டும்.

நம்மிடம் நிலவும் எத்தனையோ மூடநம்பிக்கைகளை அலசி—ஆராய்ந்து எடுத்துக்காட்டி, இடித்துக் கூறி நம்மைத் திருத்தியவர்களெனக் கருதப்படும் ஐரோப்பிய அறிஞர்கள், ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின் கபிலரகவல் கூறும் செய்திகளை அப்படியே ஏற்றுக் கொண்டிருப்பது நம்மால் எளிதில் புறக்கணிக்க முடியாததாகும்.

கபிலரகவல், வருணப் பாகுபாட்டினை ஏற்க மறுத்து, அதனை எதிர்த்துப் போராடுகின்றது. அது காரணமாகவும், அவ்வகவல்பால் காழ்ப்புக் கொண்டு, 'ஆராய்ச்சி' என்னும் பெயரால், அதனைப் புறக்கணிக்க முயன்றனர், புலவர்களுள் சிலர்.

## வருணாசிரமம்

கபிலரும் ஔவையாரும் வாழ்ந்த சங்க காலத்தில், நால்வருணப் பாகுபாடு இருந்ததாயினும், அவற்றுள் பிறப்புவழி ஏற்றத்தாழ்வு இருக்கவில்லை யாதலால், கபிலரகவலின் வருணாசிரம எதிர்ப்பு, சங்ககாலச் சமுதாயத்தை எதிரொலிப்பதாகாது என்கின்றனர் சிலர். இதுவும் ஏற்கத்தக்கதாக இல்லை.

புறநானூற்றில், "வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவனும் அவன்கட் படுமே!" என்று பாடுகின்றான் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். திருக்குறளிலும்,

> **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்.**

என்ற குறட்பா, பிறப்பு வழிப்பட்ட பாகுபாட்டை ஏற்க மறுத்துச் சமத்துவத்தைப் போதிக்கின்றது. இவற்

ருல், சங்க காலத்திலும் ஓரளவேனும் பிறப்புவழி ஏற்றத் தாழ்வுடைய வருணப் பாகுபாடு இருந்ததென்பதும், அதனை எதிர்த்துப் பாடிய புலவர்களும் இருந்தனரென்பதும் புலனுகின்றன.

கபிலரகவல், மேற்காட்டிய புறநானூற்றுச் செய்யுளையும் குறட்பாவையும்விடப் பிரசார பாணியில் புரட்சிக் கீதமாகப் பாடப்பட்டுள்ளது. அதனுலேயே, புலவர்களுக்கெனப் பாடிய சங்கப் பாடல்களைப்போல் அல்லாமல், பொதுமக்களைப் பார்த்துப் பாடிய அகவற்பாவைச் சற்று எளியநடையில் கபிலர் பாடினுரென்று கொள்ளலாம். இதில் பிழையில்லை.

இனி, அகவலில் வரும் கருத்துக்கள் பற்றிச் சொல்லப்படும் குறைகளை ஆராய்வோம்.

> "கபிலரது ஊர் பாண்டி நாட்டுத் திருவாதவூர் என்று பழைய திருவிளையாடல் கூறுவதற்கு மாருக, சோணுட்டுத் திருவாரூர் என்று இவ்வகவல் கூறுவது பிழையாகும்."
>
> ['கபிலர்', பக். 16]

என்கிருர், ந. மு. வே. நாட்டார். இதற்கு மாருக,

> "கபிலரது ஊர், முற்கால நூலாகிய கபிலரகவலில் சோழ நாட்டுத் திருவாரூர் என்று கூறுவதற்கு மாருக, பாண்டி நாட்டுத் திருவாதவூர் என்று பிற்கால நூலாகிய பழைய திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ளது பிழையாகும்."

என்றும் சொல்லலாமல்லவா !

மன்னன் அதியமானை ஔவையாரின் உடன் பிறந்தாரக் கூறுவதை மறுக்குமிடத்து,

"அதியர் குடியென்னும் பழங்குடியிற்றோன்றி, வள்ளலாக விளங்கிய அதியமான் நெடுமான் அஞ்சியென்னும் சிற்றரசனையும், அவனைப் பல பாடல்களால் புகழ்ந்து பாடிப் பரிசில் பல பெற்றுப் பல ஊர்களிலும் திரிந்து வாழ்நாள் நடத்திய ஔவை யென்னும் தொன்முதாட்டியையும் உடன் பிறந் தார் எனக் கூறுதற்கு அறிவுடையோர் எங்ஙனம் ஒருப்படுவர்"

['கபிலர்', பக். 61—62]

என்கிறார், பெரும்புலவர் ந. மு. வே. நாட்டார். ஆம்; நாடோடியாகத் திரிந்து, பரிசில் பெற்று வாழ்ந்த ஔவையாரை, நாடாண்ட மன்னன் அதியனின் உடன் பிறந்தவராகக் கொள்ள அவரது மனம் விரும்ப வில்லை.

அவரது கருத்தை ஏற்றால், அதியமானுக்கும் தொண்டைமானுக்கு மிடையே அரசியல் ரீதியில் ஔவை தூது சென்றதாகச் சொல்லப்படுவதும் அறி வுடையோர் ஏற்க இயலாததுதான். கபிலரகவலில் வெளிப்படும் உயிர்த் துடிப்பும் உணர்ச்சிப் பெருக்கும், அதனை, பிற்காலப் புலவர்களுள் யாரோ ஒருவர் பாடி, அவரே கபிலர் பெயரால் நடமாடவிட்டார் என்ற கதையை நம்ப முடியாதபடி செய்கின்றன. கபிலரக வலின் நடை, சொல்லழகு, பொருட் செறிவு ஆகியவற் றைப் பார்த்தால், பெரும் புலமையும் உள்ளொளியும் உண்மைத் தன்மையும் உடைய முதியவர் ஒருவர்தாம் அதனைப் பாடியிருக்க முடியும் என்னும் முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. அவர், அவ்வகவற்பாவே கூறு வது போன்று, சங்ககாலக் கபிலரே என்றும் கொள்ள வேண்டியிருக்கிறது. உபநயனம் தடைப்பட்டபோது, அந்தச் சடங்கிற்குரிய சிறுபிள்ளை பாடியதாகச் சொல்

லப்படும் செவிவழிச் செய்தி முற்றிலும் பொய்க்கதை யாகும்.

முதுமையுற்ற நிலையில் பாடியதாற்ருன், ஊருக்கு ஒருவர் தோன்றி, அங்கங்கே தங்கி வளர்ந்த தம் உடன்பிறந்தார்களை நன்கு அறிந்து, தமது அகவற் பாவில் அவர்களைக் குறிப்பிடக் கபிலருக்கு வாய்ப்புக் கிடைத்தது.

கபிலரகவல் சங்ககாலக் கபிலர் பாடியதன்று என்ற கருத்து, இறுதி முடிவாகவன்றி, வெறும் ஐயப் பாடாகவே எழுந்துள்ளது. அந்த ஐயத்தைப் பொய் யாக்கும் சான்றுகளை ஏற்கெனவே எடுத்துக் காட்டிவிட் டோம். இரண்டையும் சீர் தூக்கிப் பார்ப்போர், கபிலர் அகவல், சங்க காலக் கபிலர் அல்லாத பிற்காலப் புலவர் ஒருவரால் பாடப்பட்டது என்ற கருத்தை முடிந்த முடிவாக ஏற்க மாட்டார் என்பது உறுதி.

## ஆதிபகவன் மகளே !

கபிலர் அகவலைப் பொய்யாக்கி விட்டால், அப் புறம், ஔவையாரின் பிறப்பையறிய வேறு சாதனம் இல்லையென்பதையும் மறத்தல் கூடாது. ஐயத்தை மெய்யாக்கிக் கொண்டு, கிடைத்துள்ள செய்தியையும் இழந்துவிடுவது, இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரி வது ஆகாது. கபிலரகவல் கடைச்சங்க காலக் கபில ருடையதன்று என்பதற்குப் புதிதாகச் சான்று கிடைக்கு மேல் ஏற்கலாம். அதுவரை பரிதிமாற் கலைஞர், மறை மலையடிகள் ஆகிய பெரும் புலவர்களின் முடிவை ஏற் பதில் பிழையில்லை யென்றே கருதுகின்ருேம்.

இந்த முடிவிற்கேற்ப, ஔவையார் கி. மு. முதல் நூற்ருண்டில், 'ஆதி' என்னும் தாய்க்கும் 'பகவன்' என் னும் தந்தைக்கும் பிறந்தவர் என்றும், பாணர் இல்லத் தில் வளர்ந்தவர் என்றும் கொள்வோமாக!

# வாழ்க்கைக் குறிப்புகள்

ஔவையாரின் பிறப்பு—வளர்ப்புப் பற்றியேயன்றி, அவருடைய வாழ்க்கை வரலாறுபற்றி வழங்கப்பட்டுவரும் கதைகளும் பலவாகும். அவர் வளர்ந்து மங்கைப் பருவம் அடைந்ததும், முற்பிறப்பில் செய்த தவ வலிமையால், திருமணத்தை வெறுத்து, சிவபக்தி மிகுதியால் யோகியாய்க் காலங் கழித்து, பின்னர் முத்தியடைந்தார் என்றொரு கதை வழங்குகின்றது.

முருகதாசர் எனப்படும் தண்டபாணி சுவாமிகள், தாம் இயற்றிய புலவர் புராணத்துள், "காரைக்காலம்மையார் பேயுருவைச் சிவனிடத்தில் வேண்டிப் பெற்றதுபோல, ஔவையும் அதே தெய்வத்தை வேண்டி இளமையிலேயே முதுமை பெற்றதனால், கிழவி என்று உலகத்தாரால் அழைக்கப்பட்டாள்" என்று கூறியுள்ளார்.

சங்க இலக்கியமான புறநானூற்றிலுள்ள பாடல்கள் சிலவற்றுள் அவருடைய வாழ்க்கை பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன. அவற்றை நம்புதற்குரிய வரலாற்றுக் குறிப்புகளாகக் கொள்ளலாம்.

ஔவையார், பாணர் இல்லத்தில் வளர்ந்தார் என்பதும், இளமைப் பருவத்தில் ஆடல், பாடல்களில் வல்லவராய்த் திகழ்ந்தார் என்பதும்,

> **இழையணிப் பொலிந்த ஏந்துகோட் டல்குல்**
> **மடவரல் உண்கண் வாள்நுதல் விறலி !"**

என்று அரசன் ஒருவன் தன்னை அழைத்ததாக அவரே பாடியுள்ளதால் அறிகிறோம்.

தகடூரை ஆண்ட அதியமானுக்கும், அவன் மறைந்த பின் அவனுடைய மகன் பொகுட்டெழினிக்கும் அரசியல்

ஆலோசகராகவும் அரசவைப் புலவராகவும் இருந்தார் ஔவையார்.

தகடூர் மன்னன் அதியமான், தன் உடன்பிறந்தவரான ஔவையாரிடம் எல்லையற்ற அன்பும், அவரது தெய்விகப் புலமை காரணமாக அவரிடம் ஆழ்ந்த பக்தியும் கொண்டிருந்தான்.

**நெல்லிக் கனி**

ஒருநாள், மலையுச்சியில் அடர்ந்த காட்டிலிருந்து அரும்பாடுபட்டு, தான் கொண்டு வந்த கருநெல்லிக் கனியொன்றை ஔவைக்கு ஈந்தான் அதியன். அக் கனி, தன்னை யுண்டாரை நெடுங்காலம் வாழவைக்கும் தெய்விக ஆற்றல் படைத்ததாகும். ஆனால், இந்த உண்மையை கனியை உண்டபின்னரே ஔவையிடம் கூறினான் அதியன்.

தரணியாளும் மன்னனாகிய தன்னைவிடத் தமிழ் வளர்க்கும் கவியரசியான ஔவையார் நெடுங்காலம் வாழ்வதையே விரும்பிய அதியமானின் தியாக உணர்வை வியந்து, "நஞ்சை யுண்டும் சாகாத நீலகண்டப் பெருமான்போல நீ நிலவுலகில் நெடுங்காலம் வாழ்வாயாக" என்ற பொருள்பட,

**"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**
**நீல மணிமிடற்று ஒருவன் போல**
**மன்னுக பெரும நீயே !"** —புறம். 91.

என்று, மனங்குளிர வாழ்த்தினார்.

அதியன் தந்த நெல்லிக்கனியை உண்டு மரண மொழித்ததால், ஔவையார் பல நூற்றாண்டுகள் வாழ்ந்து, ஆத்திசூடி - கொன்றைவேந்தன் - மூதுரை - நல்வழி ஆகிய நீதி நூல்களையும் ஞானக்குறள், விநாயக ரகவல், வேழமுகம் ஆகிய சமய நூல்களையும் இயற்றி யருளிப் பின்னர்க் கயிலாயஞ் சென்றாரென்றும் ஒரு

கதை கூறப்படுகின்றது. இதுபற்றி உரிய இடத்தில் விரிவாக ஆராய்வோம்.

நம் தமிழ் மூதாட்டியார், அதியனின் அரசவைப் புலவராக இருந்ததோடல்லாமல், அவன் மாற்றுரைத் தோற்கடிக்கக் களம் புகுந்தபோதெல்லாம் போர்க்களப் புலவராகவும் இருந்து, அவனது ஆற்றலே, அவனை எதிர்க்கத் துணிந்த மன்னர்களுக்கு எடுத்துரைத்து, இராஜதந்திர முறையில் போரைத் தவிர்க்க முயன்றிருக் கிறார். போரைத் தவிர்க்க இயலாதபோது, தற்காப்புக் காகப் போரிடும்படி அதியமானை ஊக்கி உற்சாகப் படுத்தி யிருக்கிறார்.

உலகில் போர் ஒழிந்து சமாதானம் நிலவவேண்டு மென்பதில் ஔவையார் அளவற்ற ஆர்வங்கொண்டிருந் தார். ஒரு சமயம் ஔவையின் பெருமதிப்புக் குரிய அதியனுக்கும் தொண்டைமானுக்கு மிடையே போர் மூள இருந்தபோது அதனைத் தவிர்க்க அதியன் சார் பாகத் தொண்டைமானிடம் அரசியல் மதிபடைத்த ஔவையார் தூது சென்றார்.

தமிழ் மூவேந்தர்கள் அடிக்கடித் தங்களுக்குள் போர் புரிவது கண்டு ஔவையார் மனம் வருந்தினராதலால், அம் மூவேந்தர்களை ஒருங்கு காண நேர்ந்தபோதெல்லாம் மகிழ்ந்து, "இன்றுபோல் என்றும் ஒற்றுமையுடன் இருப்பீர்களாக!" என்று அவர் வாழ்த்துவார்.

ஒரு சமயம், சேரமான் மாரி வெண்கோவும், பாண் டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங் கிருக்கக் கண்டு உள்ளம் பூரித்தவராகி, "நீங்கள் வாழும் காலம் வளர்வதாக! (புறம் 367,)" என வாழ்த்தினர் ஔவையார்.

ஔவையார் இயற்றியவை யென்று நம்பப்படு கின்ற தனிப்பாடல்கள் சிலவற்றிலும் அம்மூதாட்டியின் வாழ்க்கை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இத் தனிப்பாடல்களின் சொற்களையும் நடையையும் ஆராய்ந்தால், அவற்றுள் பல பாடல்கள் சங்க இலக் கியங்களிலுள்ள ஔவையார் பாடல்களுக்கு ஒத்தவை யாக இல்லை. ஆயினும், பாடல்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் சங்க காலத்தோடு தொடர்புடையவை யாகும். ஆகவே, தனிப்பாடல்களை ஔவையாருடை யவை யல்லவென்று அவ்வளவு எளிதில் புறக்கணித்து விடுவதற்கில்லை.

## குழவியும் கவிபாடுமோ ?

ஔவையார் பெயரிலுள்ள தனிப்பாடல்களுள் அவர் பிறந்தபோது, அவரை விட்டுப் பிரிய மன மின்றி வருந்திய அன்னைக்கு ஆறுதல் கூறி அவர் பாடியதாகச் சொல்லப்படும் வெண்பா ஔவையா ருடையதெனக் கொள்வதற்கில்லை.

குழந்தை ஔவை, தான் பிறந்தபோதே சீர் சிதரு மல், தளை தட்டாமல், மோனை முறியாமல், எதுகையிட ராமல் கருத்துச் செறிவுடைய வெண்பாவொன்றைப் பாடி, அன்னைக்கு அறிவுரை கூறியது என்பது நம்ப முடியாத கதையாகும். ஆகவே, மேலேயுள்ள வெண் பாவை, பிற்காலப் புலவர் ஒருவர் பாடி ஔவையின் பெயரால் நடமாட விட்டிருக்க வேண்டும்.

வள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்குச் சங்கப் புல வர்களுள் ஒருவரான 'இடைக்காடர்' என்பார்,

**கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்**

என்று புகழுரை வழங்கக்கேட்ட ஔவையார், அதனி னும் சிறப்புடைய மதிப்புரை வழங்க விரும்பியவராகி,

**அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்**

என்று பாடினாராம்.

அதியமானின் அரசவைப் புலவராக இருந்த ஔவையார் கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரி வேந்தனுடனும் நட்புக்கொண்டிருந்தார். பாரியையும் அவனது பறம்புமலை(தற்போது பிரான்மலை)யையும் பாடியுள்ளார். அப்பாடலில் மூவேந்தரும் பாரியின் பறம்பினை முற்றுகையிட்டிருந்த பொழுது கிளியினை விடுத்துப் புறத்திருந்த நெற்கதிர்களைப் பெற்றுப் பாரி உயிர் வாழ்ந்ததாகக் கூறியுள்ளார்.

தமிழ் மூவேந்தரால் வள்ளல் பாரி கொல்லப்பட்ட பின்னர் அவன் மகளிரான அங்கவை சங்கவை என்ற இரு செல்வியரையும் தெய்விகன் என்னும் மன்னனுக்கு ஔவையாரே முன்னின்று மணம் செய்துவைத்தார் என்று கதை வழங்குகின்றது.

இதற்கு மாருக, பாரியின் இளைய மகள் சங்கவைக்குக் கபிலர் மணம் முடித்தாரென்றும், மூத்தமகள் அங்கவைக்கே ஔவையார் மணம் முடித்தாரென்றும் ஒரு செய்தி உண்டு. இதற்கு ராஜராஜ சோழன் காலத்துத் திருக்கோவலூர்க் கோயிலில் பொறிக்கப்பட்ட சாஸனம் சான்று காட்டப்படுகின்றது

# தூது சென்ற பெருமாட்டி!

சங்க இலக்கியங்கள், **பத்துப் பாட்டு—எட்டுத் தொகை** என்னும் பெயர்களில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றி லுள்ள பாடல்களின் மொத்த எண்ணிக்கை 2381. பாடிய புலவர்களின் எண்ணிக்கை 473. இவர்களுள் பெண்பாற் புலவர் முப்பதின்மர் ஆவர்.

ஆண்பாற் புலவர்களுள் அதிகமான பாடல்களைப் பாடியவர் கபிலராவர். அவருடைய பாடல்களின் மொத்த எண்ணிக்கை 235. பெண்பாற் புலவர்களுள் அதிகமான பாடல்கள் பாடியவர் ஔவையாரே. பெண் பாற் புலவர் முப்பதின்மரும் பாடிய பாடல்களின் மொத்த எண்ணிக்கை 156. அவற்றுள், ஔவையார் பாடியவை 59. பெண்பாற் புலவர்களுள் பெரும் பாலோர் இல்வாழ்க்கை பற்றிய அகத்துறைப் பாடல்களையே அதிகம் பாடியுள்ளனர். போரையும் வீரத்தையும் தன்னுட்கொண்ட புறப்பொருள் துறை யைப் பாடியவர் மிகச் சிலராகவே இருக்கின்றனர்.

புறநானூற்றில், **மாரோக்கத்து நப்பசலையார்** ஏழு பாடல்களும்; **நக்கண்ணையார்** மூன்று பாடல்களும், **மாற் பித்தியார், காமக் கண்ணியார்** இருவரும் தலைக்கு இரண்டு பாடல்களும் பாடியுள்ளனர். மற்ற ஒன்ப தின்மர் தலைக்கு ஒரு பாடல் வீதமே பாடியுள்ளனர் ஆனால், தமிழினத்தின் வீரமே பெண் வடிவில் வந்த தென வாழ்ந்த ஔவையார் ஒருவர்மட்டும் 33 பாடல் களைப் பாடியுள்ளார். அவற்றுள், வேலொழுகும் போர்க்களத்திலே நின்று பாடிய வீரப் பாடல்கள் பலவாகும்.

எட்டுத்தொகை நூற்களான நற்றிணையில் 7 பாடல் களும், குறுந்தொகையில் 15 பாடல்களும், புறநானூற்

றில் 33 பாடல்களுமாக மொத்தம் 59 பாடல்களை ஔவை யார் பாடியுள்ளார்.

ஔவையார், ஒரு ஆடவனைத் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருந்ததாகச் செய்தி இல்லை. இதற்கு மாறாக, இல்வாழ்க்கையை வெறுத்து, அருட்பணியிலே ஈடுபட ஆர்வங்கொண்டு, இறைவனை வேண்டி இளமையிலேயே முதுமை பெற்றார் என்பதாக நாட்டில் வழங்கிவரும் ஒரு கதையையும் ஏற்கெனவே அறிந்தோம். ஆனால், ஒருத்தனும் ஒருத்தியுமாகக் கூடி நன்மக்களைப் பெற்று மாட்சியுடன் நடத்தும் மனை வாழ்க்கை பற்றிய அகப்பொருட் பாடல்களை மிகுந்த உணர்ச்சியோடும் கவர்ச்சியோடும் பாடியுள்ளார் ஔவைப் பெருமாட்டியார்.

பேரறிவு படைத்த ஔவையார், பேரரசர்களாலும் தீர்த்துவைக்க இயலாத பெரும் பிரச்சினைகளை வெகு எளிதிலே தீர்த்து வைப்பதிலே வல்லவர் எனத் திகழ்ந் தார்.

## ஆடவரா, ஆள்பவரா ?

நாட்டுப் பற்றுடையோர் தத்தம் நாடே சிறந்த தென வழக்காடுவது வழக்கம். நாட்டுப் பற்று நல்ல தாயினும், அதுவும் தடிப்பேறிவிட்டால் அனர்த்தமே விளையும். ஆகவே, பிறந்த நாடு என்னும் பற்று காரணமாகத் தனது நாடே சிறந்ததெனக் கருதும் தாய் நாட்டுப் பற்றுக்கு ஒரு விளக்கம் தருகின்றார் ஔவை யார். நல்லவர்கள் வாழ்வதும், நல்லவர்களால் ஆளப் படுவதும்தான் சிறந்த நாடு என்பது ஔவையார் கொள்கை. இதனை,

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**

**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே**

என்னும் பாடலில் வலியுறுத்துகின்றார்

இப்பாடலுக்குப் பழைய உரைகாரர் தந்துள்ள பொருள் வருமாறு :

"நிலனே ! நீ ஒன்றில் நாடேயாக; ஒன்றிற் காடேயாக; ஒன்றிற் பள்ளமேயாக; ஒன்றின் மேடேயாக; எவ்வாறாயினும் எவ்விடத்து நல்லர் ஆண் மக்கள் அவ்விடத்து நீயும் நல்லை யல்லது, நினக்கென ஒரு நலமுடையை யல்லை, வாழி !''

இப்பாடலில் வரும் 'ஆடவர்' என்னும் சொல், 'ஆள் பவர்' என்று திருத்தப்பட்டால், இன்னும் சிறந்த பொருளைப் பெறுகின்றோம். 'ஆள்பவர்' எனவே ஔவையாரால் இயற்றப்பட்டு, ஏடு பெயர்த்தோரால் 'ஆடவர்' எனப் பிழையாக எழுதப்பட்டிருக்கலாம் என்று எண்ணவும் தோன்றுகின்றது.

## அதியனைப் போற்றிய வாயால்...

ஔவையார், மன்னன் அதியமானின் அரசவைப் புலவராக இருந்தார் என்பதனை முன்னமே அறிந்தோம். அரசர்களைப் புகழ்ந்து பாடுவது புலவர்களின் மரபு. அந்த வகையில் ஔவைப் பெருமாட்டியாரும் தம்மை ஆதரித்த மன்னன் அதியமானை வாழ்த்தியும், அவனது மாவீரத்தைப் போற்றியும், கொடைக்குணத்தைப் புகழ்ந்தும் இருபதுக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். அதியன் வாழ்வு முடிந்தபின் அவனுடைய வீர மைந்தன் **பொகுட்டெழினி** என்பானுக்கும் அறிவுரை கூறுவோராக இருந்து, அவனிடம் தாம் கண்ட சிறந்த குணங்களையும் புகழ்ந்து பாடியுள்ளார்.

இவ்விருவரைத் தவிர, வேறு மன்னர் எவருடைய தோளாற்றலையும், வாளாற்றலையும் ஔவையார் புகழ்ந் தாரல்லர். அதியனையும் அவன் மைந்தன் எழினியை யும் தவிர வேறு மன்னரின் ஆற்றலைப் போற்றிப் புக ழாத வழக்கத்தை ஓர் ஒழுக்கமாகவே அவர் கொண்டிருந் தார் என்று கருத வேண்டி யிருக்கின்றது.

ஒரு சமயம், சேர—சோழ—பாண்டியர் மூவரும் ஒருங்கிருக்கக் கண்டபோது, அவர்தம் நட்புணர்ச்சியைப் பாராட்டி, அம்மூவரையும் ஒருசேர வாழ்த்தினர் ஔவை யார். அப்போதும், அம்மூவரின் வீரத்தையோ, வெற்றி வரலாற்றையோ புகழ்ந்தாரல்லர்; அந்தப் புகழ்ச்சியை அதியனுக்கும் அவன் மைந்தனுக்குமே உரிமையாக்கி யிருந்தார் போலும். ஆம், பொருள் கொடுத்த மன் னரை யெல்லாம் போற்றுகின்ற வழக்கம் ஔவையா ரிடம் இருக்கவில்லை.

## கிழவியின் தூது!

பாரத நாட்டின் இதிகாசங்களிலும் வரலாற்றிலும் பல தூதுச் செய்திகளைப் படிக்கிறோம். இராமாயணத் திலே, இராமனுடைய தூதுவனாக இலங்கைக்குச் சென்றான் **அனுமன்**. அவன் ஒரு தூதுவனுக்குரிய நெறிமுறைகளைக் கடைப்பிடித்தான் என்று சொல் வதற்கில்லை. பாரதத்திலே, பாண்டவர் சார்பில் துரி யோதனனிடம் தூது சென்றான் **கண்ணபெருமான்**. அந் தத் தூது வெற்றி பெறவில்லை. தூது சென்ற கண்ண னுக்கே வெற்றியில் விருப்பம் இல்லை. இருபெரும் இதி காசங்கள் கூறும் இந்தத் தூதுச் செய்திகளுக்கு மாறான ஒரு தூதைத் தமிழ் இலக்கியமான புறநானூற்றிலே பார்க்கிறோம்.

தொண்டைமானுக்கும் ஔவையை ஆதரித்த அதிய மானுக்கும் இடையே போர் மூள இருந்த தருணத்தில்,

அதியமான் சார்பில் தொண்டைமானிடம் தூது சென்ருர் ஔவைப் பெருமாட்டியார். இரு மன்னர்களிடையே பெண்பாற் புலவர் ஒருவர் தூது சென்ற நிகழ்ச்சி உலக மொழிகளிலுள்ள இலக்கியம் எதிலும் காண இயலாத புதுமையாகும். பருவத்தால் முதிர்ந்து 'பாட்டி' என அழைக்கப்பட்ட பெருமாட்டியார், அதியமானின் தலைநகரான தருமபுரியிலிருந்து, அவனுடைய பகைவனை தொண்டைமானின் தலைநகரான காஞ்சிக்குக் கால்கடுக்க நடந்து தூது சென்ருரென்ருல், அவரது மனத்திட்பத்தையும் சமாதான ஆர்வத்தையும் என்னென்றுரைப்பது! ஔவையார் தூது சென்ற நிகழ்ச்சி புராணக் கற்பனையன்று; உண்மையில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்தியாகும்.

ஆண்மகனுன கண்ணபெருமான் திருவடி நோவ நடந்து தூது சென்ற நிகழ்ச்சியைப் புகழ்ந்துரைக்கும் இளங்கோவடிகள்,

**திரண்டமரர் தொழுதேத்துந் திருமால்நின் செங்கமல**
**இரண்டடியான் மூவுலகும் இருள்தீர நடந்தனையே**
**நடந்தஅடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தஅடி**
**மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே**

**மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனுர் வஞ்சம்**
**கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்**
**படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது**
**நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே**
**நாராய ணுவென்ணு நாவென்ன நாவே!**

என்றெல்லாம் மனங்கனிந்து பாடுகின்ருர். ஔவைப் பெருமாட்டியும் இத்தகைய புகழ்ச்சிக்கு உரியவரே. "அதியற்குத் தூது நடந்தாளை ஏத்தாத நாவென்ன நாவே" என்று பாவலர்கள் ஔவையாரின் தூதைப் புகழ்ந்து பாடும் நாள் எந்நாளோ?

## ராஜதந்திரப் பேச்சு

அதியன் சார்பில் தூது சென்ற ஔவையார், தொண்டைமானைக் கெஞ்சவில்லை சமரசத்திற்கு. 'சமாதானம்' என்பது பகைவனிடம் கெஞ்சிப் பெறும் பரிசுப் பொருளன்று. பகைவனுக்குப் பண்புரைத்து, அது பலிக்காத விடத்துப் பயமுறுத்தியும் பெறக்கூடிய ஒன்றாகும்.

தொண்டைமானைச் சந்தித்துப் பேசிய ஔவையார், அவனால் காட்டப்பட்ட அவனுடைய ஆயுதங்களைக் கண்டபோது, அதியனின் போர்த் திறத்தைப் புகழ்ந்தும், தொண்டைமானின் திறமையின்மையை மறைமுகமாக எடுத்துக் காட்டியும் இடித்துக் கூறியும் பாடுகின்றார்.

தொண்டைமானின் போர்க் கருவிகள் பீலி அணிவிக்கப் பெற்று, நெய் பூசப்பட்டு, போர்க்களம் காணாமல் ஆயுதச் சாலையிலேயே காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கும் நிலையை அம்மன்னனுக்கு நினைப்பூட்டுகின்றார் ஔவையார். அத்துடன், தம் மன்னன் அதியமானுடைய போர்க் கருவிகள், அவன் அடிக்கடி களம் புகுந்து அவற்றைப் பயன்படுத்தும் காரணத்தால், நுனி பழுதுபட்டு, கொல்லன் உலைக்களத்தில் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன என்பதையும் மிகவும் பண்பட்ட வார்த்தைகளால் எடுத்துக் காட்டுகின்றார். பலமுறை தூது சென்ற அனுபவமுடைய மிகச் சிறந்த ராஜதந்திரி போன்று ஔவையார் தொண்டைமானிடம் உரையாடுகின்றார். இதனால், ஔவையின் அரசியல் திறமை வெளிப்படுகின்றது, தொண்டைமானின் ஆயுதக் கொட்டிலைப் பார்த்ததும் ஔவை பாடிய பாடல் வருமாறு :

இவ்வே, பீலிஅணிந்து, மாலே சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய்அணிந்து
கடியுடை வியன்நக ரவ்வே அவ்வே,
பகைவர்க் குத்திக், கோடுநுதி சிதைந்து,
கொல்துறைக் குற்றில மாதோ; என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து,
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலேவன்,
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே. —*புறம் : 95.*

*"இந்தப் போர்க் கருவிகள், மயிர்ப் பீலி அணியப்பட்டு அழகு செய்யப்பட்டனவாய், நெய் பூசப் பட்டு, விசாலமான இடத்தில், தக்க காவலுடன் வைக்கப்பட்டுள்ளன."*

*"உண்டாளுல் உணவு கொடுத்து, இல்லேயாளுல், உள்ளதனைப் பகிர்ந்து பலரோடும் உண்ணும் வறியோர் கூட்டத்தின் தலேவனுகிய எம் வேந்தன் அதியமான் அஞ்சியின் வேல்களோ, அடிக்கடி நிகழும் போரில் பகைவர்களேக் குத்திக் குத்தி நுனி முறிந்தமையால், பழுது பார்க்கக்கொல்லன் உலேக்களத்திலன்றே சிதறிக் கிடக்கின்றன."*

ஔவையின் தூது வெற்றி பெற்றதாகத் தெளிவு படக் கூறும் செய்தி இல்லே. புறநானூற்றில் தரப் பட்டுள்ள 'பாடினேர்'—'பாடப்பெற்ரேர்' பற்றிய குறிப்பில், "அவன் தூதுவிடத் தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட அவர் பாடியது" என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. ஆயினும், அதியமான்—தொண்டைமான் போரைக் கூறும் பாடலே தமிழ் இலக்கியங்களில் இடம் பெருததால், ஔவையின் தூது வெற்றி பெற்றதாகவே கர்ண பரம்பரையாகக் கருதப்பட்டு வருகின்றது.

*1210—4*

ஔவைக்கு நிகரான ஒரு பெண்பாற் கவி உலக நாடு எதிலும் தோன்றியதில்லை என்பதற்கு, அம் மூதாட்டியார் தொண்டைமானிடம் சென்ற தூது வெற்றி பெற்ற நிகழ்ச்சி ஒன்றே போதுமானதாகும்.

அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் ஔவையாருக்கும் இருந்த தொடர்பு, பொதுவாக, அரசனுக்கும் அரசவைப் புலவருக்குமான உறவு என்று சொல்லலாம். கபிலரகவலின்படிப் பார்த்தால், தமக்கைக்கும் தம்பிக்குமிடையேயான சகோதர உறவு என்றும் துணியலாம். இதற்கெல்லாம் மேலாக, தனக்கும் அதியமானுக்குமுள்ள தொடர்பு, மழலைமொழி பேசும் குழவிக்கும் அம்மழலை கேட்டு மகிழும் தந்தைக்கும் உள்ள உறவு போன்றதென்கிறார் ஔவையார். இக்கருத்தை வெளியிடும் ஔவைப் பாடல் வருமாறு :

**யாழொடும் கொள்ளா ; பொழுதொடும் புணரா ;**
**பொருள்அறி வாரா ; ஆயினும், தந்தையர்க்கு**
**அருள்வந் தனவால், புதல்வர்தம் மழலை ;**
**என்வாய்ச் சொல்லும் அன்ன. ஒன்னார்**
**கடிமதில் அரண்பல கடந்த**
**நெடுமான் அஞ்சி ! நீ அருளல் மாறே.** —புறம் : 92.

"புதல்வரின் மழலைச் சொற்கள் யாழிசை தரும் இன்பமும் அன்று; காலத்தொடும் பொருந்தியிரா; பொருளறியவும் முடியாதன; எனினும் தந்தையர்க்கு அருளுதல் போல வந்தன எனலாம். என் வாய்ச்சொற்களும் அத்தகையவே! பகைவரின் காவலையுடைத்தாகிய நெடிய மதிலையுடைய அரண்கள் பலவற்றையும் கடந்த நெடுமான் அஞ்சியே! நீயும் அவ்வாறே கருதி, எனக்கு அருள் புரிகின்றாய்."

அதியமானின் போர்த் திறனைப் புகழ்ந்து புகழ்ந்து ஔவையார் பாடியுள்ள பாடல் பலவாகும். அப் பாடல்கள் சிறந்த உவமைகளோடு கூடியன. உவமானங்களை அழகுபடவும் கருத்தொடு பொருந்தவும் கூறுவதில் சங்கப் புலவர்களுள் ஔவைக்கு இணை ஔவையே யென்பதில் ஐயமில்லை.

## களம் பாடிய கவியரசி !

அதியமானின் பகைவர்கள் அவனது கோட்டை அரணை முற்றுகையிட்டகாலை, அவர்களை முறியடிக்க அவன் புறப்படு முன்பே, அவனது வீரத்தைப் பகைவர் களுக்குப் பறைசாற்றுகின்றார் ஔவையார்.

**களம்புகல் ஓம்புமின், தெவ்விர் ! போர்எதிர்ந்து,**
**எம்முளும் உளன் ஒரு பொருநன்; வைகல்**
**எண்தேர் செய்யும் தச்சன்**
**திங்கள் வலித்த கால்அன் னோனே.** —புறம் : 87.

"பகைவர்களே ! களம் புகுவதற்கு நீங்கள் பெற்றுள்ள ஆற்றலும் கருவிகளும் எவ்வளவை உண்டோ, அவ்வளவையும் திரட்டிக் கொள் ளுங்கள். உங்களை எதிர்த்துப் போரிடும் ஆற்ற லுடையவன் எம்முள்ளும் ஒருவன் (ஒப்பற்ற வன்) இருக்கின்றான். அவன் எப்படிப்பட்டவ னெனில், ஒரு நாளைக்கு எட்டுத்தேர் செய்யும் தச்சன் ஒரு மாதங் கூடிச்செய்த தேர்க்காலை யொத்த அழகும் வலிமையுமுடையவன்."

## மறவரைப் புகழ்ந்த மறத்தி !

அதியனின் பகை மன்னன் ஒருவன், அஞ்சா நெஞ்சுடைய ஔவையாரைப் பார்த்து, "விறலியே ! உனது நாட்டில் போர் புரியும் வீரர் உளரோ ?"

என்று கேட்டபோது, அவனுக்கு நம் பெருமாட்டியார் தந்த பதில் வருமாறு :

'இழையணிப் பொலிந்த ஏந்துகோட்டு அல்குல்
மடவரல் உண்கண் வாள் நுதல் விறலி !
பொருநரும் உளரோ, நும் அகன்றலை நாட்டு ?'என,
வினவல் ஆனுப் பொருபடை வேந்தே !
எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
சிறுவன் மள்ளரும் உளரே; அதா அன்று,
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்,
'அதுபோர்' என்னும் என்னையும் உளனே ! புறம். 89.

"மணிக்கோவையாகிய அணியை அணிந்த வாள்போன்ற நெற்றியைப் பெற்ற விறலியே! உன் பெரிய நாட்டிலே, என்னோடு போர் புரிவார் உளரோ ?" என என்னைப் பார்த்துக் கேட்ட படை பலமுடைய மன்னனே ! சொல்கின்றேன் கேள் : எனது நாட்டிலே, அடிக்க எடுத்த கோலுக்கெதிரே சீறி எழும் பாம்புபோன்ற அஞ்சா நெஞ்சுடைய வீர இளைஞர் எண்ணற்றோர் இருக்கின்றனர். அவர்கள் மட்டுமா? முழவிலே காற்று இயற்கையாக மோத, அதனால் எழுந்த ஓசையைப் போர்ப்பறவை என்று கருதி மகிழ்ந்து, போருக்கு எழும் எம் வீரத் தலைவனும் உளன்."

இப்பாடலில், அதியனுடைய வீரத்தை மட்டுமின்றி, அவன் நாட்டிலுள்ள அஞ்சா நெஞ்சுடைய இளைஞர்களையும் புகழ்ந்து பாடுகின்றார் ஔவையார்.

அதியமான் நெடுமானஞ்சி போரில் வீரமரணம் அடைந்தபோது, ஔவையார் பெருந்துயருற்றார். அதியனில்லாத உலகில் வாழ விரும்பாதவரானார்.

உயிர்நீத்த அதியமானுக்கு சடங்குகள் நடந்த காலை அவற்றைக் கண்டு மனமுருகி ஔவையார் பாடிய பாடல் வருமாறு :

**இல்லா கியரோ, காலை மாலை !**
**அல்லா கியர்,யான் வாழும் நாளே !**
**நடுகல் பீலி சூட்டி, நார்அரி**
**சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ—**
***கோடுஉயர் பிறங்குமலை கெழீஇய***
**நாடுடன் கொடுப்பவும் கொள்ளா தோனே ! புறம். 232.**

"கோடுகள் உயர்ந்த மலைகள் நிறைந்த நாடு முழுவதையும் கொடுப்பினும் அதனை ஏற்றுக் கொள்ளாத உயர் குணத்தான் அவன். தன்னல மற்ற அவனுக்காக நடுகல்லை நாட்டி, அதற்குப் பீலியும் சூட்டி, சீரிய கலத்தில் மதுவை ஊற்றிப் படைக்கின்றீர்களே, அதனை அவன் ஏற்றுக் கொள்வானா? அவனோ, உலகைவிட்டு மறைந்து போனான். அதனால், இனி காலையும் மாலையும் இல்லையாகுக. என் வாழ்நாளும் இனி இல்லாது மறைந்தொழிவதாக."

## அதியனுடன் மாளாததேன் ?

கடைச் சங்கத்துப் புலவர்களிலே, பாரிவேந்தன் பால் பேரன்பு காட்டிய கபிலர் போலவும், கோப் பெருஞ் சோழன் மீது அளவிடற்கரிய அன்புகொண் டிருந்த பிசிராந்தையார் போலவும், அதியமான் நெடு மானஞ்சிபால் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார் ஔவையார்.

பாரி வேந்தன் மரணமுற்றபோது, அந்தணப் புலவரான கபிலர் உலக வாழ்வை வெறுத்து உயிர் நீத்தார். கோப்பெருஞ் சோழன் மாண்டபோது, அவ

னில்லாத உலகில் வாழ்வதை விரும்பாதவராக பிசிராந்தையார் உயிர்த்தியாகம் புரிந்தார்.

கபிலரைப் போலவும் பிசிராந்தையாரைப் போலவும் அதியமான் போரில் மாண்டபோது, ஔவைப் பெருமாட்டியார் உயிர்த் தியாகம் புரிந்தாரல்லர். காரணம், உயிரின்பால் கொண்ட பற்றன்று. அதியமான் தந்த நெல்லிக்கனியை உண்டதால் மரணத்தை வென்று நெடுங்கால வாழ்வை அவர் பெற்றிருந்ததேயாகும். மற்றும், ஒரு பெண்ணுணவள், தன் கணவனல்லாத இன்னொரு ஆடவனுக்காக உயிர்த்தியாகம் புரிவது தமிழர் மரபன்றே !

## தனிப்பாடல்கள் யாருடையவை ?

ஔவையார் பெயரால் உள்ள இலக்கியங்களில் சங்கப்பாடல்களுக்கு அடுத்தபடியாக நம் கவனத்துக் குரியவை தனிப்பாடல்களின் தொகுப்பாகும். இத் தொகுப்பிலுள்ள பாடல்கள் சங்க காலத்து வாழ்ந்த ஔவையாரால் பாடப்பட்டவை என்றே பொதுவாகக் கருதப்படுகின்றன டாக்டர் உ. வே. சாமிநாதய்ய ரவர்கள், தாம் பதிப்பித்துள்ள புறநானூற்றில், பாடினோர் வரலாறு கூறுமிடத்தில் ஔவையார் பற்றியும் குறிப்பிடுகின்றார். அதில், "இவர் அவ்வச்சமயத்துச் செய்தனவாகவுள்ள தனிப்பாடல்கள் மிகப்பல" என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், ஆராய்ச்சியாளர்களுள் பலர் இதனை மறுக்கின்றனர் அவர்கள், "ஔவையாருடைய சங்கப்பாடல் நடைக்கும் தனிப்பாடல் நடைக்கும் அதிக வேற்றுமை இருப்பதால் இப் பாடல்கள் சங்க காலத்து ஔவையாருடையவை யென்று கொள்வதற்கில்லை" என்று கூறுகின்றனர்.

### நடை வேறுபாட்டிற்குக் காரணம் என்ன ?

நடைவேற்றுமையைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே கபிலர் அகவலுக்கு நான் எடுத்துக்காட்டிய நியாயத்தையே இத்தனிப் பாடலுக்கும் கூறவேண்டியிருக்கிறது—அதாவது, ஒரே புலவர், புலவர்களிடையே மட்டும் புழங்கும் தம்முடைய பாடல்களை, இலக்கணச் செறிவுடைய உயர்ந்த புலமை நடையிலும், சாதாரண மக்களுக்குப் பயன்படத்தக்க பாடல்களை அவர்கள் புரிந்துகொள்ளத்தக்க வகையில் எளிய நடையிலும் பாடுதல் கூடும். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த இராமலிங்க வள்ளலாரிடமும் இதனைக் காண்

கிறோம். ஆகவே, சங்கப்பாடல் நடைக்கு வேறுபட்ட எளிய நடையிலிருக்கும் காரணத்திற்காகமட்டுமே தனிப் பாடல்களைச் சங்ககால ஔவையார் பாடியவை அல்ல வென்று தள்ளிவிடுவதற்கில்லை.

## பிற்கால ஔவையாருடையவையா ?

தனிப் பாடல்கள் அனைத்தும் பிற்காலத்து வாழ்ந்த வேறோர் ஔவையாரால் பாடப்பட்டவையாயிருக்கலா மென்று இலக்கிய ஆராய்ச்சியாளர்களுள் சிலர் கருது கின்றனர். இதனை ஏற்பதற்கு தனிப்பாடல் தொகுப்பி லுள்ள சில பாடல்களில் வரும் செய்திகள் தடையாக இருக்கின்றன. ஆம்; பாரி மகளிரைப் பற்றிய பாடல்கள் சங்ககால நிகழ்ச்சியைக் குறிக்கின்றன. சான்றாக,

> **வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்**
> **நெய்தான் அளாவி நிறையிட்டுப்—பொய்யா**
> **அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்**
> **கடகஞ் செறியாதோ கைக்கு.**

என்ற பாடல், "திருக்கோவலூரில் அங்கவை, சங்கவை என்ற பெண்கள் வீட்டில் ஔவைக்கு இலைக்கறியிட்ட போது அவர் பாடியது" என்கின்றார், 'தமிழ் நாவலர் சரிதை'க்காரர். அங்கவையும், சங்கவையும் வள்ளல் பாரி வேந்தன் மகளிராவர். மற்றும்,

> **பாரி பறித்த பறியும் பழையனூர்க்**
> **காரியன் றீந்த களைக்கொட்டும்—சேரமான்**
> **வாராயோ வென்றழைத்த வார்த்தையும் இம்மூன்றும்**
> **நீலச்சிற் றாடைக்கு நேர்**

என்ற பாடல், 'பாரி மகளிர் சிற்றாடை கொடுக்க, அப் போது ஔவையார் பாடியது' என்னும் தலைப்பின்கீழ் தரப்பட்டுள்ளது தமிழ் நாவலர் சரிதையில். மேலே

காட்டிய இரண்டு பாடல்களும் சங்ககாலத்தில் வாழ்ந்த பாரி மகளிரைப் பற்றியவையாதலால், அவற்றைப் பாடியவர் பிற்கால ஔவையாராக இருக்கலாம் என்ற கருத்தை ஏற்பதற்கில்லை.

## பாரி மகளிர் பற்றிய பாடல்கள்

அங்கவை, சங்கவை திருமணம் பற்றிய பாடல்கள் சங்ககால ஔவையாருடைய பாடல்கள் என்ற கருத்துக்கே அதிக ஆதரவு இருக்கிறது. அங்கவையும் சங்கவையும் பாரி வேந்தன் மகளிர் அல்லரென்கிறார் எஸ். அனவரத விநாயகம் பிள்ளை. இதனை நிரூபிக்கச் சரியான சான்று காட்ட அவர் தவறிவிட்டாராதலால், தமிழ் நாவலர் சரிதை தரும் செய்தியையே நம்புவோமாக.

தனிப் பாடல் தொகுப்பில் ஔவையார் பெயரிலுள்ள பாடல்கள் அனைத்துமே அதியமான் நெடுமான் அஞ்சியால் ஆதரிக்கப்பட்ட சங்க காலத்து ஔவையார் பாடியவை என்று சாதிப்பதற்குமில்லை. சிற்சில பாடல்கள், பிற்காலத்துப் புலவர் ஒருவராலோ, பலராலோ எழுதப்பட்டு ஔவையார் பெயரால் அறிமுகப் படுத்தப்பட்டும் இருக்கலாம். ஆனால், அந்தப் பாடல்கள் இன்னின்னவை என்று துணிந்து கூறுவதற்கில்லை.

## தரக்குறைவான பாடல்கள்

ஔவையார் பெயரிலுள்ள தனிப் பாடல்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒருவகைப் பாடல்கள் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறுபவை. மற்றொருவகைப் பாடல்கள் வெறும் உபதேச மொழிகளாகவே அமைந்திருப்பவை. அந்த இரண்டில் முதலில் சொன்ன வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறும் பாடல்கள் அனைத்தும்

ஒரே காலத்துக்குரியவையாக இல்லை. மேலே எடுத்துக் காட்டியபடி சில பாடல்கள் சங்ககால நிகழ்ச்சிகளைக் கூறுபவை; வேறு சில பாடல்கள் கம்பர் காலத்து நிகழ்ச்சிகளைக் கூறுபவை. சங்க காலத்துக்கும் கம்பர் வாழ்ந்த காலத்துக்கும் இடைவெளி சுமார் ஆயிரம் ஆண்டுகளாகும். சங்க காலத்து ஔவையாரே அதியமான் நெடுமானஞ்சி தந்த நெல்லிக் கனியை உண்டதன் காரணமாக மரணத்தை வென்று கம்பர் காலம்வரை வாழ்ந்திருந்தார் என்ற கதையைப் பிறிதோரிடத்தில் விரிவாக ஆராய்வோம்.

பொதுவாக, அறிவுக்கரசி ஔவையாருக்கும், கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கும் இடையே நடந்தவை யெனப்படும் நிகழ்ச்சிகளைக் கூறும் தனிப்பாடல்கள் தரத்தில் மிக மிக மட்டமானவை. சான்றுக்கு ஒரு பாடலைப் பார்ப்போம்.

**எட்டேகா லட்சணமே! எமனே றும்பரியே!**
**மட்டில் பெரியம்மை வாகனமே!—முட்டமேற்**
**கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே!**
**ஆரையடா சொன்ன யது?**

கவியரசர் கம்பர் ஒரு சமயம் ஔவையாரை நோக்கி, ‘ஒரு காலடீ நாலிலைப் பந்தலடீ’ என்று சிலேடையாகப் பொருளமைத்துப் பாட, அதன் பொருளை உணர்ந்து பதிலுக்குக் கம்பரை அவமதிக்கும் விதத்தில் ஔவையார் மேற்படி பாடலைக் கூறியதாக அறிவிக்கப்படுகிறது. ‘‘தண்ணீருங் காவிரியே’’ என்ற பாடலும், ஒரு தாசியின் காரணமாக, கம்பர் முதலிரண்டடியைப் பாட, அடுத்த இரண்டடியை ஔவையார் பாடி முடித்துக் கம்பரை அவமதித்தார் என்று கூறப்படுகின்றது. இந்தக் கதை எல்லாம் பிற்காலத்தவரால் கட்டிவிடப் பட்டவை யாகும்.

கம்பருக்கும் ஔவையாருக்கும் தொடர்புண்டாக்கும் தனிப்பாடல்கள் அனைத்தும் பிற்காலத்தவர் பாடல்களேயாகும். பொதுமக்களுக்கு உபதேசமாக அமைந்துள்ள தனிப்பாடல்கள் அனைத்தும் கருத்துச் செறிவோடு கூடியவை; உயர்தரமானவை. அவை ஔவையாருடையவைதாமா ?—என்னும் ஐயப்பாட்டினை மறந்து, அவருடையவையே என்று கொள்வதில் பிழையில்லை.

## ஔவையும் முருகனும்

தமிழரின் தனித்தெய்வம் முருகனிடம் ஔவையாருக்கிருந்த பக்தியைப் புலப்படுத்தும் தனிப்பாடல்கள் மிக மிகச் சுவையானவை ; ஔவையாரின் மேதாவிலாசத்தைக் காட்டுபவை. இந்த அரிய பாடல்கள் பற்றி "ஆராய்ச்சி" என்னும் பெயரால் ஐயப்பாடுகளை எழுப்பி, போதிய ஆதாரமற்ற அந்த ஐயப்பாடுகளை மெய்யென்றே நம்பி, "தனிப்பாடல்கள் அனைத்தும் ஔவையாருடையவை யல்ல" வென்று தள்ளிவிட என் மனம் துணியவில்லை. ஆகவே, முருகப் பெருமானின் வினாக்களுக்கு ஔவையார் தரும் விடைகளாக அமைந்துள்ள சொற்சுவையும் பொருட் சுவையும் உடைய பாடல்களை ஔவையாருடையவை என்றே கொள்வோமாக.

இதுகாறும் ஔவையாரின் சங்க இலக்கியப் பாடல்களையும் சங்ககால நிகழ்ச்சிகளைக் கூறும் தனிப்பாடல் சிலவற்றையும் ஆராய்ந்தோம். இனி, ஔவையாரின் பெயரால் உலவுகின்ற மற்ற நூல்களைக் கொண்டு அம்மூதாட்டியாரின் தமிழ்ப்பணியை ஆராய்வோம்.

சங்கப் பாடல்களும் தனிப் பாடல்களும் நீங்கலாக, ஔவையாரின் பெயரால் உள்ள ஏனைய இலக்கியங்களை மூன்று வகையாகத் தொகுக்கலாம்.

**ஒரு வகை :** (1) அசதிக்கோவை, (2) பந்தனந்தாதி (3) பெட்டகம் ஆகிய பிரபந்தங்கள்.

**இரண்டாவது வகை :** (1) ஆத்திசூடி, (2) கொன்றை வேந்தன், (3) நல்வழி, (4) மூதுரை, (5) கல்வி ஒழுக்கம் ஆகிய நீதி நூல்கள்.

**மூன்றாவது வகை :** (1) ஞானக் குறள், (2) விநாயகரகவல், (3) கணபதி ஆசிரிய விருத்தம், (4) உயர்ஞான சர நூல் சாத்திரம் ஆகிய சமய நூல்கள்.

இன்னும், 'உலக நீதி'யும் ஔவையார் இயற்றியதென்று ஒரு சாராரால் நம்பப்படுகிறது.

இவையன்றி, (1) பிடகநிகண்டு, (2) நவமணி மாலை (3) தரிசனப் பத்து, (4) அருந்தமிழ் மாலை, (5) நன்னூற் கோவை, (6) நான்மணிக் கோவை ஆகிய நூற்களையும் ஔவையார் இயற்றினார் என்று விநோதரச மஞ்சரி தகவல் தருகின்றது. ஆனால், இந்த நூல்கள் கிடைக்கவில்லை.

மேலே எடுத்துக்காட்டிய பல்வகை நூல்களை விரிவாக அறிமுகப்படுத்து முன்பு, அவற்றை இயற்றியவர் கடைச் சங்க காலத்து வாழ்ந்த ஔவை மூதாட்டியார் தானா?—என்பதை ஆராய்ந்தறிவது அவசியமாகின்றது.

சாதாரணப் பொது மக்களுடைய மனங்களிலே ஒரே ஔவையார்தாம் குடிபுகுந்திருக்கிறார். கடைச் சங்க காலமெனப்படும் கி. மு. 2ஆம் நூற்றாண்டு தொடங்கி சைவ சமயக் குரவர்களுள் ஒருவரான சுந்தர மூர்த்தி சுவாமிகள் காலமெனப்படும் கி. பி. 7ஆம் நூற்றாண்டு வரை—அதாவது, சுமார் ஆயிரம் ஆண்டு காலம் ஒரு ஔவையாரே வாழ்ந்து, தம் பெயரால் உள்ள அத்தனை இலக்கியங்களையும் இயற்றினார் என்று சிலர் நம்புகின்றனர். சாதாரண மக்களேயன்றி,

பெரும் புலவர்களிலேயும் சிலர் இத்தகைய நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணம், மரணத்தை வென்று வாழத் தக்க நெல்லிக்கனி யொன்றைத் தகடூரையாண்ட மன்னன் அதியமான் ஔவையாருக்குத் தந்தான் என்ற புறநானூற்றுச் செய்திதான்.

அந்த அற்புத நெல்லிக்கனியைப் பற்றிக் கூறும் புறநானூற்றுப் பாடல் வருமாறு:

**நீல மணிமிடற்று ஒருவன் போல**
**மன்னுக பெரும, நீயே! தொன்னிலைப்**
**பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது,**
**ஆதல் நின்னகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே.''** —புறம்-91.

இதில், 'சாதல் நீங்க' என்பதற்கு 'மரணமிலாப் பெரு வாழ்வு' எனவும், 'மரணத்தைத் தள்ளிப்போடும் நெடுவாழ்வு' எனவும் இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம். அதிசய நெல்லிக்கனி பற்றிய புறநானூற்றுச் செய்தியை அவ்வளவு எளிதில் யாரும் மறுப்பதற்கில்லை.

புறநானூற்றுப் பாடல்களில் வரும் நிகழ்ச்சிகள் முற்றிலும் வரலாற்றுத் தொடர்புடையவையாகும். அவற்றுள் எதையும் கற்பனை யென்று கருதிப் புறக்கணிப்பதற்கில்லை. அதியமான் ஔவையாருக்கு நெல்லிக்கனி தந்த செய்தி, கடைச்சங்கப் புலவரான நத்தத்தனார் பாடியுள்ள 'சிறுபாணாற்றுப் படை'யுள்ளும்,

**கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி**
**அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த**
**... ... ... அதிகன்**

என்ற வரிகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது இவ் வரிகளுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், "பெருமையை உடைய மலையிற் கமழும் பூக்களையுடைய பக்கமலையிலே நின்று அழகு பெற்ற கருநெல்லியினது அமிழ்தின் தன்மை தன்னிடத்தே உண்டான இனிய பழத்தைத் தான் நுகர்ந்து உடம்பு பெறுதே ஔவைக்குக் கொடுத்த அதிகன்" என்று கூறியுள்ளார். இந்த நெல்லிக்கனி பற்றிய செய்தியை ஔவைக்குப் பின் வழிவழி வந்த புலவர் பெருமக்கள் வரலாற்று நிகழ்ச்சியாக நம்பி தத்தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். திருக்குறள் உரையாசிரியரான பரிமேலழகரும், 100ஆவது குறளுக்குத் தாம் எழுதியுள்ள உரையில், "இனிய கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக்கனி போன்ற அமிழ்தானவற்றை" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆயுளை நீட்டிக்கும் நெல்லிக்கனியை அதியன் தனக்குத் தந்ததற்காக, அவனைப் பாராட்டி ஔவை பாடியதாக ஒரு தனிப் பாடல் உளது. அது வருமாறு:

**பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையும்**
**ஆங்குவரு பாற்பெண்ணை யாற்றினையும்—ஈங்கு**
**மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றின் நாவை**
**அறுப்பித்தாய் ஆமலகந் தந்து**

இதன் பொருள்: "வள்ளல் அதிகமானே! அமுதனைய நெல்லிக்கனியை எனக்குத் தந்து, என் உயிரையுண்ணுவதற்கு இயலாது கூற்றுவனின் நாக்கை அறுப்பித்தாய்! அழகிய தாமரைத் தடாகம் சூழ்ந்த புள்வேளூரின் கண் இருந்து சோற்றுக் கொடை வழங்கும் பூதனையும் அவனது ஊரிலிருந்து இனிதான நீருடன் வரும் பெண்ணையாற்றினையும் மறக்குமாறு செய்துவிட்டாய்! நீ வாழ்க!" என்பதாகும்.

ஔவையுண்ட நெல்லிக் கனியை முனிவர் ஒருவர் கஞ்சமலை(பிரான்மலை)யிலிருந்து பெற்று, அதியமானுக்

குச் சாதல் நீங்கக் கொடுத்தாரென்கிறது கரபுர நாதர் புராணம்.

ஔவையார் உண்ட நெல்லிக்கனி மரணமிலாப் பெருவாழ்வைத் தரக்கூடிய தாதலால், சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலம்வரை—அதாவது, உடலோடு தாம் கயிலாயம் செல்லும்வரை அம்மூதாட்டியார் உயிர் வாழ்ந்தார் என்று நம்புவோரு முண்டு. ஆனால், இது ஆராய்ச்சிக்குப் பொருந்துவதன்று. நெல்லிக் கனியின் ஆற்றலால் ஔவையார் ஒரு நூற்றாண்டுக்கு மேல் வாழ்ந்தாரென்றால், அதனை நம்பலாம்.

அண்மையில், 147 வயதுடைய ஒரு பெரியவர் சோவியத் ருஷியாவில் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தியை, அவருடைய முகவுருவப்படத்துடன் வெளியிட்டிருந்தது 'சோவியத் நாடு' என்னும் தமிழ் வார ஏடு. சாதாரண மனிதர் ஒருவரே 147 ஆண்டுகள் வரை வாழ்கின்றாரென்றால், தம்முடைய புலன்கள்மீது ஆட்சி செலுத்திய தவப் பெருமாட்டியாகிய ஔவையார் இரண்டு நூற்றாண்டுக்கு மேலும் வாழ்ந்திருப்பாரானால், அதில் வியப்பில்லை.

ஏற்கனவே எடுத்துக் காட்டிய இலக்கியங்களுள் பிரபந்தங்களாக உள்ளவை பெரும் புலமைவாய்ந்த ஔவையாருடையவை யென்று துணிவதற்கில்லை. அவற்றில் காணப்படும் கருத்துகள் உயர் தரமானவையல்ல. அதனால், அந்தப் பிரபந்தங்களைக் கொண்டு ஔவையாரின் காலத்தை ஆராய்ந்தறி வதற்கில்லை.

அடுத்தபடியாக உள்ள நீதி இலக்கியங்கள் பெரும் புலமை வாய்ந்த ஔவையாருடையவை என்று கொள்ளலாம்.

சமய இலக்கியங்களிலே ஞானக்குறள், விநாயக ரகவல், வேழமுகம் முதலியன இடைக் காலத்தில் இயற்றப்பட்டவை யென்று துணியலாம்.

பொதுவாக நோக்குமிடத்து, வெறும் நம்பிக்கை யளவில் உள்ள செய்திகளை மறந்தால், நீதி நூற்களை இயற்றியவர் இரண்டாம் ஔவையாராகத்தான் இருக்க வேண்டுமென்று சிலர் கருதுவது இயற்கை. ஞானக் குறள், விநாயகரகவல், வேழமுகம் ஆகிய சமய நூல்களை இயற்றியவர் மூன்றுவது ஔவையாராக இருக்கலாம் என்றும் சிலர் கருதலாம். ஆனுல், இந்தக் கருத்தை உறுதிப் படுத்துவதற்குரிய சரியான சான்றுகள் இதுவரை எடுத்துக் காட்டப்பெறவில்லை. ஆகவே, பொதுமக்களின் பக்திக்குரிய ஔவையார் ஒருவராகவே இருந்து வருகிருர்.

## ஔவை நூற்களா ?

இனி, இரண்டாவது ஔவையாரால் இயற்றப்பட்டவையாக சிலரால் கருதப்படும் பிரபந்தங்கள் - சமய நூல்கள் - நீதி நூல்கள் ஆகியவற்றை ஆராய்வோம்.

### பிரபந்தங்கள்

'அசதிக் கோவை' என்பது, அசதி என்னும் ஆயர் மகன்மேல் ஔவையார் இயற்றியதென்பர். இக்கோவை முழுவதும் இப்போது கிடைக்கவில்லை. ஒன்பது செய்யுள்களே வழங்கி வருகின்றன. அவற்றில் ஒன்று வருமாறு.—

**ஆரா யிரங்கொண்ட வைவே லசதி யகன்கிரியில்**
**நீராடப் போகும் நெறிதனிலேயந்தி நேரத்திலே**
**சீரான குங்குமக் கொங்கையைக் காட்டிச் சிரித்தொருபெண்**
**போராள் பிடிபிடி யென்றே நிலாவும் புறப்பட்டதே !**

இந்த 'அசதிக்கோவை' ஔவையாரால் இயற்றப்பட்ட தென்றே பிற்காலப் புலவர்களில் பலர் நம்புகின்றனர். சிவஞான முனிவர் தாம் இயற்றிய 'சோமேசர் முதுமொழி வெண்பா'வில்,

**பன்னும் அசதியென்று பாராட்டிக் கோவை முன்**
**சொன்னளே அவ்வை முன்பு சோமேசா !**

என்று பாடியுள்ளார்.

தண்டபாணி சுவாமிகளும் தாம் இயற்றிய 'புலவர் புராணத்'துள் 'அசதிக் கோவை'யை ஔவை பாடியதற்கான காரணத்தை நான்கு செய்யுட்களில் விரித்துரைக்கின்றார்.

'பந்தனந்தாதி' என்ற நூல், பந்தன் என்ற வணிகன் ஒருவன் மீது ஔவையார் பாடியதென்பர். 100

1210—5

பாடல்களைக் கொண்ட இந்நூல், புஷ்பரதச் செட்டியா ரால், 1890ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு பாடல் வருமாறு :

காலம் வரையாது கடல்நீர் முகவாது
ஞாலத்து இரவலர்க்கு நன்கிழைக்கும் - கோலஞ்சேர்
காப்பந்தன் மாநாகன் காவிரிப்பூம் பட்டினத்து
மாப்பந்தன் என்னும் மழை

'பெட்டகம்' என்னும் பெயருடைய நூலொன்றும் ஔவையார் பெயரால் வழங்கி வருகின்றது. 76 பாடல் கள் கொண்ட இந்நூல், அப்பாவிக் கணவன் ஒருவ னுக்கு அவன் மனைவியின் சோரத்தனத்தைப் புலப்படுத் தப் பாடியதாகும். இதன் முதல் பதிப்பு, ம. ரு. வெங்க டாசலம் பிள்ளை என்பவரால், 1887ஆம் ஆண்டில் வெளி யிடப்பட்டுள்ளது. சான்றுக்கு மூன்று பாடல்களைப் பார்ப்போம்.

கோசல வேந்தன் தசரதன் முன்மயல்
    கொண்டு வரத்தைக் கொடுத்ததனல்
தேசத்தைவிட்டு மகனைத் துரத்தித் தன்
    தேகமும் விட்டனன் பெட்டகமே

ஆயிரம் வேதம் அறிந்தொரு மூவுல
    காணை செலுத்திய ராவணனும்
பேயனைப் போற கெஞ்சி யஞ்சி யழிந்ததைப்
    பேசிற் பெருங்கதை பெட்டகமே.

வேறு

முல்லை வனத்தடி தோப்பில் வருகையில்
    மோசமில்லா னென்று சொன்னீரே—இதைக்
கேட்டுக்கொள் பெட்டகமே—எண்ணிப்
    பார்த்துக்கொள் பெட்டகமே.

'பந்தனந்தாதி'—'பெட்டகம்' ஆகிய இரண்டும் புல மையிலோ, பொருளிலோ நீதி நூற்களும் ஞானக் குற ளும் பாடிய ஔவையார் இயற்றியவை என்று எண்ணத்

தக்க அளவுக்கு தரமுடையவையல்ல. பிற்காலத்தில் வாழ்ந்த புலவரொருவரால் பாடப்பட்டு, ஔவையார் பெயரால் வழங்கி வந்திருக்கலாம்.

## சமய நூற்கள்

'கணபதி ஆசிரிய விருத்தம்' என்னும் நூல், புகழ் மிக்க பெரும் புலவரான ஔவையார் பாடியதென்று கருதக் கூடிய தரத்தில் இல்லை. இதுவும் பிற்காலப் புலவர் ஒருவரால் பாடப்பட்டு, ஔவையார் பெயரால் வழங்கியதாதல் வேண்டும். இதில் பத்துப் பாடல்கள் உள்ளன. முதற் பாடலைப் பார்ப்போம்:

துதிகொண்ட நின்னடி தொழுங்கருணை தா தமிழ்
　　தொடுக்கின்ற வெகுவித்தை தா
துன்பங்க ளணுகாத வின்பங்கள் தா நல்ல
　　சுகஜீவனப் பெருமை தா
பதிகொண்ட புத்திர மித்திர களத்திராதிபர்
　　பரிந்துதவ வந்தவ ரெலாம்
பசியாற வெப்பொழுது முசியாம லன்னம்
　　படைக்கின்ற கனபவுசு தா
மதிகொண்ட பிரபைவதன வல்லபை யிடத்தனே
　　வலியபதி னொரு கரவனே
மத்தப் பிரமத்தனே சித்தப் பிரசித்தனே
　　வசீகரக் கிருபை யாளனே
குதிகொண்ட மததாரை தகுதிகெனவே பெருகு
　　குஞ்சரத் திருமுகவனே
குணபதீ ஸ்ரீமகா கணபதீ விகடதட
　　கும்பகெம் பீரதரனே!

இந்நூலின் முதற் பதிப்பு, பொய்கைப்பாக்கம் சபாபதி முதலியாரால் 1878-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

'ஞானக்குறள்', வீட்டு நெறிப்பால்—திருவருட்பால்—தன்பால் என முப்பாலாய் வகுக்கப்பட்டு, 310 குறட்

பாக்களால் அமைக்கப் பட்டதாகும். இந்நூலைப் டதிப் பித்தவர்கள், 'ஔவைக் குறள்'—'ஞானக் குறள்'-'திருக் குறள்' என்று வேறுபட்ட தலைப்புகள் தந்துள்ளனர்.

திருவள்ளுவர் இயற்றிய குறளில் அறம்—பொருள் —இன்பம் என்னும் மூன்று மட்டுமே கூறி, நான்காவ தாகிய வீடு விடப்பட்டதால், 'குறள்' என்னும் பெயர் வர, வீட்டின்பந்தரும் 'ஞானம்' என்பதனை அடை மொழி யாக்கி, 'ஞானக் குறள்' என்னும் பெயரில் தனி நூல் செய்து திருக்குறள் நூலை முழுமையாக்க இதன் ஆசிரியர் முயன்றார் போலும். மிகச் சிறந்த ஞான நூலான இந்த ஞானக் குறளுக்கு பலர் உரை இயற்றி வெளியிட்டுள்ளனர்.

திரு. எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை பி. ஏ. அவர் கள், 'ஞானக் குறள்' நூலை இயற்றியவர் திருவள்ளுவ ரின் சகோதரியான சங்க கால ஔவையாராகவே இருத் தல் வேண்டும் என்கிறார்.

'விநாயகரகவல்', 'வேழமுகம்' என்னும் பெயர் கொண்ட நூல்கள் நாடறிந்தவையாகும். இவற்றிலுள்ள பக்திப் பாடல்களை விநாயக சதுர்த்தசி விழாவன்று இல்லந்தோறும் பெரியவர்களே யன்றி, பள்ளிப் பிள்ளை களும் பாடக் கேட்டு மகிழ்கின்றோம். அவ்வளவும் தத்துவக் கருத்தமைந்த உயர்தரமான பாடல்களாகும்.

'உயர்ஞான சரநூல்' என்றொரு உரைநடை நூல் ஔவையார் பெயரால் வழங்கி வருகின்றது. இது, யோக சாதனப் பயிற்சிக்குரிய நூலாகும். ஔவையார் கவிதை நடையில் இயற்றியதனை, மகாதேவ முதலியார் என்பவர் எல்லோருக்கும் பயன்படும் பொருட்டு, சுருக்க மாக உரைநடையில் எழுதி அச்சிட்டாரென அறியக் கிடக்கின்றது. ஔவையாரின் கவிதை நூல் கிடைக்க வில்லை.

## நீதி நூற்கள்

ஔவையார் பெயரால் வழங்கிவரும் நீதி நூல்கள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை ஆகியவையாம். இவற்றுள், இறுதியாகச் சொல்லப் பட்ட மூதுரை, அதன் கடவுள் வாழ்த்தில் வரும் முதல் வாக்கியத்தைக் கொண்டு, 'வாக்குண்டாம்' என்னும் பெயராலும் வழங்கி வருகின்றது.

இவையன்றி, உலக நீதி' என்னும் நீதி நூலும் ஔவையார் இயற்றியதென்று சிலர் கருதுகின்றனர்.

சிதம்பரம் இரத்தினசபாபதி முதலியாரவர்களால் 1873-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டுள்ள விநாயகரக வல், வேழமுகம், உலக நீதி ஆகிய தொகுப்பில் ஔவை யார் பெயரே காணப்படுகின்றது.

அஷ்டாவதானம் வீராசாமிச் செட்டியார் மருகர் அப்பன் செட்டியார் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு, தஞ்சை கோவிந்தாசாரியாரால் 1887ஆம் ஆண்டிலும்; தாம்பூர் நரசய்யரால் 1883-ஆம் ஆண்டிலும்; பூவிருந்தவல்லி சுந்தரமய்யர் அண்டு சன்ஸாரால் 1886-ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டுள்ள விநாயக கரகவல், வேழமுகம், உலகநீதி ஆகிய மூன்றும் கொண்ட பதிப்புகளிலும் ஔவையாரின் பெயரே காணப்படுகின்றது.

'உலக நீதி'க்கு உரை எழுதிய பெரும்புலவர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், அந்நூலுக்குத் தாம் வரைந் துள்ள முன்னுரையில், "இதனை இயற்றியவர் ஔவை யார் என்று சிலர் எழுதியிருப்பது மாறுபாடாகும் ஔவையார் இயற்றியது என்பதற்கு ஆன்றோர் வழக்கு முதலிய சான்று ஒன்றுமில்லை" என்று குறிப் பிட்டு, "உலகநாதனார் இயற்றிய உலகநீதி" என்ற பெயராலேயே அந்நூலைப் பிரசுரித்துள்ளார். உலக நீதியில் இறுதியாக அமைந்துள்ள பாடலில்,

**"ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்**
**உண்மையாகப் பாடிவைத்த உலகநீதி!"**

என்ற வாசகம் காணப்படுகின்றது. இதற்கு ந. மு.வே. நாட்டார்,

> "ஓதுவித்த" என்பதற்கு தனக்கு ஆசான் கற்பித்த என்றும் கூறுதலுமாகும். இனி, உலக நாதன் ஓதுவித்தவாசகத்தால் என்று கொண்டு கூட்டி, உலகநாதன் கேட்டுக் கொண்டபடி என்றுரைத்தலுமாகும். அப்பொழுது இந்நூலைச் செய்தோன் பெயர் விளங்கவில்லை."

என்று விளக்கந் தந்துள்ளார்.

நாட்டாரே ஐயுறுகின்றபடி, உலகநாதனுர் என்பது நூலாசிரியர் பெயர் அல்லவென்று கொண்டால், "இந்நூல் செய்தவர் பெயர் விளங்கவில்லை" என்று சூனியத்தில் விட்டுவைப்பானேன்? மேலே எடுத்துக் காட்டியுள்ளபடி இற்றைக்கு 90 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான பல்வேறு பதிப்புக்களில் ஒளவையார் பெயரே குறிப்பிட்டுள்ளபடியால், உலகநீதி அம்மூதாட்டியார் இயற்றியதென்று எண்ணலாமே! எளியநடையில் அரிய நீதிகளை மக்களுக்குப் போதிக்கும் தொண்டு ஒளவையாருக்கே தனியுரிமையல்லவா!

லண்டன் பல்கலைக் கழகத்திலுள்ள தமிழ் நூற்கள் பட்டியலிலும், 'உலகநீதி' ஒளவையார் இயற்றியதென்றே குறிப்பிடப் பெற்றுள்ளது.

'உலகநாதன்' என்பதற்கு 'உலகம் உய்ய' என்ருெரு பாடபேதமும் உண்டென்று அறிகின்ருேம். வித்வான் ந. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் உரை எழுதப்பட்டு, மதுரை இ. மா. கோபால கிருஷ்ணக் கோன் அவர்களால் 1952 ல் வெளியிடப்பட்டுள்ள 'உலக நீதி' பதிப்பில், "ஓதுவித்த வாசகத்தால் உலகம் உய்ய" என்று காணப்படுகிறது.

# ஆத்திசூடியின் பெருமை

ஔவையாருடைய நீதி நூல்கள் பலவாயினும் அவற்றுள்ளும் 'ஆத்திசூடி' என்னும் நூலே மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வருகின்றது. 'அறஞ்செய விரும்பு', 'ஆறுவது சினம்' என வரிவரியாக வாக்கியங்கள் அமைந்துள்ள முறையானது பாமரர் முதல் பண்டிதர் வரை எல்லோரையும் கவர்ந்துள்ளது. பெரும் புலவர் பலர் ஆத்திசூடிக்கு உரை எழுதியுள்ளனர். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் ஆத்திசூடிக்கு உரை இயற்றி, அதனைத் தாம் வெளியிட்ட 'பால பாடம்' என்னும் பாட நூலில் சேர்த்து வைத்துள்ளார்.

மகா வித்துவான் இராமானுஜக் கவிராயர் என்பவர் பதவுரை எழுதி, ஆத்திசூடியை வெளியிட்டுள்ளார் அவரே 'கொன்றை வேந்தனு'க்கும் உரை இயற்றியுள்ளார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராவார்

மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருந்த அரியூர் எஸ். சுவாமிநாத ஐயர், ஆத்திசூடிக்கு விருத்தியுரை எழுதி, உ. வே. சாமிநாதய்யர் அவர்களால் பார்வையிடப்பட்ட பின், 1898ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

## வேதாந்திகளின் பார்வையிலே...

ஆத்திசூடி 108 சூத்திரங்களைக் கொண்டிருத்தலால் அதனை 'அஷ்டோத்தர நீதி' என்று கூறுகின்றனர்.

திருத்துருத்தி இந்திர பீடம் கரபாத்திர சுவாமிகளது ஆதீனத்தைச் சார்ந்த வேதாந்தி ஒருவர், ஆத்தி

சூடிக்கு வேதாந்தத் தத்துவப்படி, பாகியார்த்தமும் ஆந்தரார்த்தமும் எழுதி 116 பக்கங்கள் கொண்ட பெரு நூலாக வெளியிட்டுள்ளார். 'பாகியார்த்தம்' என்ருல், 'வெளிப்படைப் பொருள்' என்றும் ; 'ஆந்தரார்த்தம்' என்ருல், 'உள்ளுறைப் பொருள்' என்றும் கூறுவர். இந்நூலில், ஆத்திசூடி வாக்கியங்களை ஞானியர் பலர் பாடியுள்ள வேதாந்தப் பாடல்களோடு ஒப்பிட்டுக் காட்டி, ஒளவைப் பெருமாட்டியாரை சுத்த வேதாந்தியாக அறிமுகப்படுத்துவதுடன், "ஆத்திசூடியின் உள்ளுறைப் பொருள் ஒவ்வொன்றும் வேதாந்தத்தின் பரம தாத்பரியமாகும்" என்றும் கூறுகின்ருர் உரையாசிரியர். 20ஆம் நூற்ருண்டில் தலைசிறந்த வேதாந்தியாகத் திகழ்ந்து, எண்பது ஆண்டுகளுக்கு மேலும் வாழ்ந்து மறைந்த பேராசிரியர் கோ. வடிவேலு செட்டியாரால் இந்நூல் பார்வையிடப் பெற்றுள்ளது.

அறஞ்செய விரும்பு
பொருள்தனைப் போற்றிவாழ்
மெல்லினல்லாள் தோள்சேர்
வீடு பெறநில்

என்ற வாக்கியங்கள் ஆத்திசூடியில் உள்ளமையால், அறம்—பொருள்—இன்பம்—வீடு என்ற புருஷார்த்தங்கள் நான்கையும் அந்நூல் போதிக்கின்றதெனக் கூறலாம்.

குழந்தைக்குத் தாய் அறிவுரை கூறுவது போலவும், சீடனுக்குக் குரு உபதேசிப்பதுபோலவும் 'விரும்பு'—'விரும்பேல்', 'ஒழி'—'ஒழியேல்', 'மற'—'மறவேல்' என்ற சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

**சித்தாந்தி கூறுகின்ருர் :**

**'உரைநடைக் கோவை'** என்னும் தமது நூலில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார், ஆத்திசூடி பற்றித் தெரிவித்துள்ள கருத்து வருமாறு :

''இயல்வது கரவேல்'' என்னும் சூத்திரம் ஒருவன் மனமொழி மெய்களாற் பிறர்க்குச் செய்யக் கூடிய உதவியை ஒளித்தலாகாது என்னும் பொருளை உட்கொண்டு, இப்பொருளின் விரிவுகளுக்கெல்லாம் நிலைக்களமாக நிற்றலை நோக்குவார்க்கு இதன் திட்ப நுட்பங்கள் இனிது விளங்கும்.

''சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியிற் செறிதினித்து விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்''

என்பதனாற் சூத்திரத்தின் இலக்கணத்தை அறியலாம். இவ்விலக்கணத்திற்குப் பெரிதும் இவ் ஆத்திசூடிச் சூத்திரங்கள் இயைபுடையனவாக விளங்குவன. இந்நூல் மாபாடியம் போன்ற விரிவுரையே யேற்குந் தகுதி வாய்ந்தது.

''உயர்ந்த நீதிகளைச் சிறுவர் எளிதிலுணர்ந்து கொள்வதற்கும் பெரும்புலவர்கள் பலதிறமாக வகுத்து ஆராய்ந்து,உரைகாண்டற்கும் இஃது இலக்கியமாகத் திகழுமாயின், இதனை உபசரித்த தமிழ்ச் செல்வியின் அறிவின் திட்பம் எத்துணைச் சிறந்ததாகும் என்பதை அறிவுடையார் உணர்வாராக!''

வேதாந்திகள் தாங்கள் போற்றும் வேதாந்த சாத்திரத்தின் நுண்பொருட்கள் ஆத்திசூடிச் சூத்திரங்களுள் புதைந்து கிடக்கின்றன வென்று கூறுகின்றனர். அது போல, சைவ சித்தாந்த சாத்திரங்களின் நுண்பொருள்கள் ஆத்திசூடியில் மறைந்து கிடக்கின்றன என்பதனை உணர்த்த ''இந்நூல் மாபாடியம் போன்ற விரிவுரையே ஏற்கும் தகுதி வாய்ந்தது'' என்கிறார் பண்டிதமணி.

ஔவையாரின் ஆத்திசூடிக்கு உரை இயற்றுவதிலும் சிறப்புரை கூறுவதிலும் பெரும் புலவர்களி

டையே போட்டி ஏற்பட்டாற்போல, கருத்து வேற்றுமை காரணமாகப் 'போராட்டம்' ஏற்பட்டது முண்டு'

ஆத்திசூடியிலுள்ள 13, 31, 45, 51, 58 சூத்திரங்களுக்கு யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் எழுதிய உரையை மறுத்து, 'செந்தமிழ்'ப் பத்திரிகை 6ஆம் தொகுதியில், "ஔவையார் நீதி மொழியுரை மயக்கம்" என்னும் தலைப்பில் தம்முடைய உரையை எழுதினர், மு. சு. பூரணலிங்கம் பிள்ளை பி. ஏ., எல். டி.

ஆத்திசூடியிலுள்ள 'அறஞ்செய விரும்பு' என்ற முதற் சூத்திரத்திற்கு மட்டும் விருத்தியுரை எழுதி அந்நீதி நூலின் பாயிரத்துக்கும் விளக்கம் உரைத்து "ஆத்திசூடி முதற் சூத்திர விருத்தியுரை" என்னும் பெயரில் 32 பக்கங்களில் ஒரு நூல் வெளியிட்டுள்ளார் மாகறல் கார்த்திகேய முதலியார்.

திருத்தணிகை சரவணப் பெருமாளையர் என்னும் பெரும்புலவர் (19ஆம் நூற்றுண்டினர்), ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை முதலிய நூல்களுக்கு உரை இயற்றி வெளியிட்டுள்ளார்.

## வழி நூல்கள்

ஔவையாரின் ஆத்திசூடியை முதல் நூலாகக் கொண்டு பெரும் புலவர்கள் வழிநூல்களும் இயற்றியுள்ளனர்.

இரட்டணை அசலாம்பிகை அம்மையார் அவர்கள், 'ஆத்திசூடி வெண்பா'ப் பாடியுள்ளார்.

இராம பாரதி என்பாரும் "ஆத்திசூடி வெண்பா"ப் பாடியுள்ளார். புன்னைவன நாதன் என்னும் வள்ளலை முன்னிலையாக்கி, ஆத்திசூடி வாக்கியம் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வெண்பாவின் இறுதியடியாக வைத்து, முதல் மூன்று அடிகளில் புராணக்கதை

யொன்றை அமைத்து, 108 வெண்பாக்கள் பாடியுள் ளார். இந்நூலுக்கு செம்பூர் வித்துவான் வீ. ஆறுமுகம் சேர்வை என்பார் உரை எழுதியுள்ளார்

'சனிநீ ராடு' என்னும் ஆத்திசூடிச் சூத்திரத்தை இறுதியடியாகக் கொண்ட வெண்பா வருமாறு :

**ஞாயிறுயிர்க் கீறுதிங்க ணம்பரருள் செய்கிலர்செவ்**
**வாய்பிணிதுக் கம்கருநாள் வாழ்வுபோந்—தூயவெள்ளி**
**யோடிதெல்லாம் புன்னைவன மிக்க புத**
**ஞேடு சனிநீ ராடு.**

ஆத்திசூடி வெண்பாவில் வரும் புராணக் கதைகளை விளக்கிப் பண்டித வெ. கனகசபாபதி ஐயர், சுன்னுகம் அ. குமாரசாமிப் புலவர், தெல்லிப்புழை கி. பாலசுப்பிர மணிய ஐயர் ஆகியோர் குறிப்புகள் எழுதியுள்ளனர்.

வித்துவான் ஆறுமுகப் பாவலர் அவர்கள், "ஆத்தி சூடிப் புராணம்" அல்லது "கோபர்வத மாலை" என்னும் பெயரில் ஔவைப் பெருமாட்டியின் ஆத்திசூடிக்கு வழிநூல் இயற்றியுள்ளார். 416 பக்கங்கள் கொண்ட இந்நூலுக்குச் செம்பூர் வித்துவான் வீ. ஆறுமுகம் சேர்வை உரை இயற்றியுள்ளார். ஆதிசத்தீச நாதர் பேரில் துதியாகப் பாடப்பட்டு, ஆத்திசூடி வாக்கியம் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பாடலின் முதலடியில்— முதல் வாக்கியமாக அமைத்து, மற்ற மூன்றடிகளில் பெரிய புராணக் கதையைச் சேர்த்து 108 விருத்தங் களாக ஆத்திசூடிப் புராணம் அமைக்கப்பட்டுள்ளது.

இராசரத்தினம் என்னும் மற்ெருரு புலவர், ஆத்தி சூடி வாக்கியங்களையே அமைத்து, ஓரடிச் சிந்தாக "ஆத்திசூடிச் சிந்து" என்னும் வழிநூலை இயற்றி யுள்ளார்.

ஆத்திசூடி அகவல் என்ற மற்ெருரு வழிநூலும் வெளிவந்துள்ளதாக அறிகிறோம்.

19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தோன்றி, இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதிவரை வாழ்ந்து, தமிழுக்குப் புதுவாழ்வளித்த மகாகவி பாரதியாரும் ஔவையாரின் ஆத்திசூடியிற் கவர்ச்சி அடைந்து அதற்கு வழிநூலாக 'புதிய ஆத்திசூடி' இயற்றியுள்ளார். ஔவையின் ஆத்திசூடியையே முதல் நூலாகக் கொண்டாரென்றுலும், கால மாறுதலைப் பிரதிபலிக்கும் வகையில் தமக்குத் தோன்றிய கருத்து மாறுதலையும் வெளிப்படுத்தியுள்ளார் பாரதியார்.

'பரிதிமாற் கலைஞன்' என்னும் புனைபெயர் கொண்ட வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் சீடர் கடலூர் எம். பலராமையர் என்பவர், ஆத்திசூடி வாக்கியங்களின் பொருளை விளக்கப் பல நீதிக் கதைகளை ஒப்பிட்டுக் காட்டி, "ஆத்திசூடி நீதிக்கதைகள்" என்னும் நூலை இயற்றியுள்ளார்.

புகழ்பெற்ற தமிழ் நாடகாசிரியரும் சிறந்த தேச பக்தருமான சதாவதானம் தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்கள், 'ஆத்திசூடி நீதிக்கதைகள்' என்னும் வழிநூலை இயற்றி ஔவைக்குக் காணிக்கையாக்கியுள்ளார்.

மண்டகப்பாளையம் காளியண்ணப் புலவர் 'கொன்றை வேந்தன் வெண்பா' என ஒரு வழிநூலை இயற்றியுள்ளார்.

## அறிஞர்கள் பாராட்டு

சோழவந்தான் அரசஞ் சண்முகனர் என்னும் புலவர் பெருமான், ஆத்திசூடிப் பதிப்பொன்றுக்குத் தந்துள்ள சாற்றுக் கவியுள்,

> வளர்செழுந் தமிழணங்கு உளமகிழ்ந்து என்றும்
> களமிசைப் புனையுமங் கலநாண் என்னச்
> சுடர்தரும் ஆத்திசூடி...

என்று குறிப்பிட்டுள்ளார். ஆம்; திருமணத்தை வெறுத்துத் துறவியாக வாழ்ந்த ஔவைப் பெருமாட்டியார் இயற்றிய ஆத்திசூடியானது "தமிழன்னையின் கழுத்தை அலங்கரிக்கும் மங்கல நாண் (தாலிக் கயிறு) போன்றது" என்கின்றார் அரசஞ் சண்முகனார்.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்), "அவ்வைக் காட்சி" என்னும் பெயரில் ஔவை மூதாட்டி பற்றிய நூலொன்றை எழுதிவைத்தாரென்றும், பின்னர் அது மறைந்துபோனதென்றும் அறிகின்றோம். சாஸ்திரியாரின் சீடர்களிலொருவரான திரு. சுப்பிரமணிய ஆச்சாரியார் என்பவர், "ஔவையார் ஆராய்ச்சி" என்னும் தலைசிறந்த ஆராய்ச்சி நூலொன்றை இயற்றி வெளியிட்டுள்ளார்.

அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார்பால் எல்லையற்ற பற்றும் பக்தியும் கொண்டு வாழ்ந்த "திருப்புகழ்ச் சுவாமிகள்" என்று அழைக்கப்படும் முருகதாச சுவாமிகள் "எம்மதமும் சம்மதம்" என்னும் சமரச நெறியில் தமக்கு நம்பிக்கை தோன்றக் காரணம் ஔவையாரின் ஆத்திசூடியே என்கின்றார். சுவாமிகள் இயற்றிய "**கௌமார முறைமை**" என்னும் நூலில்—ஞான காண்டப் பகுதியில்,

தெய்வமிக ழேலெனமுன் ஔவை சொன்ன
திருமொழியின் பயனுளத்திற் றிகழ்ந்த பின்னர்ப்
பொய்வழக்க ரானசில சமயத் தோர்மேல்
புறங்கூறி னாலும் அவர் போற்றும் தெய்வம்
உய்வளிக்கத் தக்கதல்ல என்னப் பேசா
உணர்வுற்றேன் கௌமாரம்ஒப்ப வாயே
சைவவயி ணவகாண பத்தி யாதிச்
சமயமிரு மூன்றினையுந் தழுவி னேனே!

என்று பாடியுள்ளார். ஆம்; வேதங்களை உடன்பாடாகக் கொண்ட சைவம், வைணவம், ஐந்திரம், சாக்தம்,

கௌமாரம், காணுபத்தியம் ஆகிய அறுவகை அகச் சமயத்தாருள்ளும் பிணக்குகள் உண்டு. அந்தப் பிணக் குகளை ஒழித்து, சைவமல்லாத பிற சமயங்களின் தெய் வங்களைக் குறைத்துப் பேசாத பண்பினைத் 'தெய்வமிக ழேல்' என்ற ஆத்திசூடிச் சூத்திரமே தமக்கு அளித்த தென்கிறார், முருகதாச சுவாமிகள்.

## கிறித்துவ மிஷனரிகள்

தமிழறிஞர்களே யன்றி, தமிழறிந்த பிற நாட்டவரும் ஔவையின் நீதி நூல்களைப் பயின்று அவற்றின் அருமை பெருமைகளைப் போற்றியுள்ளனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மக்களிடையே கல்வித் துறையில் தொண்டாற்றிய கிறித்துவ மிஷனரி கள், தாம் நடத்திய பள்ளிகளில் ஆத்திசூடியைப் பாட மாக வைத்தனர். ஆனால், கிறித்துவ மதநெறிகளை இந் நாட்டில் பரப்பும் நோக்குடையவரான அன்னார், ஆத்தி சூடியில் சில சூத்திரங்களை விலக்கி, மற்றவற்றையே பள்ளிகளில் பாடமாக்கினர்.

கிறித்துவக் கல்வி விருத்தி சங்கத்தார் 1868ஆம் ஆண்டில் வெளியிட்ட தமிழ் இரண்டாம் பாடப் புத்த கத்தில், ஆத்திசூடி 108 வாக்கியங்களுள் 16, 56, 61, 62, 66, 80, 93, 103 ஆகிய எண்களுடைய வாக்கியங் கள் மட்டும் ஆட்சேபணைக்கிடமா யிருத்தலால், அவை களை நீக்கி மற்றவற்றை அச்சியற்றியதாக நூலாசிரி யர் குறிப்பிட்டுள்ளார். நீக்கப்பட்ட வாக்கியங்கள் வருமாறு :

**சனிநீ ராடு**
**திருமாலுக் கடிமைசெய்**
**தேசத்தோ டொத்துவாழ்**
**தையல்சொற் கேளேல்**

நாடொப் பனசெய்
புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
மெல்லினல்லாள் தோள்சேர்
ஊருடன் கூடிவாழ்

கிறிஸ்தியன் வெர்னகுலர் எஜுகேஷன் சொசைடி யார் 1869ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ள 'நற்போதனை' என்னும் பாட நூலிலும் மேலே தரப்பட்டுள்ள எட்டு வாக்கியங்கள் நீக்கப்பட்டுள்ளன. ஆனால், இதே பாட நூல் 1873இல் மறுபதிப்பாக வெளிவந்தபோது 'தேசத்தோ டொத்துவாழ்' என்ற வாக்கியம் மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

'மூதுரை'—'கொன்றை வேந்தன்' ஆகிய நீதிநூற் களிலும் தங்களுக்குப் பிடிக்காத வாக்கியங்கள் சில வற்றை நீக்கிவிட்டு, எஞ்சியவற்றைப் பாடமாக்கினர் கிறித்துவ மிஷனரிகள்.

கிறிஸ்டியன் வெர்னகுலர் எஜுகேஷன் சொசைடி யார் 1886இல் வெளியிட்ட 'மூதுரை'யில், மொத்தமுள்ள முப்பது பாடல்களுள் ஆறு பாடல்கள் நீக்கப்பட்டன. அந்த ஆறும் "ஆட்சேபனைக்கு இடமானவை" என்று காரணம் கூறப்பட்டுள்ளது.

இதே சொஸைடியார் 1884 இல் வெளியிட்டுள்ள கொன்றை வேந்தனில், மொத்தமுள்ள 91 வாக்கியங் களுள் 28, 55, 58, 59, 62, 63, 66, 74, 77, 89 ஆகிய எண்களுடைய பத்து வாக்கியங்கள் ஆட்சேபனைக் கிடமானவை யென்று நீக்கப்பட்டன. அவை வரு மாறு:

சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு
நேரா நோன்பு சீரா காது
நோன்பென் பதுவே கொன்றுதின் னாமை
பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும்

பீரம் பேணி பாரந் தாங்கும்
புலியுங் கொலையும் களவுந் தவிர்
பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்
முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்
மேழிச் செல்வம் கோழை படாது
வையந் தோறுந் தெய்வந் தொழு

ஆத்திசூடி—கொன்றை வேந்தன்—மூதுரை ஆகியவற்றின் சில வாக்கியங்களையோ, பாடல்களையோ பள்ளிக்கூடப் பாட நூற்களில் கிறித்துவ மிஷனரிகள் சேர்க்கத் தவறிய செயல் நம்மால் புரிந்துகொள்ளக் கூடியதே. இந்துக்களின் நம்பிக்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப அமைந்த பழைய நீதிகள் கிறித்துவர்களுக்கும் பொருந்துமென்று நாம் எதிர்பார்க்க முடியாதல்லவா? ஆனால், 'தேசத்தோ டொத்து வாழ்'—'நாடொப்பன செய்' — 'ஊருடன் கூடிவாழ்' என்ற தேசபக்தி மணக்கும் வாக்கியங்களையும் நீக்கிய செயல், அன்றைய சூழ்நிலையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் காவலர்களுக்கும் கிறித்துவ மிஷனரிகளுக்குமிருந்த கொள்கை ஒற்றுமையைக் காட்டுகின்றது போலும்!

இது எப்படியிருப்பினும், தமிழ் நாட்டின் பூர்வ கல்விமுறையை ஏற்று ஔவையாரின் நீதிநூல்களைத் தங்கள் பள்ளிகளிலும் பாடமாக்கி, அம்மூதாட்டியின் புகழை வளர்த்ததற்காகக் கிறித்துவ மிஷனரிகளை நாம் பாராட்டலாம்.

## மொழி பெயர்ப்பாளர்கள்

ரெவரெண்டு டாக்டர் ஜான், (John) ரெவரெண்டு பிஸ்ஸெட் (Bisset), சட்ஜான் ([illegible]), என்ற மூவரும் ஆத்திசூடி—கொன்றைவேந்தன் ஆகிய இரண்டு நீதி

நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளனர்.

ராபின்ஸன் என்பவரால், 'மூதுரை' ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது.

ஔவையாரின் 'கல்வியொழுக்கம்' என்னும் நூல், வான் ஜே. சி. சி. ருடிகர் என்ற ஜெர்மனியரால் ஜெர்மன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

பெல்லோ என்பார் எழுதியுள்ள இலங்கை சரித்திரம் என்ற நூலினுள், ஔவையின் ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

தமிழில் பெரும் புலமை பெற்ற ஐரோப்பியரான **பெஸ்கி** என்பார், ஔவையின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய நீதி நூல்கள், இலத்தீன் மொழியின் அறிவுரைக் கவிஞரான ஸெனக்காவின் நீதி நூற்களுக்கு ஈடானவை என்று கூறியுள்ளார்.

பெர்சிவல் பாதிரியார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதிநூற்கள் நான்கையும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிட்டுள்ளார்.

மற்றும், பேரறிஞர் பி. யூ. போப் அவர்கள், ஔவையார் நீதி நூல்களில்—குறிப்பாக ஆத்திசூடி, கொன்றை வேந்தனில் பெரிதும் கவர்ச்சியடைந்தார்.

> "ஔவையார்—ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்ற அருமையான இரு நீதிநூல்களை இயற்றினர். அவை பள்ளி மாணவர்களுக்குப் பயன்படக் கூடியனவாகும். இந்நூற்களில், பல்வேறு நீதிகளையும் அறிவு வளர்ச்சிக்குரிய படிப்பினைகளையும் வழங்கி, மக்களுக்குப் பூரணமாகப் பயன்படுமாறு செய்துள்ளார். இந்த நூற்களைத் தவிர

சற்றேறக்குறைய 50 அற்புதமான தனிப்பாடல்களையும் ஔவையார் இயற்றினவாகச் சொல்லப்படுகின்றன."

'கொன்றை வேந்தன்' பழைய பதிப்பொன்றில், 'கொன்றை வேய்ந்தோன்' என்று வழங்கப்பட்டுள்ளது.

# பாரதி போற்றிய பாட்டி !

ஔவையாருக்குப் பின் தோன்றிய ஞானியரிலே சிலர், அம்மூதாட்டியாரைத் தங்கள் வழிகாட்டியாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். இவர்களில் அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார், 'திருப்புகழ்ச் சுவாமிகள்' என்றழைக்கப்படும் முருகதாச சுவாமிகள், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் முக்கியமானவர்களாவர்

இம்மூவரில், காலத்தாற் பிற்பட்டவரான பாரதியார், ஔவைப் பெருமாட்டியாரை, உலகத்தின் ஒரே கவியாக, ஒப்புயர்வற்ற கவியாகக் கருதினார்.

அப்புரட்சிக் கவிஞர், தமிழை நினைத்தபோதெல்லாம் ஔவையையும் சேர்த்து நினைத்தார் போலும்! அதனாற்றான், தம் கவிதையொன்றில், 'ஔவையார்' என்று பெயர் குறிப்பிட வேண்டிய இடத்தில், 'தமிழ் மகள்' என்றே கூறி முடித்தார். அந்தக் கவிதை,

> **"சாதி இரண்டொழிய வேறில்லை " யென்றே**
> **தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்**

என்பதாகும் 'நல்வழி'யில்,

> **சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்**
> **நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்**
> **இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்**
> **பட்டாங்கில் உள்ள படி**

என்று ஔவையார் பாடியுள்ள செய்யுளின் முதலடியையே பாரதியார் தமது பாடலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

## ஔவை மொழி போதும் !

கடைச் சங்க காலந்தொட்டு தமது காலம்வரை தோன்றிய தமிழ்க் கவிஞர்கள் பல்லாயிரவரா யிருக்க, அவர்களிலே, வள்ளுவர்—இளங்கோ—கம்பர் ஆகிய முப்பெரும் புலவர்களுக்கே முதன்மை தந்தார் பாரதியார். இதனை உணர்த்த,

**யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,**
**வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,**
**உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை**

என்று பாடிவைத்துள்ளார் பாரதியார். இந்தக் கருத்தை, தம் கவிதைத் தொகுப்பிலும் உரைநடைக் கோவையிலும் வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளார். ஆயினும், தமிழ்ப் புலவர்களை மறந்து அவர்கள் இயற்றிய இலக்கியங்களை நோக்குங்கால், வள்ளுவர்—இளங்கோ—கம்பர் தந்த இலக்கியங்களினும் ஔவையார் யாத்தளித்த நீதி நூல்களுக்கே முதன்மை தந்துள்ளார் பாரதியார். இதனை வெறும் உபசாரத்திற்காக அல்லாமல், உண்மை உணர்ச்சியுடனேயே கூறியுள்ளார்.

"நாங்கள் இந்தியா தேசத்து ராஜ்யாதிகாரத்தை இழக்க ஒருப்பட்டாலும் ஒருப்படுவோமே யன்றி, ஷேக்ஸ்பியரை இழக்க ஒருநாளும் ஒருப்படமாட்டோம்' என்று நாம் மறுமொழி சொல்வோ"மென்று 'மெக்காலே' என்னும் ஆங்கிலேய ஆசிரியர் சொல்லுகின்றார்.

"இந்த மாதிரியாகப் பெருமைப்படுத்தி நம்மவர் கம்பனைச் சொல்லலாம்; திருவள்ளுவரைச் சொல்லலாம்; சிலப்பதிகார மியற்றிய இளங்கோ வடிகளைக் கூறலாம். இன்னும் பல புலவர்களைக்

காட்டலாம். எனினும், கம்பர், திருவள்ளுவர் முதலிய பெரும் புலவராலேயே தம்மனைவரிலும் மிகச் சிறந்தவராகக் கருதப்பட்ட ஔவைப் பிராட்டியையே மிகவும் விசேஷமாக எடுத்துச் சொல்லக் கூடும்.

"தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களை யெல்லாம் இழந்துவிடப் பிரியமா? ஔவையின் நீதி நூல்களை இழந்துவிடப் பிரியமா?—என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், மற்ற செல்வங்களை யெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை அவற்றைத் தமிழ்நாடு சமைத்துக்கொள்ள வல்லது.

"ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்பட மாட்டோம்; அது மீட்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப்பெருஞ் செல்வம்" என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்."

என்பது, 'பாரதி நூல்கள்—கட்டுரை'த் தொகுப்பில் 'தமிழ் நாட்டு நாகரீகம்' என்னும் கட்டுரையில் கூறப் படும் கருத்தாகும். இப்படி அவர் கூறியதனால், வள்ளுவர் — இளங்கோ — கம்பர் ஆகிய முப்பெருங் கவிஞர்களை இரண்டாந்தரமானவர்களாக்கி விட்டார் என்று எண்ணிவிடக் கூடாது. ஆண் குலத்திலே மகா கவிகள் வாழையடி வாழையெனத் தோன்ற வாய்ப் புண்டு; தோன்றியும் இருக்கிறார்கள். இதனை, தமிழ் மொழியின் வரலாறும் காட்டுகின்றது. ஆனால், பெண் குலத்திலே, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளிலே உலகம் போற்றும் மகா கவியாக ஔவையார் ஒருவர் தானே தோன்றியுள்ளார். அதனாற்றான், பெண் குலத்தின் பெருமையை நிலைநாட்ட ஔவையாரின் இலக்

கியங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ருர், பெண் ணினத்தின் விடுதலைக்குப் பேரிகை கொட்டிய பாரதி யார் !

## புதிய ஆத்திசூடி

பெண் குலத்திற்கு விடுதலை தருமாறு ஆண் குலத் திற்கு அறிவுரை கூறும் பாரதியார், கொன்றை வேந் தனில், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று ஔவையார் பாடியதையே சான்று காட்டியுள்ளார். ஔவையின் வாக்கோடு இணைந்த பாரதி வாக்கு வருமாறு :

**பெண்டாட்டி தனையடிமைப் படுத்தவேண்டிப்**
**பெண்குலத்தை முழுதடிமைப் படுத்த லாமோ ?**
**"கண்டார்க்கு நகைப்பென்னும் உலக வாழ்க்கை**
**காதலெனும் கதையினுடைக் குழப்ப மன்ருே ?**
**உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை**
**உமையவளென் றறியீரோ ? உணர்ச்சி கெட்டீர் !**
**பண்டாய்ச்சி ஔவை : "அன்னையும் பிதாவும்**
**பாரிடை முன் னறிதெய்வம்" என்ருள் அன்ருே ?**

ஔவையின் ஆத்திசூடிக்கு பாரதியார் வழிநூல் இயற்றினுர் என்று முன்பே கூறினேம். அந்த நூலுக்குப் 'புதிய ஆத்திசூடி' எனப் பெயரிட்டு, 'பழைய ஆத்திசூடி' ஔவையார் பாடியதென்பதனைச் சொல்லாமல் சொல்லு கின்ருர். வழிநூலுக்குரிய இலக்கணம்,

**முன்னேர் நூலின் முடிபொருங் கொத்துப்**
**பின்னேன் வேண்டும் விகற்பங் கூறி**
**அழியா மரபினது வழிநூலாகும்** *[நன்னூல்-பாயிரம்]*

என்பதாகும். இதன்படி, முதனூலான ஔவையார் ஆத்திசூடியின் கருப்பொருளான நீதி போதனையையே தமது நூலுக்கும் கருப்பொருளாக்கி, தாம் வாழ்ந்த

காலத்தின் சூழ்நிலைக்கேற்ற மாறுதல்களையும் புகுத்தி, அந்த மாறுதலால் தமிழ் மரபு கெடாமல் காத்து, புதிய ஆத்திசூடியைப் புனைந்துள்ளார் பாரதியார்.

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே

என்பது, ஔவை ஆத்திசூடியிலுள்ள கடவுள் வாழ்த்து. இதில் ஔவையார் வழிபடும் கடவுள், ஆத்திமாலை சூடியவராகிய சிவபெருமானின் விருப்பத்திற்குரிய விநாயகக் கடவுள் ஆவார்.

புரட்சிக் கவி பாரதியார், பழைய ஆத்திசூடியைப் பின்பற்றித் தாம் இயற்றிய புதிய ஆத்திசூடிக்குரிய கடவுள் வாழ்த்தில்,

ஆத்திசூடி, இளம்பிறை யணிந்து,
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்

என்று முதலில் சிவபெருமானைக் குறிப்பிட்டார். ஆனால், இத்துடன் கடவுள் வாழ்த்தை முடிக்காமல் வைணவர்—இஸ்லாமியர்—கிறித்துவர் ஆகிய பிற சமயத்தினர் வழி படும் தெய்வங்களையும் வழிபடுகின்றார். அந்தப் பாடலின் முழு வடிவத்தையும் பார்ப்போம்:

ஆத்திசூடி, இளம்பிறை யணிந்து,
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினர்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

இந்த மாறுதலால், ஒளவையார் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலைக்கேற்ப அவர் தொழுத சைவருக்குரிய தெய்வத்தையும் வழிபட்டு, அதன் பின்னர் இராமலிங்க அடிகளாரால் வளர்க்கப்பட்ட 'எம்மதமும் சம்மதம்' என்னும் சர்வ சமய சமரச உணர்ச்சியையும் எதிரொலித்து, 'பல்வகையாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே' என்ற உண்மையினையும் வலியுறுத்திக் கடவுள் வாழ்த்துப் பாடினார் பாரதியார்.

பாரதியின் 'புதிய ஆத்திசூடி'யிலுள்ள **110** வாக்கியங்களும் புத்தம் புதியவையே. ஒளவையாரின் ஆத்திசூடியிலிருந்து ஒரு வாக்கியத்தைக்கூட அவர் அப்படியே கையாளவில்லை. ஆயினும், அகர வரிசை முறையில், தனித்தனி வாக்கியமாக நீதி நூல் இயற்றுவதில் அவருக்கு வழிகாட்டியவர் ஒளவையாரே யாதலால், அந்தப் பெருமாட்டியின் ஆத்திசூடியைப் பழையதாக்கும் வகையில் தனது நூலுக்குப் '**புதிய ஆத்திசூடி**' எனப் பெயர் தந்தார்.

## தாய்க்குலத்தின் தனிப்பெருமை!

வாழையடி வாழையெனத் தோன்றி வந்துள்ள தமிழ்ப் புலவர்களிலே ஒளவையாருக்குரிய இடம் தனியானது; தமிழ் இலக்கியங்களிலே ஒளவையாரின் நீதி நூல்களுக்குள்ள பெருமை தனித்தன்மை வாய்ந்தது என்பது பாரதியாரின் உறுதியான கொள்கை. இதனை அவரே கூறக் கேட்போம்:

> "உலகத்திலுள்ள மாதர்களுக்கெல்லாம் நீதி ஆண் மக்களாலேயே விதிக்கப்பட்டது. தமிழ் நாட்டு மாதரும் ராஜ நீதி சம்பந்தப்பட்ட சிறிதளவிலே பொதுவான ஆண் சட்டத்துக்குக் கீழ்ப்

பட்டிருந்தனரேயாயினும், ஜன ஸமூஹ நீதிகளின் விஷயத்தில் தமிழ் நாட்டில் எப்போதும் ப்ரமாண மாக இயன்று வருவது ஔவையின் நீதி வாக்கியங் களும் நீதி நூல்களுமேயாம்.

''ஆண் மக்களிலேகூட, உயர்ந்த கல்வி பயின் றோர் மாத்திரமே ஜன ஸமூஹ விஷயங்களில் வள்ளு வர் குறள், நாலடியார் முதலியவற்றை ப்ரமாண மாகக் கூறுவர். அதிகப் படிப்பில்லாதவர்களும், படிப்பே தெரியாதவர்களுமாகிய ஜனங்கள் ஆண், பெண் அனைவருக்கும் ஔவையாரின் நீதியே வழிகாட்டி.

''ஸாமான்ய ஜனங்கள் ஔவை நீதியைக் கொண்டாடி வருகிறார்களெனில், கற்றோரும் அர சரும் அதைப் புறக்கணித்து வந்தார்கள் என்று கருதுதல் வேண்டா. கற்றோருக்கும் அரசர்க்கும் தமிழ் மக்கள் எல்லோருக்கும் குறள், நாலடியார் முதலிய நூல்களைக் காட்டிலும் ஔவையின் நூல் க்ளில் அகப் பற்றுதலும் அபிமானமும் இருந்து வருகின்றன.''

## மரணத்தை வென்ற மகாஞானி!

ஔவையாரை அரசியல் ஞானியாகவும் ஆன்ம ஞானியாகவும் மரணத்தை வென்று தெய்வத்தன்மை பெற்றவராகவும் காண்கின்றார் பாரதியார்.

''ஔவையார் வெறுமே நூலாசிரியர் மட்டு மல்லர். அவர் காலத்திலேயே அவர் ராஜ நீதியில் மிகவும் வல்லவரென்று தமிழ் நாட்டு மன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்று ராஜாங்கத் தூதில் நியமனம் பெற்றிருக்கிறார் மேலும் அவர் சிறந்த ஆத்ம ஞானி; யோகசித்தியால், உடம்பை முதுமை நோவு சாவு

களுக்கு இரையாகாமல் நெடுங்காலம் காப்பாற்றி வந்தார்.

"மாசற்ற கொள்கை மனத்தமைந் தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு"

அதாவது, ஹிருதயத்தில் சுத்தமான, பயமற்ற, கபடமற்ற, குற்றமற்ற, பகைமையற்ற எண்ணங் களை நிறுத்திக் கொண்டால், உடம்பில் தெய்வத் தன்மை, அதாவது சாகாத்தன்மை (அமரத் தன்மை) விளங்கும் என்றும் பொருள் படுவது. இந்தக் குறள் பாடியவர் ஔவையார். இவர் தாமே நெடுந்தூரம் இக்கொள்கைப்படி ஒழுகியவரென்பது இவருடைய சரித்திரத்தில் விளங்குகிறது."

ஔவைப் பெருமாட்டியார் தோன்றியமையால் தமிழினத்துப் பெண்கள் உலகத்தினர் பார்வையிலே பெருமை பெற்று விட்டனர் என்பதோடு, அவர்களுடைய உரிமைகளுக்கு எல்லாம் ஔவையார் காவலராகவும் விளங்குகின்ருர் என்கிருர் பாரதியார்.

"தமிழ் நாட்டு நாகரிகத்திற்குப் பெரும் செல்வ மாகவும் ஒளி சான்ற வாடா விளக்காகவும் தனிப் பேரடையாளமாகவும் தமிழ் மாதொருத்தியின் நூல் கள் விளங்குவது நமது நாட்டு ஸ்திரீகளுக்குப் பெரு மகிழ்ச்சி தரத்தக்கதொரு செய்தியன்றோ? இஃது தமிழ் ஸ்திரீகளுக்கு வெறுமே புகழ் விளைவிப்பது மாத்திரம் அன்று. அவர்களுக்கு கிரமமான காவலு மாகும்."

ஔவையார்பால் கொண்ட எல்லையற்ற பக்தியால், தற்காலத்துப் பெண்களோடு ஆண்களை ஒப்பிட்டு "ஆண்களைக் காட்டிலும் ஔவையார் வழிவந்த பெண் களே அறிவில் சிறந்தவர்கள்" என்று முடிவு கட்டுகின் ருர் பாரதியார்.

"ஔவையார் பிறந்த நாட்டு மாதரை, ஔவையார் இனத்து மாதரை, ஆண் மக்களைக் காட்டிலும் அறிவிலே குறைந்த கூட்டத்தாரென்று வாய் கூசாமல் எவனும் சொல்லத் துணிய மாட்டான்.

"மற்ற தேசங்களில் திருஷ்டாந்தமாக இங்கிலாந்து தேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே ஆண் மக்களுக்கு சமானமான உரிமைகளை பெண்களுக்குக் கொடுப்பது தகாதென்று வாதம் பண்ணுகிற கக்ஷியார்......அதற்கு ஒரு ஸாக்ஷ்யமாக, "ஆண் மக்களில் ஷேக்ஸ்பியர் என்னும் கவியரசர் எழுதியிருப்பது போன்ற கவிதை எழுதும் ஸ்திரீ ஒருத்தி—நமது நாட்டில் எப்போதேனும் தோன்றியிருப்பதுண்டா? ஏன் தோன்றவில்லை? இதனால் இயற்கையிலே ஸ்திரீகள் ஆண்மக்களைக் காட்டிலும் புத்தியில் குறைந்தவர்களென்பது தெளிவாக விளங்குகிறதன்றோ?" என்கிறார்கள்.

"தமிழ் நாட்டிலோவெனில், இப்படிப்பட்ட வாதம் செல்லாது. அதற்கு நேர் எதிரிடையாக இந்நாட்டில் ஸ்திரீகள்:—"ஔவையாரைப் போல் கவிதையும் சாஸ்திரமும் செய்யக்கூடிய ஓர் ஆண் மகன் இங்கு பிறந்திருக்கிறானா? ஏன் பிறக்கவில்லை? இதினின்றும் ஆண் மக்கள் இயற்கையிலேயே பெண்களைக் காட்டிலும் அறிவுத் திறமையில் குறைந்தவர்களென்பது தெளிவாக விளங்குகிறதன்றோ?" என்று வாதிக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள்."

இன்னும், ஔவைப் பெருமாட்டியின் அருமை பெருமைகளைப் பற்றியெலலாம் மிகவும் விரிவாக எழுதியிருக்கிறார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். அவருடைய கருத்துக்களை விரிவாக விமர்சிப்பதென்றால், அது

தனி நூலாக அமையக்கூடும். ஒரே வாசகத்தில் சொல்வதானல், ஔவையாரின் வாக்கை வேத வாக்காகவே கருதினர், வேதியர் குலத்தில் தோன்றிய சுப்பிரமணிய பாரதியார். "தமிழருக்கு" என்று தலைப்பிட்டு, தம் இனத்தவருக்கு அறிவுரை கூறுமிடத்து,

> "தமிழா! ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. "ஜாதி யிரண்டொழிய வேறில்லை" என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்"

என்கின்றார் பாரதியார்.

பாரதியார், தாம் இயற்றிய 'நவதந்திரக் கதை'யில் ஔவையின் 'நற்றாமரைக் கயத்தில்' என்னும் செய்யுளை எடுத்துக் காட்டாகக் கையாண்டுள்ளார். 'சந்திரிகையின் கதை'யுள்ளும், 'பொய்யுடையொருவன்' என்னும் கொன்றை வேந்தனின் வாக்கியத்தைக் கையாண்டுள்ளார்.

## வள்ளலார் வழிபட்ட ஞானி !

**வள்ளற் பெருமான்,** ஔவையாரைத் தம் வழிகாட்டி யாகக் கொண்டு, அவருடைய நன்மொழிகளைப் பொன் மொழிகளாகப் போற்றினர்.

**சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு**
**அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்**
**இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம**
**விதியே மதியாய் விடும்**

என்னும் ஔவையார் பாடலை இடையறாது தாம் ஓதி வந்ததோடு, பிறரையும் ஓதுமாறு தூண்டி வந்தார்.

தம் சீடர்களுக்கு வள்ளலார் வரைந்த கடிதங்களிலே, மேற்படிப் பாடலின் முதலிரண்டு வரிகளை எழுதி, அதனைத் தினமும் மறவாமல் சிந்தையில் கொள்ளுமாறு வற்புறுத்தியுள்ளார்.

இரத்தின முதலியார் என்ற தம் சீடருக்கு 20—9—1864-இல் அடிகள் எழுதிய கடிதத்தின் இறுதியில், 'சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க், கபாய மொருநாளு மில்லை' என்பதை சத்தியமாகக் கடைப் பிடிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார். (திருவருட்பா, பாலகிருஷ்ணப் பிள்ளை பதிப்பு, திருமுகப் பகுதி, பக். 31).

திரு. வேலு முதலியார் என்ற மற்றொரு அன்பருக்கு அடிகள் எழுதிய கடிதத்தில்,

"தாங்கள் அஞ்ச வேண்டாம். 'சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க், கபாய மொரு நாளு மில்லை—உபாயம், இதுவே மதியாமிதல்லாத வெல்

லாம், விதியே மதியாய் விடும்' என்ற ஔவையார் திருவாக்கு சத்தியம். சத்தியம். சத்தியம். ஆதலால், இதை இடைவிடாது சிந்தித்துக் கொண்டே வாருங் கள். தங்கள் பிணிகள் பறந்தோடிப்போம். இதை நம்ப வேண்டும்''

என்று கூறுகின்றார். ஔவையார் வாக்கினை வேத வாக் காகவே கருதினர் அடிகளார்

'முன்னோர் மொழிபொருளேயன்றி, அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவம்' என்பது நன்னூற் சூத்திரம். இதன்படி ஔவையாரின் பொருள் பொதிந்த பாடலையேயன்றி, அப்பாடலின் சொற்களையும் புனித மொழிகளாகக் கருதித் தம் பாடலிலே சேர்த்துச் சிறப்பித் துள்ளார் வள்ளலார்.

சான்றாக, திருவருட்பா முதல் திருமுறையில்— 'திருவருண் முறையீடு' என்னும் பதிகத்துள், 16-ஆவது பாடலில், 'சிவாய நமவென்று சிந்தை செய்யே' என்னும் வாசகத்தை இறுதியடியாக வைத்துள்ளதைக் கூறலாம் அப்பாடல் வருமாறு:

**காரே யெனுமணி கண்டத்தி னுன்பொற் கழலையன்றி**
**யாரே துணைநமக் கேழைநெஞ் சேயிங் கிருந்துகழு**
**நீரே யெனினுந் தரற்கஞ்சு வாரொடு நீயுஞ்சென்று**
***சேரே லிறுகச் சிவாய நமவெனச் சிந்தைசெய்யே***

பல்லாயிரம் அருட்பாடல்களைப் பாடிய பரம ஞானி யான வள்ளலார், ஔவையாரின் ஒரு பாடலிலே கவர்ச்சி யடைந்து, அதனைத் தாம் ஓதியதோடு, பிறரையும் ஓதத் தூண்டியதற்குக் காரணம், 'சிவாய நம' என்னும் மூல மந்திரத்தைப் போதிக்கும் தகுதியும் திறமையும் பெற்ற பரம குருவாக அவரைக் கருதியதுதான். அதனால்தான், தம் சீடருக்கு எழுதிய கடிதத்தில் ஔவையார் பாடலை எடுத்துக் காட்டியதுடன் நில்லாது, ''இது ஔவையார்

திருவாக்கு. சத்தியம். சத்தியம். சத்தியம். ஆதலால், இதை இடைவிடாது சிந்தித்துக் கொண்டே வாருங்கள். தங்கள் பிணிகள் பறந்தோடிப்போம்'' என்று கூறியுள்ளார்.

இக்காலைய தமிழ்ப் புலவர்கள் ஔவையாரை நீதி நூல் தந்த புலவராக மட்டுமே கருதுகின்றனர். 'பாம் பறியும் பாம்பின் கால்' என்பது போல, ஒரு ஞானி தானே அறிய முடியும் மற்றொரு ஞானியின் பெருமையை !

ஔவையார், புலவராக மட்டுமல்லாமல், இறையருள் பெற்ற ஞானியாகவும் விளங்கினாரென்பதை முன்னமே அறிந்தோம். ஐம்புலன்களையுமொடுக்கித் தவம் புரியும் யோகியாகவும் வாழ்ந்தாராதலால், பண்டைக்காலச் சித்தர்களில் ஒருவராக மதிக்கப்படுகின்றார். சித்த மருத்துவத்திலும் தேர்ச்சி பெற்று விளங்கினாரென்பதற்கு, ஔவையார் இயற்றியதாகச் சொல்லப்படும் 'பிடக நிகண்டு' சான்றாகும். யோக சித்தியிலும் அவர் சிறந்து விளங்கியதற்கு, ''உயர் ஞான சரநூல்'' எடுத்துக் காட்டாகும்.

திரு. கா. பச்சையப்ப முதலியார் என்பவர், ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை ஆகிய மூன்றையும் சேர்த்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளார் அதில் காணப்படும் ஔவையார் வரலாற்றில் கீழ் வருமாறு தகவல் தரப்பட்டுள்ளது :

> ''இவர் கண்டு பிடித்துள்ள ஒரு மூலிகையின் குணத்தால் 240 வருஷ காலம் வரையில் ஜீவித்திருந்து, பின்பு அக்கால வழக்கப்படி மஹாபிரஸ்தான கமனத்தில் இமயமலைக்குச் சென்று அவ்விடத்தில் இறந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.''

இது எந்த அளவுக்கு உண்மையோ யாமறியோம். ஆனால், இதுபோன்ற செய்திகள் ஔவையாரை,

சித்தர்களிலொருவராக, ஐம்புலன்கள் மீது ஆட்சி நடத்திய ஞானியாக மக்கள் கருதி வந்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன என்பது மட்டும் உண்மை. ஒளவையார் இயற்றிய ஞானக்குறள், அவரை ஒப்புயர்வற்ற ஞானியாகவே நமக்கு அறிமுகப்படுத்துகின்றது. இதனை, மகா கவியாகவும் சிறந்த ஞானியாகவும் விளங்கிய சுப்பிரமணிய பாரதியாரும் உறுதிப்படுத்துகின்றார்.

> "ஒளவை குறள் என்ற ஞான நூல் தமிழ்நாட்டு யோகிகளாலும் சித்தர்களாலும் உபநிஷத்துக்களுக்குச் சமானமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது. யோக சாஸ்திரத்துக்கும் மோக்ஷ சாஸ்திரத்துக்கும் இந்நூல் முக்கிய பாடங்களில் ஒன்றாகக் கருதத் தக்கது."

இது, 'பாரதி கட்டுரை' நூலினுள், 'தமிழ்நாட்டு நாகரிகம்' என்னும் கட்டுரையுள் காணப்படுவதாகும்.

ஒளவையாரின் ஞானோபதேசங்கள் அவருக்குப் பின் தோன்றிய ஞானியர்களால் பெரிதும் போற்றப்பட்டன. மரணத்தை யொழித்து, மரணமிலாப் பெருவாழ்வு பெற்றவராகக் கருதப்படும் இராமலிங்க வள்ளலார், ஒளவையாரை ஞானத்தாயாகவே கருதினார். அடிகளாரின் கொள்கைகளிலே தலையாயது, "மனிதன் சாவாமல் வாழ முடியும். வாழவும் வேண்டும்" என்பதாகும். இந்தக் கொள்கை, ஒளவையாருடைய போதனையாகும். "சாவாமற் கற்பதே கல்வி" என்பது ஒளவை வாக்கு.

வள்ளலாரும், "கற்கின்றேன் சாகாத கல்வி (அன்பு மாலை)" என்றும், "கற்றதென்றுஞ் சாகாத கல்வி" என்றும் பாடியுள்ளார்.

'ஒன்றாகக் காண்பதே காட்சி' என்பது ஒளவைப் பாட்டியின் பொன்மொழி. வள்ளற் பெருமானும்

''ஒன்றெனக் காணும் காட்சி என்றுருமோ ?'' என்று பாடினர் ''தெய்வம் ஒன்றே கண்டீர்'' என்பதனைச் செய்யுளின் இறுதி வாக்காக வைத்து, ''பதி விளக்கம்'' என்னும் தலைப்பில் ஒரு பதிகமே பாடியுள்ளார் வள்ள லார்.

சாவாத கல்வி பற்றியும் ஒன்ருகக் காணும் காட்சி பற்றியும் வள்ளலாருக்குப் போதித்த ஔவைப் பாடல் வருமாறு :

**ஒன்ருகக் காண்பதே காட்சி புலனைந்தும்**
**வென்ருன்தன் வீரமே வீரம்—என்ருனும்**
**சாவாமற் கற்பதே கல்வி ; தனைப்பிறர்**
**ஏவாமல் உண்பதே ஊண்.**

மற்றும், 'தெய்வம் ஒருவனே' என்றும் உணரவல்லீ ரேல் அருவினைகள் ஐந்தும் அறும்' என்றும் பாடியுள் ளார்.

ஒன்ருகக் காணும் காட்சிக்கே 'ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை' என்று பெயர் வைத்தார் அடிகளார். சுருங்கச் சொன்னல், ஔவையாரின் போதனைகளைச் சாதனைகளாக்கவே வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க சங்கங் கண்டார் எனலாம்.

வடலூர் அடிகள், பட்டினியால் வருந்தும் மக்களை நினைத்தபோதெல்லாம் உள்ம் பதறினர். உடைமையாளர் விலாப்புடைக்க உண்ணவும், வறுமையாளர் உண வின்றி வருந்தவுமான அவல நிலையை நினைந்தால், ''கொள்ளலேன் உணவு, தரிக்கிலேன் காயம்'' என்று வாய்விட்டுரைத்தார்.

**பட்டினி உற்ருர் பசித்தனர் களையால்**
**பரதவிக் கின்றனர் என்றே**
**ஒட்டிய பிறரால் கேட்டபோ தெல்லாம்**
**உளம் பகீரென நடுக் குற்றேன்.**

என்று பாடினர். ஔவையாரும்,

*1210—7*

—ஒருநாள்
**ஒருபொழுது ஒருவன் ஊண்ஒழிதல் பார்க்கும்**
**நேர்நிறை நில்லாது என்னுமென் மனனே !**

என்றார். ஒரே ஒரு நாளைக்கு—ஒரு பொழுதுக்கு—ஒருவன் பட்டினி கிடக்கப் பார்க்கினும் "இந்த இழி நிலை நீடித்தால், இவ்வுலகம் நிலைக்காது' என்று சொல்லுகின்றதே என் மனம்" என்று பாடியுள்ளார். ஆம்; மக்களுடைய பசியை ஒழிப்பதே பரமனுக்கு நிகழ்த்தும் வழிபாடு என்று கருதினர் ஔவையாரும் வள்ளலாரும். இத்துறையில், ஔவையார் வழிகாட்டி ; வள்ளலார், வாரிசு !

இராமலிங்கர், சாதிகளற்ற சமுதாயத்தைப் படைக்கப் பாடினார்; பாடுபட்டார். அவரது ஞானத் தாயான ஔவையார், 'சாதி யிரண்டொழிய வேறில்லை' என்று சாற்றி, வள்ளலாருக்கு வழிகாட்டினார்.

நாட்டின் செல்வத்தை யெல்லாம் தங்கள் தனிவுடைமையாக்கி, அதையும் புதைத்து வைக்கும் கள்வர்களைப் பார்த்து, "பாவிகாள்" என்று அழைத்து,

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்**
**கேடுகெட்ட மானிடரே...**

என்று ஏசினார் ஔவையார். அம்மூதாட்டியாரின் குரலையே ஒலி பரப்புவார்போல, "பிணம் புதைக்கச் சம்மதியீர்; பணம் புதைக்கச் சம்மதிக்கும் பேயரே நீர்" என்றார் வள்ளலார்.

தவத்திரு தண்டபாணி சுவாமிகள், 7000 பாடல்களால் 'புலவர் புராணம்' இயற்றியுள்ளார். அதில், 174 பாடல்களால் 'ஔவையார் புராணம்' பாடியுள்ளார். முருகனருள் கைவரப் பெற்றவரான அந்த ஞானியார், ஔவைப் பெருமாட்டியைத் தன் குருவாக மட்டுமின்றி, தெய்வமாகவும் கருதித் துதிபாடி, வழிபட்டார்.

தண்டபாணி சுவாமிகள், "ஔவையார் பதிகம்" என்பதாக ஒரு கவிதை நூல் பாடியுள்ளார். ஒரு வெண்பாவும் அறுசீர் விருத்தம் பதினொன்றும் கொண்ட அந்த நூலில், ஒவ்வொரு விருத்தத்தின் இறுதியிலும் ஔவையாரின் சிறப்பியல்புகளை எடுத்தோதுகின்றார் சுவாமிகள். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்:

பைந்துணர்க்கொன் றையும்அறுகும் கூவிளமும்
புனைந்துலவும் பவளம் போலும்
ஐந்துகரத் தொருபெருமான் அருட்கடலில்
குளித்துமகிழ் ஔவை யாரே!

மைந்நாகம் பொருதிரள்தோள் அரையரொடு
மூவர்களும் வந்து போற்ற
அந்நாளில் ஒருசிறுமிக்கு அரியமணம்
முடித்தருளும் ஔவை யாரே!

வாரணமா முகத்தானை மனக்கமல
மிசையிருத்தி மகிழும் அம்மே!
ஆரணத்தோடு ஆகமத்தின் பொதுநீதி
யுணர்ந்துரைக்கும் ஔவை யாரே!

மறவாத மறுத்தமுழுப் புலமையுளார்
உணர்ந்திறைஞ்சும் வண்மை யாளே!
அறமாதி அவைநான்கும் தொகுத்தொருபா
டலிற்பகர்ந்த ஔவை யாரே!

பூவிட்த்தில் உறைவான்கை என்தலையில்
எழுதும்விதி பொல்லா தேனும்
நீவிரும்பி ஒருமாற்றம் நிகழ்த்திலுய்யத்
தகும்எனவே நினைவேன் கண்டாய்
காவிரியும் பொருநையும்தந் தருள்ஒருவன்
துதிக்கைவழி கயிலை சேர்ந்தாய்
ஆவியனைத் தினுக்குமொரு பொதுக்கருணை
விதிவிதித்த ஔவை யாரே!

தண்டபாணி சுவாமிகள் தாம் இயற்றிய சமய நூல்கள் பலவற்றிலும் இடையிடையே ஔவையாரின்

போதனைகளையும் சாதனைகளையும் எடுத்துக் காட்டியுள்ளார். "நானிலைச் சதகம்" என்னும் நூலில்,

"......ஔவை, தெய்வப் புலவன் போல்வார்
சொல்லுமுன்னூல் களும்விளம்பும், அவற்றைப் போலும்
துணை,சிறிதும் தவநெறியில் தோய்வார்க்கில்லை."

என்ற வரிகளில், "வள்ளுவன் திருக்குறளும் ஔவையின் ஞானக் குறளுமே தவஞானியருக்குத் துணை" என்று கூறுகின்றார். அதே நூலில்,

"ஆலயத்தின் பணிமுழுதும் சரியையேயாம்
அதையன்றோ சாலநன்றென்று ஔவை சொன்னாள்"

"ஔவைமுத லானபல பெரியோர் முன்னாள்
ஆனைமுகக் கணபதியை அருச்சித் துய்ந்தார்"

என்று பாடியுள்ளார்.

மற்றொரு பாட்டினுள், "காணமல் ஔவைமுதல் சிலரே போலக் கவின் உடலோடு ஏகலையும் கழிக்கொணாது" என்ற வரிகளில், ஔவையார் உடலோடு கயிலாசஞ் சென்றதாகச் சொல்லப்படும் செய்தி பொய்யன்று என்கின்றார்.

இன்னும், ஔவையின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே தாம் உலகத்தார்க்கு அறிவுரை கூறுவதாக,

"ஆலயத்திற் போய் வணங்கல் சாலநன்றென்(று)
ஔவை சொன்ன மொழிப்படியே......
நாலமிசை வாழ்பவரும் உய்யுமாறு
நல்விரதம் ஆகியவை நவில்கின்றேனே."

என்ற வரிகளில் வலியுறுத்தியுள்ளார்.

"மனுநெறித் திருநூல்" என்னும் மற்றொரு நூலில், தெய்வ வணக்கத்திற்கு அடுத்தபடியாகக் 'குருவணக்கத்'துள்,

பல்இல் முதுவாயால் பலநீதி யும்தொகுத்துச்
சொல்லினளை யெள்ளார்சொற் சொல்

எனப்பாடி, தம் குருவாகக் கருதும் ஔவையாரைப் பரவு கின்றார்.

"தமிழலங்காரம்" என்னும் தமது நூலொன்றில், தம் தாய்மொழியான தமிழின் பெருமையைப் பாடும் தண்டபாணி சுவாமிகள், ஔவையார் பாடிய தமிழ்ப் பாடல்களையே சான்று காட்டுகின்றார்.

"செந்தமி ழால்ஒரு சீதக்களபச் செழும்அகவல்
தந்தமொன் றுள்ளமுன் னேன்மிசை பாடிய தன்மையினல்
சுந்தர மூர்த்தியும் சேரர்பி ரானும் துணுக்கமுற
அந்தண் கயிலையிற் சென்றிருந் தாள்ஔவை அக்கணத்தே

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மக்கள் ஔவை யாரைக் கலைமகளின் அவதாரம் எனக் கருதி, அப்பெரு மாட்டிக்குக் கோயில் அமைத்து வழிபட்டு வருகின்றனர். 'முப்பந்தல்' என்னும் ஊரில் ஔவையார் கோயில் அமைந்துள்ளது. இதனைப் 'புலவர் புராணத்'துள்,

முப்பந்த ரெனும்பெயரக் காட்டினுக்கிங் நாளுமிக மொழிவா [ராங்கு
செப்பந்த முலையுடைப்பெண் தேவதையென் றும்பெரிது [திகழுமாதோ

என்ற வரிகளில் தண்டபாணி சுவாமிகளும் அறிவிக் கின்றார்.

சுவாமிகள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந் தவராதலால், ஔவையாரைத் தெய்வமாகவே கருதினார்.

"முன்னையாய்ப் புலமைச்சீரின் முதல்வியாய் உலகோர்க்
அன்னையாய்த் திகழ்வாள்..." [கெல்லாம்

''அளக்காத பெரும்புகழ்ச்சீர் ஔவையார்''
''அணிபெருமை யாரறிவார் அருட்பேறு விழைந்
[துழைப்போர் அறியலாமே''

என்றெல்லாம் தம் தெய்வமாகக் கருதும் ஔவைப் பாட்டிக்குப் புகழ் மாலை சூட்டுகின்றார்.

அறிவும் வீரமும் பொருந்திய ஔவையாரை 'கிழவி' என்று உலகோர் சொல்வதை வெறுக்கின்றார் தண்டபாணி சுவாமிகள்.

வற்றன்மர மனையாற்கிம் மாணவகுத் திட்டதனால் மலரோற்
கந்நாள்
அற்றதலைபோக வமைந்துள்ளதலை நான்கினையு மலறப்
போர்த்துச்
செற்றமொழிப் பேனவனைக் காணுறிலென்றொரு கவிதை
செப்பினளக்
கொற்றமுடை யாளையுமோர் கிழவியென உலகுரைக்கை
கொடுமையம்மா!

தண்டபாணி சுவாமிகளின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி சுந்தரத்தம்மை அவர்கள், ''பெண் மாட்சி'' என்னும் கவிதை நூல் ஒன்றை இயற்றியுள்ளார். பெண்ணினத்தின் பெருமைகளை எல்லாம் எடுத்துக் காட்டும் அந்நூலினுள்,

—ஞாலமுற்றும்
மாதாவென் றென்றும் வழுத்துபுகழ் ஔவையைப்போல்
மீதாம் புலமை பெற்றோர் வேறுண்டோ—ஏதாலோ
அன்னவளும் பெண்கட்(கு) அடக்கம் பகர்ந்ததன்றித்
துன்னும் அகங் கார முறச்சொல்ல வில்லை.''

என்று பாடியுள்ளார்.

ஆதிசங்கரர், கடவுளின் அவதாரம் என்பர். அந்த அவதார புருஷர், முப்பது வயதுக்குள் ஒப்பற்ற சாதனை

கள் புரிந்தார். அவர் நிறுவிய காஞ்சி காமகோடி பீடத்திற்கு வழிவழி வரும் அதிபதிகளுக்கும் 'சங்கராச்சாரியார்' என்ற பட்டப்பெயர் உரிமையாக்கப்படுகின்றது.

தற்போது நம்மிடையே வாழ்ந்துவரும் 'பெரியவாள்' என்று அழைக்கப்படும் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், 'தவயோகி' என்று சொல்லத்தக்க சிறப்புடையவராவார். மாணிக்கவாசகர் பாடியது போல, "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி, உவப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து" வாழும் அந்த ஞானியார், ஔவைப் பெருமாட்டியின் அருமை பெருமைகளை அறிந்து, தாம் அறிந்ததனை தம் பக்தகோடிகளுக்கும் எடுத்துரைத்து வருகின்றார். ஔவையார் பற்றி ஆசாரிய சுவாமிகள் கருத்து வருமாறு:

> "தமிழ்ப் பாஷை தெரிந்தவர்களுக்கு ஔவை யார் என்றால் தெரியாமல் இருக்காது. அவளுடைய ஒரு வாக்கியமாவது எல்லாருக்கும் தெரிந்திருக்கும்."

[ஆசாரிய ஸ்வாமிகள் உபந்நியாசங்கள்: பாகம்-2, பக்கம். 47]

> "ஔவை வாசகத்தில் பொய்யே இருக்காது ஏதாவது ஒரு விஷயம் 'பொய் இல்லை, உண்மை தான்' என்பதற்கு, 'இது வேதவாக்கு' என்பார்கள். வேதவாக்கு என்றால் சத்திய வாக்கு என்று பொருள். அதற்கு அடுத்தபடி, 'ஔவை வாக்கு' என்று சொல்வது வழக்கம். ஔவை வாக்கு என்றால் சத்தியம்."

[ஆசாரிய ஸ்வாமிகள் உபந்நியாசங்கள்; பாகம்-1, பக். 59]

வேதங்களைக் கசடறக் கற்று, 'வேத வாக்கு' என்பதன் உண்மைப் பொருள் உணர்ந்த பெரியவாள், "வேத வாக்குக்கு அடுத்தபடியானது ஔவை வாக்கு" என்று கூறுகின்றாரென்றால், அம்மூதாட்டியின் பெருமைக்கு வேறு என்ன சான்று வேண்டும்.

வேதங்கள் மனிதரால் எழுதப்படாமல் இறைவனால் அருளப்பட்டதென்பது ஆன்றோர் கண்ட முடிவாகும். ஆகவே, வேத வாக்கு என்றால், ஆண்டவன் வாக்கு என்று பொருளாகும். அந்த ஆண்டவன் வாக்குக்கு அடுத்தபடியாக மானிடர் வாக்குக்கு மதிப்புண்டானால், அது ஔவை வாக்குதான் என்கிறார் ஆசாரிய சுவாமிகள். சரியான மதிப்புரை.

'தேவ மொழி' எனப்படும் வட மொழியில் பெரும் புலமை பெற்ற 'பெரியவாள்', குழந்தை இலக்கியமாகக் கருதப்படும் ஔவையின் ஆத்திசூடியிலே கவர்ச்சியடைந்தவராகி, அதன் சூத்திரங்களுக்கு வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் வியாக்கியானம் கூறி வருகின்றார்.

> "கலாசாரம், 'கல்சர்', 'பண்பாடு' எல்லாம் ஒன்றுதான். எல்லாவற்றுக்கும் மூலம் 'கல்' என்பது. 'இளமையில் கல்' என்பர்."
>
> [ஆசாரிய சுவாமிகள் உபந்நியாசங்கள்; பாகம்–3, பக். 42]

> "இளமையில் கல்" என்று ஔவை சொல்கிறாள்.
>
> "அவள்...'பால்ய வயசில் கல், கற்றுக்கொள், படி' என்கிறாள்.
>
> "ஔவை வேறோர் இடத்தில்,

> கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
> அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
> நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
> மாட்டா தவன்நல் மரம்

என்று, படிக்காதவன் மரத்திற்குச் சமானம்; அவன் மனிதன் அல்ல' என்று வைதிருக்கிறாள்.

"இளமையிற் கல்" என்று ஔவை சொன்ளுளே, அந்த இளமை என்பது பிரம்மசரிய ஆசிரமம். விவாகம் ஆவதற்கு முந்தி, அவனுக்கு விஞத் தெரிந்த பிறகு இருக்கக்கூடிய காலம். அதற்குள் படிக்க வேண்டும்."

[ஆசாரிய சுவாமிகள் உபந்நியாசங்கள்; பாகம்-1, பக். 59-60]

'பெரியவாள்' ஆத்திசூடியிலுள்ள 108 சூத்திரங்களிலே, 'இளமையில் கல்' என்பதனை மூல சூத்திரமாகக் கருதியவராகி, 'இளமை' என்பதற்கு 'பிரம்மசரிய ஆசிரமம்' என்று பொருள் கூறியிருப்பது போற்றத் தக்கதாகும். ஆத்திசூடி பாடிய ஔவையாரை வெறும் புலவராக அல்லாமல், ஐம்புலன்களை வென்ற ஞானியாகக் கருதுகின்ருர் சுவாமிகள். இதனை அவரது பொன் மொழிகளைக் கொண்டே அறிவோம் :

"ஔவையார் எழுதியிருக்கும் புஸ்தகங்களுக்குள் ஒன்று விநாயகர் அகவல். அது முழுக்க முழுக்க யோக சாஸ்திரம். 'எப்படித் தியானம் பண்ணவேண்டும்? குண்டலினி சக்தியை ஸஹஸ்ராரத்திற்கு எழுப்புவது எப்படி?' என்பவை போன்ற பல சூக்ஷ்மமான கருத்துக்களை, யோக சாஸ்திர விஷயங்களை—விநாயகர் அகவல் மூலம் ஔவையார் தெரிவித்திருக்கிருர்கள்.

"விநாயகர் பிரணவ ஸ்வரூபி. துதிக்கையோடு இருக்கிற அவர் சிரசு, கையிலே இருக்கும்படியான மோதகம் இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் பிரணவம் மாதிரியாக இருக்கும்.

"அந்தப் பிரணவத்தைப் புருவத்தின் மத்தியில் தியானம் பண்ணிக் கொண்டு, ஔவையார் பண்ணின அனுக்கிரகந்தான் விநாயகர் அகவல். யோக

சாஸ்திரம், தியானம் பண்ணுகிற முறை எல்லாம் அதில் இருக்கின்றன."

[ஆசாரிய சுவாமிகள் உபந்நியாசங்கள்
பாகம்-2, பக். 47-48

தமிழகத்தில் வாழையடி வாழையெனத் தோன்றிய தவயோகிகளில் ஒருவராகி, நம் தலைமுறையில் வாழும் உண்மை யோகியாக விளங்குகின்ற ஆசாரிய சுவாமிகள் ஔவையாரின் யோகபலத்தை தம் அனுபவ ஞானத்தைக் கொண்டு மதிப்பிட்டிருக்கிறார்.

'ஆத்திசூடி'—'கொன்றைவேந்தன்' என்னும் பெயர்களில் ஔவையார் இயற்றியுள்ள நீதி நூற்களுக்கு ஆசாரிய சுவாமிகள் தந்துள்ள விளக்கம் வருமாறு:

"ஆத்திசூடி என்றால் பரமேசுவரனுக்குப் பெயர். ஆத்திப் பூ, சந்திரனைப்போல இருக்கும்.

"இன்னொரு பூவையுங்கூட அவர் சூட்டிக் கொள்வார். அதுதான் கொன்றைப் பூ. பஞ்சாட்சர மந்திரத்திற்குப் பிரணவத்தைச் சேர்த்தால் ஆறு அக்ஷரம். அந்த ஆறு அக்ஷரமும் ஆறு தளங்கள் மாதிரி. கொன்றைப் பூவுக்கு ஆறு தளங்கள் உண்டு. அந்த ஆறு தளங்களுக்கு மத்தியில் கிரந்தத்திலே பிரணவம் எழுதினால் எப்படி இருக்குமோ? அப்படிக் கேசரம் இருக்கும்.

"ஆறு தளங்களோடு சேர்ந்த பிரணவம் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது கொன்றைப் பூ. அது ஈசுவரனுக்கு மிகவும் பிரீதியான புஷ்பம். அவன் எப்போதும் கொன்றை மலர் அணிந்துகொண்டிருக்கிறான். தமிழில் தேவாரம் பாடுகிறவர்கள் கொன்றை அணிந்தவனாக அவனைப் பல இடங்களில் பாடியிருக்கிறார்கள். 'மின்னார் செஞ்சடைமேல் மிளிர்க்

கொன்றை அணிந்தவனே' என்ற தேவாரம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்."

[ஆசாரிய சுவாமிகள் உபந்நியாசங்கள்;
பாகம்-2, பக். 48-49]

வியாசர் தந்த பிரம்ம சூத்திரத்திற்கு வியாக்கியானங் கூறிப் புகழ்பெற்றார் ஆதிசங்கரர். நம்மிடையே வாழும் தற்கால சங்கரர், ஔவையின் ஆத்திசூடிச் சூத்திரங்களுக்கு வியாக்கியானங்கூறி, தமிழ் மொழியின் புகழை வளர்க்கிறார்.

# சமயக் கொள்கை

ஔவையார் தம் காலத்தில் நிலவிய சமய நெறிகளில் சைவ நெறியையே கடைப்பிடித்தார் எனலாம். இதனை, 'சிவத்தைப் பேணிற் தவத்திற்கழகு' என்ற வாக்கு வலியுறுத்தும். சமயம் வேறு; சமய நெறி வேறு. சமயம் கர்த்தாவன்று; கருவியே. தெய்வ நெறி பரவப் பயன்படும் நிறுவனமே சமயம். சமய நெறியினும் சமய நிறுவனத்துக்கே அதிக மதிப்பு தருவதால்தான் சமயங்களிடையே பூசல்கள் தோன்றுகின்றன. இந்த உண்மையை உணர்ந்தவர் ஔவையார். அவர், சைவ நெறியினராயினும், வெறியினரல்லர்.

ஔவையார் நீதி நூல் பாடிய காலத்தில், சைவ சமயமே யன்றி, வைணவ சமயமும் இருந்தது. சைவர் 'சிவன்' எனப்படும் தெய்வத்தை வழிபட்டால், அதனினும் நாம—ரூப வேறுபாடுடைய 'திருமால்' என்னும் தெய்வத்தை வழிபட்டனர் வைணவர். இந்த இருவேறு சமயங்களிடையேயும் சமரசங் காண விழைந்தார் ஔவையார். அதனால், 'திருமாலுக்கு அடிமை செய்' என்று குறிப்பிட்டார். சமய வேறுபாடுகளை ஏற்போர், அவற்றிடையே சமரசத்தை வளர்க்கவும் பொறுப்பேற்க வேண்டும்.

சைவமும் வைணவமும் வேத நெறியைத் தழுவுகின்ற அகச் சமயங்களாகும். வேத நெறியை ஏற்காத சமணம்—பௌத்தம் ஆகிய புறச்சமயங்களும் ஔவையார் காலத்தில் இருந்தன. சமயங்களிடையே சமரசங்காண விரும்பிய ஔவையார் புறச் சமயங்கள் பற்றி எதுவும் கூறியதாகத் தெரியவில்லை. இதனால், அந்தச் சமயங்

கள்பால் அவர் காழ்ப்பு காட்டவில்லை என்பது புலனு கின்றது. ஆனால், தெய்வ நிந்தனையாளரை ஔவை யார் வெறுத்தார். இதனை, 'தெய்வம் இகழேல்' என்ற ஆத்திசூடி வாக்கியத்தால் அறிகின்றோம்.

'சமரசவாதி' என்றால், தனக்கென ஒரு சமயமோ, வழிபடு மூர்த்தியோ இல்லாதவர் என்று பொருளாகாது. ஔவையார் நிலை அதுவன்று. அவர், சமயங்களிடையே சமரசத்தை விரும்பிய நிலையிலேயே, தமிழகத்தின் பூர்வ நெறியான சைவ நெறியைப் பின்பற்றியதோடு, அதற் கான பழக்க வழக்கங்களையும் கடைப்பிடித்தார். பிறரை யுங் கடைப்பிடிக்கத் தூண்டினார். "நீறில்லா நெற்றி பாழ்" என்ற 'நல்வழி' வாக்கியத்தால், நெற்றியில் நீறு பூசி வாழும் சைவ நியதியைக் கடைப் பிடிக்குமாறு மக்களுக்குப் போதித்தார்.

ஔவையார், பாவ—புண்ணியங்களில் நம்பிக்கை கொண்டவராவார். இதனை,

**புண்ணியம்ஆம் பாவம்போம் போனநாட் செய்தஅவை**
**மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்**
**ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்**
**தீதொழிய நன்மை செயல்**

என்ற 'நல்வழி'ப் பாடலால் அறிகிறோம்.

கோயில் வழிபாட்டையும் மக்கள் கடைப்பிடித் தொழுகத் தூண்டினார் ஔவையார். இதனை, "ஆலயம் தொழுவது சாலவு நன்று" என்ற வாக்கியத்தால் அறி கின்றோம். 'வையந்தோறும் தெய்வந்தொழு' என்றும் கூறினார்.

நெற்றியில் நீறு பூசி, ஒவ்வொரு நாளும் விடியற் காலை நேரத்தில் கோயில் வழிபாடு நிகழ்த்த வேண்டு

மென்று கூறிய தமிழ்ப் பாட்டி, வழிபாட்டின்போது ஓத வேண்டிய மந்திர மொழியையும் கூறியுள்ளார். அது, "சிவாய நம" என்பதாம். அந்த மந்திரத்தை ஓதுவார் அடையும் பலனைப் பற்றியும் 'மூதுரை'யில் பாடியுள் ளார்.

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

"ஆலயஞ் சென்று இறைவழிபாடு நிகழ்த்த வாய்ப் பற்றோர், தெய்வ சிந்தனையோடு இல்லறக் கடமைகளில் ஈடுபட்டாலும் பலனுண்டு" என்பார்போல, "தெய் வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்" என்று போதித் தார்.

தன்னம்பிக்கையின் பெருமையை உணர்த்திய ஔவையார், 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ப தனையும் வலியுறுத்த,

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்

என்று பாடினார்.

தெய்வத்தை இகழ்வோர் ஔவையார் காலத்திலும் இருந்தனர். அன்னார், இருவகையினர். ஒருவகையினர், தெய்வ நம்பிக்கையற்றவர். மற்றொரு வகையினர், தெய்வ நம்பிக்கை யிருந்தும், வாழ்க்கையில் துன்பம் நேருங்கால், ஆற்றாமையால் தெய்வத்தை நிந்திப்போர். முன்னவர், நாத்திகர்; பின்னவர், ஆத்திகராயினும் மூட நம்பிக்கையினர். நாத்திகர்பற்றி ஔவையார் எதுவும்

கூறவில்லை. அவர்களை மறப்பதே நல்லதென்று நினைத்தார் போலும்! ஆனால், கருதியது கைகூடாத காலத்தில் தெய்வத்தை நிந்திக்கும் மூடர்களைப் பார்த்து, "வீணை தெய்வத்தை இகழ வேண்டாம்" என்றும், 'தெய்வம் இகழேல்' என்றும் அறிவுரை கூறுகின்றார். மற்றும்,

**செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ இருநிதியம்—வையத்து**
**அறுபாவம் என்னவறிந்து அன்றிடார்க் கின்று**
**வெறும்பானை பொங்குமோ மேல்**

என்றும் பாடினார். எவ்வளவு தவஞ் செய்தவனாயினும், தெய்வத்தின் சீற்றத்திற்காளாவானாயின், அவன் தவமனைத்தும் பாழாகிவிடும் என்பதனை, 'தெய்வம் சீறிற் கைதவமாளும்' என்ற வாக்கால் உணர்த்தினார்.

ஔவையார் காலத்தில், கோயில்கள் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சாதனங்களாகவும் திகழ்ந்தன. பஞ்சாயத்து மன்றம், சமய வாதங்களுக்கான பட்டி மன்றம் ஆகியவை கோயில் மண்டபத்திலேயே நடைபெற்றன. வீதிகளில் விளக்கேற்றவும், ஊர் மக்களுக்கான குடிநீர் வழங்கவும், ஊர் விட்டு ஊர் செல்லும் யாத்திரிகர்களுக்கு உணவு கொடுக்கவும் கோயில்களே பொறுப்பேற்றிருந்தன. மற்றும், மருத்துவம்—கல்வி ஆகிய பணிகளும் பெரும்பாலும் கோயில் பொறுப்பிலேயே நடைபெற்றன. சுருங்கச் சொன்னால், இன்று ஊராட்சி மன்றங்களும் ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களும் நகர மன்றங்களும் நிறைவேற்றி வருகின்ற பொதுப் பணிகளில் பலவற்றை அன்று கோயில்களே மேற்கொண்டிருந்தன. கோயிலில்லா ஊர்களில் மக்களுக்கு வாழ்க்கை வசதிகள் போதுமான அளவுக்கு கிடைக்காதாகையால், "**கோயிலில்லா ஊரிற்குடி யிருக்க வேண்டாம்,**" என்றார் 'உலக நீதி'யில்.

சமயத்தால் சைவரான ஔவையார், கணபதியையே வழிபடு மூர்த்தியாகக் கொண்டு வாழ்ந்தார் தம் நீதி நூல்களில் கணபதிக்கே கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். கணபதி வழிபாட்டிற்கென்றே தனியாக வேழமுகம், விநாயகரகவல் ஆகிய நூல்களை இயற்றினார்.

ஔவையார், "நோன்பென்பதுவே கொன்று தின்னுமை" என்ற வாசகத்தில் கொல்லா விரதத்தையும், 'வீடு பெறநில்" என்ற வாசகத்தில் மோட்சமடைவதன் அவசியத்தையும் வற்புறுத்தியுள்ளார்.

'ஆத்திசூடி'யில் "ஆத்திசூடி அமர்ந்ததேவனை, ஏத்தியேத்தித் தொழுவோம் யாமே" என்றும்; 'கொன்றை வேந்தனி'ல் "கொன்றை வேய்ந்தோன் செல்வன் அடியினை என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே" என்றும்; மூதுரையில்,

> **வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்**
> **நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு**
> **துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்**
> **தப்பாமற் சார்வார் தமக்கு**

என்றும்; 'நல்வழி'யில்,

> **பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
> **நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்—கோலஞ்செய்**
> **துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்**
> **சங்கத் தமிழ்மூன்றுந் தா**

என்றும் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இதனால், சமயங்களிடையே சமரசங் காண விரும்புவாரும் தமக்கென ஒரு சமயத்தையும் வழிபடு மூர்த்தியையும் பெற்றிருப்பதில் தவறில்லை யென்பதை நமக்கு உணர்த்தியுள்ளார் ஔவையார்.

நம் தமிழ் மூதாட்டியார் புதுமையை வரவேற்கும் சமரசவாதியாயினும், பழமையைப் பழிப்பவரல்லர்; பாராட்டுபவர். இதனை, 'தொன்மை மறவேல்' என்ற ஆத்திசூடி வாக்கியத்தால் அறிகிறோம்.

ஔவையாருக்கு முன்னும் பின்னும் தோன்றிய ஞானியர்கள் கடவுளை அம்மை யப்பராகக் கருதி வழிபட்டனர். மாணிக்கவாசகர் தம் திருவாசகத்துள், ஆண்டவனை 'அம்மையே அப்பா!' என்றும், வள்ளற் பெருமான், தம் திருவருட்பாவில், 'அம்மை யப்பா' என்றும் அழைத்தனர்.

நம் ஔவைப் பெருமாட்டியோ, "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற வாசகத்தில், அன்னையும் தந்தையுமான பெற்றோரையே முதல் தெய்வங்களாகக் கூறியுள்ளார். "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்பதும் ஔவை வாக்காகும். ஔவை மூதாட்டியார், இறை வழிபாட்டினை இல்லறக் கடமைகளோடு இணைத்து வைத்துள்ள சிறப்பு போற்றத்தக்கதாகும். இல்லறமே அனைத்து அறன்களின் அடிப்படை என்பதனை உணர்த்தவேண்டி, "இல்லறமல்லது நல்லறமன்று" என்றார். தம்மளவில், தொண்டு மனப்பான்மை காரணமாக இல்வாழ்க்கையைத் துறந்தாரெனினும், பிறருக்கு அதனைப் போதிக்கவில்லை யென்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். இல்லறம் நல்லறமாக அமையாதபோதுதான் துறவறம் சிறந்ததென்கிறார்.

ஔவையாரின் சமயக் கொள்கைகளைச் சிந்தித்தால், அப்பெருமாட்டியார், ஆதிசங்கரர்—இராமானுஜர் போன்ற சமயாச்சாரியர்களுடன் சேர்த்து எண்ணத்தக்க சிறப்புடையவர் என்பது புலனாகும்.

சமயத் தலைமை ஆண்களுக்கே உரிமையன்று; அத்தலைமையைப் பெறுவதற்கான தகுதியும் திறனும்

பெண்களுக்கும் உண்டு என்பதனை உலகுக்கு உணர்த்திய பெருமை ஒளவைப் பெருமாட்டி ஒருவருக்கே உரிமை. இந்த உண்மையை உள்ளடக்கியே, "வேத வாக்குக்கு அடுத்தது ஒளவை வாக்கே" என்றார், ஆசாரிய சுவாமிகள்.

# தமிழ்த் தொண்டு

தமிழ் மொழி, "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடி"யின் தாய்மொழியாகும். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ் வளர்ச்சிக்கென்று தனியாக சங்கம் கண்ட பெருமை தமிழ் இனத்தாருக்கே உரிமை என்பதை முன்பே கூறினோம்.

## இலக்கணம் எதற்கு?

மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ் மொழிக்கு இலக்கணம் தோன்றிவிட்டது. பிறமொழிகளுக்கு "இலக்கணம்"என்றாலே, எழுத்துக்கும் சொல்லுக்கும் விளக்கம் கூறுவதோடு முடிந்துவிடும். தமிழ்மொழி இலக்கணமோ, எழுத்தொடும் சொல்லொடும் நில்லாது, மக்களுடைய வாழ்க்கை நெறிகளையும் கூறுகின்றது. ஆம்; "எப்படியும் வாழலாம்" என்னும் நியதியுடைய மக்கள் பேசும் மொழிகளுக்கெல்லாம் பொருளிலக்கணம் இல்லை. "இப்படித்தான் வாழவேண்டும்" என்னும் நீதிகண்ட தமிழர் மொழிக்குப் பொருளிலக்கணம் உண்டு. ஆதி இலக்கணமான "அகத்தியம்" மறைந்து போனாலும், அதன் அடியொற்றி எழுந்த "தொல்காப்பியம்" என்னும் இலக்கண நூலில், எழுத்து—சொல்—பொருள் என்னும் மூன்று பகுதிகள் அமைந்திருக்கக் காண்கின்றோம். எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் படைப்பதே, பொருளைப் பயிலும் பொருட்டுத்தான். பொருளைப் பயிலாவிடில், எழுத்தையும் சொல்லையும் பயில்வதால் பயனில்லை என்பது தமிழ்ச் சான்றோர் கண்ட முடிவாகும். இதனை,

"எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதி காரத்தின் பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறேமே எனின், இவை பெற்றும் பெற்றிலேம்."

[களவியல்-இறையனுரகப் பொருள்]

என்பது களவியலுரையாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் மொழிக்கு வாழ்வும் வளர்ச்சியும் தரப் பாடுபட வாழையடி வாழையெனக் கவிஞர் பெருமக்கள் தோன்றி வந்துள்ளனர். அவர்களிலே ஒருவர் ஔவைப் பெருமாட்டியார். தமிழ் மொழிக்கு வாழ்வளித்த பணியிலே அம் மூதாட்டிக்குள்ள சிறப்பு தனியானதாகும். அத்துறையில் அவருக்கு இணையாக இன்னொரு கவிஞரை எண்ணிப் பார்ப்பதற்கும் இல்லை.

தமிழை, 'தாய்மொழி' என்று கூறிப் பெருமைப் படுத்துகிறோம் ; நாமும் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். பாரதியார், ஔவையாரைத் தமிழ்த் தாயாகவே கருதி, 'தமிழ் மகள்' என்று தமது 'பாப்பாப் பாட்டி'ல் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மொழியின் தாய் வடிவமே ஔவைப் பெருமாட்டி. அம் மூதாட்டி தந்த ஆத்திசூடியிலிருந்து தான் தமிழ் இலக்கியப் படிப்பு ஆரம்பமாகின்றது. அதனுலும் தமிழ் நமக்குத் தாய்மொழியாகின்றது போலும் !

**'தமிழப் பாதிரி!'**

ஔவையார், திருமணம் செய்துகொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபடாமல் துறவியாகவே வாழ்ந்தது, தமிழ் மொழிக்குத் தொண்டு செய்யும் பொருட்டேயாகும். பற்றற்றான் பற்றினைப் பற்றிக் கொள்வதற்காகவே உலகப் பற்றுக்களை விட்டு, துறவு வாழ்க்கை மேற்கொள்வது வழக்கம்—வரலாறு. இதற்கு மாருக, தம் தாய் மொழி

யான தமிழிடத்துக்கொண்ட ஆழ்ந்த பற்றுதல் காரண மாக, அந்த மொழிக்கு அழியாப் புகழ் தேடும் பொருட்டு, பட்டி தொட்டிகள் எல்லாம் தமிழ் ஞானத்தைப் பரப்பும் தொண்டு புரிவதற்காகத் துறவு நிலையை மேற்கொண் டார் ஔவையார். பெண்ணொருத்தி பெற்ற இந்தப் பெருமைக்காக பெண்குலம் முழுவதுமே பெருமிதம் கொள்ளலாம்.

ஔவையார், தம் காலத்தில் வாழ்ந்த தமிழ் வேந்தர் களிடமெல்லாம் எல்லையற்ற செல்வாக்குப் பெற்றிருந் தார். பாடித் திரியும் வானம்பாடி என ஊர்ஊராக ஓடித் திரிந்த அந்தப் பெருமாட்டியை வரவேற்று விருந்தளித்து உபசரிப்பதிலே பெருமை கண்டனர் அந்நாளைய வேந் தர்கள். ஔவை இசைந்திருந்தால், தம்முடைய மாளி கையில் நிரந்தரமாக வைத்து, அந்தக் கவியரசியை வழி பட்டு வாழ்வுபெறப் போட்டியிட்டிருப்பர் புவியாண்ட மன்னர்கள். ஆனால், அரண்மனை வாழ்வை வெறுத்து, அரச போகத்தை ஏற்க மறுத்து, பட்டி தொட்டிதோறும் சுற்றி அலைந்து, கையில் தடியூன்றி, கால் கடுக்க நடந்து, அன்பு வடிவமான ஏழை எளியவர்கள் கொடுத்த கூழமுதை உண்டு தமிழகமெங்கும் தமிழ் ஞானம் பரப் பினர் அவர், 'உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும் என்றன் மனம்' என்று பாடியுள்ளார். அவ ரன்றோ மக்கள் கவி! அவரை ஒரு 'தமிழப் பாதிரி' என்றே கூறலாம்.

## குழந்தை இலக்கியம்

தமிழ் மொழியில் குழந்தை இலக்கியமே இல்லை என்று கூறப்படுகிறது. இதுபொறுத சிலர், பிள்ளைப் பிரபந்தங்களைக் காட்டி, ''இதோ குழந்தை இலக்கியம்'' என்று கூற முற்படுகின்றனர். குழந்தைகள் படித்துச்

சுவைப்பதற்கான இலக்கியம் வேறு. குழந்தைகளைப் பற்றிப் பெரியோர்கள் படித்துச் சுவைப்பதற்கான இலக்கியம் வேறு. முன்னதுதான் குழந்தை இலக்கியம். பின்னது, குழந்தைபற்றிய இலக்கியமே. தமிழிலுள்ள பிரபந்த வகையைச் சார்ந்த பிள்ளைப் பிரபந்தம், குழந்தையைப் பற்றிய இலக்கியமாவதன்றி, குழந்தை இலக்கியமாகாது. பல நூற்றுண்டுகட்கு முன்பே தோன்றிய குழந்தை இலக்கியங்கள் தமிழில் உள்ளன. அவை தமிழ் நெடுங் கணக்கின் எழுத்து வரிசை முறையிலே ஔவையார் இயற்றியுள்ள ஆத்திசூடியும் கொன்றை வேந்தனுமாகும்.

ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் குழந்தைகள் படித்துச் சுவைப்பதற்கான இலக்கியங்களாக மட்டுமின்றி, படிக்கும் குழந்தைகளை நாட்டின் வருங்காலத் தலைவர்களாக, சான்றோர்களாகச் செய்யும் நீதிபோதனை நூற்களாகவும் அமைந்துள்ளன. இது தமிழ்மொழிக்கு ஔவையாரால் ஏற்பட்ட தனிச் சிறப்பு எனலாம். தமிழ் அன்னைக்கு அவர் சூட்டிய புதுவகையான அழகு பொருந்திய அணிகளுமாகும்.

தமிழ்த் தொண்டு வேறு, மக்கள் தொண்டு வேறு— என்று ஔவையார் கருதவில்லை. தமிழின் துணை கொண்டு மக்களுக்குத் தொண்டு செய்தார் அம் மாதரசியார். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களெல்லாம் ஒழுக்க நெறியிலே நின்று வாழ்க்கை நடத்தத் தொண்டாற்றினர் ஔவையார்.

## வெற்றி ஔவையாருக்கே !

"ஐந்தில் வளையாதது ஐம்பதிலே வளையாது" என்பது பழமொழி. இதுபோல, ஐந்து வயதில் நீதி

போதிக்கத் தவறினால், அதற்குமேல் போதித்தாலும் நெஞ்சில் நிலைபெறாது. இதனை உணர்ந்து, குழந்தைப் பருவத்திலேயே—'அ'கர முதல் 'ன'கரம் வரையுள்ள தமிழ் எழுத்துக்களை நெட்டுருச் செய்யும் கல்வியின் ஆரம்பக் கட்டத்திலேயே, அந்த எழுத்து வரிசைப்படி வாக்கியங்களை அமைத்துக் கொடுத்து, குழந்தை உலகத் துக்கும் நீதி போதித்தார் ஔவையார். ஔவையாருக் குப்பின் தோன்றிய புலவர்களில் தேசியக்கவி பாரதி யாரைத் தவிர வேறு எவரும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற குழந்தை இலக்கியங்களைப் படைக்க வில்லை. பாரதியாரின் 'புதிய ஆத்திசூடி' மிக்க சிறப் புடன் அமைந்துள்ளது. ஆயினும், ஔவையின் ஆத்தி சூடிக்குள்ள செல்வாக்கு பாரதியின் புதிய ஆத்தி சூடிக்கு ஏற்படவில்லை. ஔவையின் ஆத்திசூடி வாக்கி யங்களிலே பல, மக்களுடைய வாழ்க்கையில் அன்றாடம் வழங்கி வரும் பழமொழிகள் ஆகிவிட்டன. இந்தப் பெருமை பாரதியாரின் புதிய ஆத்திசூடிக்கு இதுவரை ஏற்படவில்லை.

ஔவை பாடிய மிகச் சிறந்த தத்துவ நூற்களாகக் கருதப்படுகின்ற விநாயகரகவல், வேழமுகம் ஆகியவற்றி லுள்ள சுவைமிக்க பாடல்களை 'பிள்ளையார் சதுர்த்தி' நாளில் வீடுதோறும் சிறு பிள்ளைகள்கூடப் பாடி விநா யகக் கடவுளை வழிபடக் காண்கின்றோம். ஆம்; ஔவை யார் வாக்காக உள்ள காரணத்தால், யோக சாத்திரமும் குழந்தைகள் விரும்பும் இலக்கியமாகி விடுகின்றது. குழந்தைகளுக்கான ஆத்திசூடிகூட வேதாந்திகளும் சித்தாந்திகளும் வியாக்யானம் கூறுகின்ற தத்துவ நூலாகி விடுகின்றது இதனாற்றான், "ஔவையின் வாக்கு வேதவாக்கு" என்கின்றார், காஞ்சி காமகோடி பீடாதிபதியான ஆசாரிய சுவாமிகள்.

## வள்ளுவரினும் சிறந்தவர்

திரு. கனகசபைப் பிள்ளை என்ற பெரும் புலவர், தாம் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ள "1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்" என்னும் நூலில்,

> "ஔவையார் புகழ் திருவள்ளுவர் புகழைவிட மக்கட் பரப்புடைய தெனலாம். ஏனெனில், திரு வள்ளுவர் குறளை மிக உயர்ந்த அறிஞர்களே பயில் கின்றனர். ஔவையார் பாடல்களையோ எழுத்து வாசிக்கத் தெரிந்தவுடன் ஒவ்வொரு மாணவரும் பயில்கின்றனர்."

என்று கூறி, வான்புகழ் பெற்ற வள்ளுவரினும் சிறந் தவராக ஔவையாரை வருணித்துள்ளார்.

தமிழ்ப் புலமையிலே வள்ளுவரினும் சிறந்து விளங்குகிறார் ஔவையார். இரண்டே வரிகளில் மிகப் பெரிய நீதியைப் போதிக்கும் திறனை வள்ளுவரிடம் கண்டு வியக்கின்றது புலவர் உலகம். வள்ளுவர் இரண்டு வரிகளில் போதித்த நீதியை ஒரு வரியி லேயே கூறி முடித்தார் ஔவையார்.

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும்**

இது, இரண்டடிகளில் வள்ளுவர் தந்த நீதி போதனை. இதனை '**முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்**' என்று ஒரே வரியில் கூறிவிட்டார், ஔவையார்.

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்**

என்பது வள்ளுவர் குறள். இந்தக் குறள் போதிக்கும் நீதியை, '**சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு**, என்று ஒரே வரியில் கூறிவிட்டார் ஔவையார்.

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு**

என்பது வள்ளுவர் குறள். இதனை,

**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**

என்று ஒரே வரியிலே கூறிவிட்டார் ஔவையார். மற்றும்,

**மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.**

என்னும் குறளின் பொருளை,

**ஓதலின் நன்றே வேதியர்க்(கு) ஒழுக்கம்**

என்று ஒரு வரியில் உணர்த்தினர். இதனையே,

**'நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு'**

என்ற வரியிலும் வற்புறுத்தினர்.

திருவள்ளுவர், வாழ்க்கைப் பயன்களாக வகுக்கப் பட்ட அறம் பொருள்—இன்பம்—வீடு ஆகிய நான்கினுள் 'வீடு'பற்றிக் கூருமல் ஏனைய மூன்றை மட்டும் வலி யுறுத்திப் பாடி, திருக்குறளை முடித்தார். அவர் காலத் திய சூழ்நிலைக்கு அவர் செய்தது சரிதான். ஔவையார் நீண்டகாலம் வாழ்ந்தவராதலால், தமிழர் சமுதாயத்தில் சமய உணர்வு மிகுந்து, வீடுபேற்றினை மக்கள் பெரிதும் விரும்பிய காலத்தும் இருந்தார். அதனுல், வள்ளுவரால் விடப்பட்ட வீடுபற்றி அவர் பாடிய குறள் வெண்பாவா லேயே 31 அதிகாரங்கள் பாடி, திருக்குறளை முழுமைப் படுத்தும் நூல் என்று கூருமல் கூறுவார் போல, தம் நூலுக்கு ''ஞானக் குறள்'' என்று பெயர் வைத்தார். இந்நூலுக்கு 'ஔவைக் குறள்'—'திருக்குறள்' என்னும் பெயர்களும் வழங்கப்படுகின்றன.

## சங்கத் தமிழிடத்துக் காதல்

உலகப் பற்றுக்கள் அனைத்தையும் துறந்த பரம ஞானியான ஔவைப் பெருமாட்டியார், தமிழ் மொழியிடத்துத் தாம் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுதலை வெளிப்படுத்தி, அழகான வெண்பா ஒன்றைச் செய்துள்ளார்.

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்**
**சங்கத் தமிழ்மூன்றுந் தா**

இந்தப் பாடலில் வரும் 'தமிழ் மூன்றும்' என்னும் சொல், இயல்—இசை—நாடகம் என்னும் முத்தமிழையும் குறிப்பதாகும். முத்தமிழிலும் புலமைபெறும் திறன் அருளுமாறு தாம் வழிபடும் தெய்வமான விநாயகரை வேண்டுகின்றார் ஔவையார். தமக்காக அன்று; நமக்காக! அம்மையார் பிறவிக் கவிஞரல்லவா!

'சங்கத் தமிழ் மூன்றுந் தா' என்று கோரியதால், சங்க காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள்பால் அவர் கொண்டிருந்த பற்று புலனாகின்றது

சங்க காலத்துக்குப் பின் தோன்றிய பக்தி இலக்கியங்களிடத்தும் அளவு கடந்த பற்று கொண்டிருந்தார் என்பதனை,

**தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகமென் றுணர்.**

என்ற பாடலே பறைசாற்றும். மற்றும், 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்ற ஔவை வாக்கும்

இரண்டடிகளாலான திருக்குறளிடத்தும் நான்கடிகளாலான நாலடியாரிடத்தும் அவருக்கிருந்த பற்றைப் புலப்படுத்தும்.

பிற்காலத்துக் கல்விமான்கள், கல்வித் துறையில் தமிழக மக்களுக்குப் பாடமுறை வகுத்தகாலே, ஆரம்பப் பள்ளி தொடங்கி, கல்லூரிப் படிப்பு வரை மாணவ—மாணவியர்கள் ஔவையின் இலக்கியங்களைப் படித்தறிய வழி செய்தனர். ஆம்; ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, உலகநீதி, சங்க இலக்கியமான எட்டுத் தொகையிலுள்ள ஔவைப் பாடல்கள், ஞானக்குறள், விநாயகரகவல், வேழமுகம் ஆகியவற்றை ஒருவர் படித்து முடித்தால், படித்தவற்றின் பொருளுணர்ந்தால், உணர்ந்த பொருளை உள்ளத்தில் நன்கு பதிய வைத்தால், அவர் தமிழ் ஞானம் பெற்றவராகி விடுகின்ருர். வெறும் மொழி ஞானமேயன்றி, மெய்ஞ்ஞானத்தையும் அறிந்தவராகின்ருர். இந்தச் சிறப்பு தமிழ்மொழிக் கவிஞர்களிலே பெண்பாற் கவிஞரான ஔவையார் ஒருவருக்கே உண்டு.

தமிழைத் தெய்வமாகவே கருதிய ஔவையார், பிழையாக பிறர் பாடக் கேட்டபோதெல்லாம் பெரு வேதனை யுற்ருர்போலும். தமிழ்ச் சொற்களைச் சிதைத்தும் அச்சொற்கள் தரும் பொருள்களை வதைத்தும் பாடும் இசைவாணர்கள் ஔவையார் காலத்திலும் இருந்திருக்க வேண்டும். அவர்களுடைய தமிழ்க் கொலையைச் சகியாமல் ''இழுக்குடைய பாட்டுக்கு இசை நன்று'' என்று தனிப்பாடலொன்றில் நகைச் சுவையாகக் கூறியுள்ளார்

### பணத்திற்குப் பாடாத பண்பு

பொருள் கொடுத்தவரை யெல்லாம் புகழ்ந்து பாடுவது பிற்கால—தற்காலப் புலவர்களின் தொழிலாகி

விட்டதைப் பார்க்கிறோம். "நாராயணனைப் பாடிய வாயால் நரனைப் பாடமாட்டேன்" எனச் சூளுரை புகன்ற புலவர்கள் பிறந்து வாழ்ந்து மறைந்த நாட்டில், செம்புக்கும் கொம்புக்கும் துதி பாடுவோரெல்லாம் கவிஞர்களாக நடமாடுகின்றனர். இத்தகைய இழிதொழிலை வெறுத்தார் ஔவையார்.

பெருஞ் செல்வம் படைத்தும் பிறருக்கு ஈந்து வாழாத கருமிக் குணமுடைய செல்வர் சிலர், தங்களைப் பாடுமாறு ஔவையாரைக் கோரியபோது, அவ்வம்மையார் அவர்களைப் பாட மறுத்து, அந்த மறுப்பையே ஒரு பாட்டாக்கி, பிற்காலத்தில் தோன்றவிருக்கும் கவிஞர்களின் கவனத்திற்கு வைத்துள்ளார். அந்தப் பாடல் வருமாறு :

மூவர் கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய என்றன் பனுவல் வாயால்
'எம்மையும் பாடுக' வென்றனிர் நும்மையிங்கு
எங்ஙனம் பாடுகென் யானே ; வெங்கட்
களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர்!
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர் !
புலவர் வாய்ச்சொல் புலம்பலுக்கு இரங்கீர் !
இலவு வாய்ச்சியர் இளமுலை புல்லீர் ;
அவிச்சுவை அல்லது தமிழ்ச்சுவை தெருளீர் !
உடீர் உண்ணீர் கொடீர் கொள்ளீர்
ஒவ்வாக் கானத்து உயர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே !

"தேவர்கள் காணாத தேவ தேவனாகிய பரம் பொருளையும், இளமை பொருந்திய மூவேந்தர்களையும் பாடிய என்னுடைய தமிழ் மணக்கும் வாயினால், 'எம்மையும் பாடுக !' என்று, கேட்டீர்கள். நுங்களை யான் எவ்வாறு பாடுவேன்? யான் பாடுவதற்கான தகுதி எதுவும் உங்களிடத்தில் இல்லையே! யானை

கள் வெட்டுண்டு வீழ்ந்துகிடக்கும் போர்க்களத்தை நீங்கள் கண்ணாலும் கண்டதில்லை. நல்ல யாழி னின்றும் எழுகின்ற இசையினைக் கேட்டு மகிழும் விருப்பம் உங்களுக்கில்லை. புலவர்களின் வாய்ச் சொற்களாக வெளிப்படும் புலம்பலுக்கு இரங்கும் கனிவு உங்கள் மனத்திற்கு இல்லை. காதல் வாழ்க் கையில் உங்கள் மனைவியரோடு நீங்கள் களித் திருக்கமாட்டீர்கள். சமைத்த உணவைச் சுவைத்த தன்றி, தமிழ்ச் சுவையை அனுபவித்திருக்கமாட் டீர்கள். உடம்பார உடுக்கவோ, வயிறார உண் ணவோ, கேட்பவருக்குக் கொடுக்கவோ உங்கள் செல்வத்தை நீங்கள் செலவழித்திருக்கமாட்டீர்கள். சுருங்கச் சொன்னால், பறவையும் நுழைய முடியாத காட்டின் நடுவிலே மரத்தில் பழுத்துள்ள உண்ணு வதற்குப் பயன்படாத கனியைப்போல நீங்கள் வாழுகின்றீர்கள். உங்களை யான் எங்ஙனம் பாடு வேன்!''

## தாய்மொழியோ, சேய்மொழியோ ?

தமிழ் பயின்ற—நல்ல தமிழ் வளர்த்த வேந்தர்களைப் புகழ்ந்து பாடத் தவறவில்லை ஔவையார். வழுதி என் னும் பாண்டியனை, ''வண் தமிழைத் தேர்ந்த வழுதி' என்று சிறப்பித்துக் கூறினார். ''பாண்டிய! நின் நாட் டுடைத்து நல்ல தமிழ்'' என்றும் பாராட்டினார்.

இறைவழிபாட்டுக்குப் பயன்படுத்தப்பட வேண் டியது வழிபடுவோரின் தாய்மொழியே என்பதனை அன்றே அறிவித்தார் ஔவையார். புரியாத மொழியில் இறைவழிபாடு நடத்துவதால் புண்ணியமில்லை என்பது ஔவையார் தந்த போதனை. ''தமிழருக்கு சுத்த சிவானு பூதியைத் தரவல்லது அவர்தம் தாய் மொழியான தமிழ் மொழியே'' என்று கூறினார் வடலூர் இராமலிங்க சுவாமி

கள். இந்த உண்மையை அவர் தோன்றுவதற்கு முன்பே எடுத்துக் காட்டி இடித்துக் கூறியுள்ளார் ஔவையார்.

"ஐவகைப் பெரும் பூதங்களும், நால்வகையான வாழ்க்கைப் பேறுகளும், மூவகைப்பட்ட மெய்ப் பொருள்களும் கலந்தமைந்த செம்பொருளாக விளங்குகின்றான் தண்குருகூரின்கண் கோயில் கொண்டிருக்கும் இறைவன். அவன், வேதங்களா லும் அறியவொண்ணாதபடி அவற்றைக் கடந்தும் நிற்பவன். அவனை வழிபடுவதற்கு வேத மொழி யாகிய அன்னிய மொழியே சிறந்தது என்பார்கள். யானோ அவரவரின் தாய் மொழியே இறை வழிபாட் டிற்கு ஏற்றது என்பேன்."

என்ற பொருளில் ஔவையார் பாடியுள்ள ஒரு வெண்பா வருமாறு:

**ஐம்பொருளும் நாற்பொருளும் முப்பொருளும் பெய்தமைத்த**
**செம்பொருளை எம்மறைக்கும் சேட்பொருளைத் தண்குருகூர்ச்**
**சேய்மொழிய தென்பர் சிலரியான் இவ்வுலகில்**
**தாய்மொழிய தென்பேன் தகைந்து.**

இறைவனை வழிபட தாய் மொழியே சிறந்ததென்றா லும், அதுவும், ஒழுக்கத்திற் சிறந்த முனிவர்களின் வாய் மொழியாக இருந்தால், அது வேத மொழியாகும்—என்ற கருத்தையும் வெளிப்படுத்தி ஔவையார் இயற்றி யருளிய வெண்பா வருமாறு:

**சேய்மொழியோ தாய்மொழியோ செப்பில் இரண்டும்ஒன்றே**
**வாய்மொழியை யாரும் மறையென்பர்—வாய்மொழிபோல்**
**ஆய்மொழிகள் சால உளவெனினும், அம்மொழியும்**
**சாய்மொழிய வென்பேன் தகைந்து.**

ஔவையார் சாதாரண மக்களுக்காக அவர்கள் புரிந்து கொள்ளும் பாஷையிலே எளியநடையில் பாடி

னூர். அவருடைய கவிதைகள் இறவாவரம் பெற்றவை இதனை, 'என்றுங்கிழியா தென்பாட்டு' என்ற ஔவை வாக்கைக் கொண்டே அறியலாம்.

## என்றுதான் வருமோ !

தற்காலத் தமிழ்ப் புலவர்கள் ஔவையாரின் தனிப் பாடல்களையும் நீதி நூல்களையும் புறக்கணித்து, சங்க இலக்கியங்களிலுள்ள பாடல்களை மட்டுமே போற்றிப் புகழ்கின்றனர். தனிப் பாடல்களையும் நீதி நூல்களையும் போற்றுவோர் கூட அவற்றை இரண்டாந் தரமானவையாகவே கருதுகின்றனர். ஆனால், பிற மொழியினர் சங்கப் பாடல்களிலும் தனிப்பாடல்களையும் நீதி நூல்களையுமே சிறப்பித்துப் போற்றுகின்றனர். நம்மவர்களுக்கு மக்கள் இலக்கியங்களை மதிக்கும் பண்பு என்றுதான் வருமோ !

தமிழுக்கு ஔவையார் செய்துள்ள தொண்டினை வரலாற்றாசிரியர்கள் சரியாக எடுத்துரைக்கவில்லை. அம்மூதாட்டியாரின் தனிப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள் போல நம்மிடையே நிலவுகின்றன. ஆம்; ஔவைப் பெருமாட்டியே ஒரு நாடோடிதானே ! "தமிழிலுள்ள ஏனைய இலக்கியங்களை எல்லாம் இழக்க நேர்ந்தாலும் ஔவையாருடைய இலக்கியங்களை இழந்துவிட நான் விரும்பமாட்டேன்"—என்று பாரதியார் கூறிய மொழி பொன்மொழியாகவே போற்றப்பட வேண்டும். தமிழ் வேறு, ஔவையார் வேறு-என்று பிரித்துப் பேச முடியாதபடி, தம் தாய் மொழியோடு இரண்டறப் பிணைந்து விட்டார் அப்பெருமாட்டியார்.

ஔவைதான் தமிழ், தமிழ்தான் ஔவை !

# சமதருமவாதி

ஒளவையார், சமதருமம்—சமத்துவம்—சகோதரத்துவம் என்னும் புனித நெறிகளைப் போதித்துள்ளார். சமுதாயத்திலுள்ள மேடு பள்ளங்களைத் திருத்தி, சம நிலை நிலவத் தேவைப்படும் கருத்துக்களை மக்கள் மத்தியிலே பரப்பினார். அதனால், தம் கருத்துக்களை எடுத்துக் கூற, எளிய நடையில்—ஏழை எளியவரும் விளங்கிக் கொள்ளும் பாணியில் பாட்டெழுதினார் முதலில் தமிழ் இலக்கியத்தையே பொதுவுடைமையாக்கினார். ஆம்; நீதி வாக்கியங்களையே யன்றி, உயர்தரமான யோக சாத்திரங்களைக் கூட எளிய தமிழில், எல்லோரும் புரிந்து கொள்ளும் நடையில் எழுதினார். இந்த அருந்தொண்டினைப் பாராட்டி பாரதியார் எழுதியிருப்பதாவது :

> ''யோகாநுபூதி சம்பந்தமாகப் பிறர் எழுதுமிடத்தே மிகவும் கடினமும் அஸாதாரணமுமாகிய சொற்களையும் வாக்கியங்களையும் வழங்குதல் இன்றியமையாதது என்ற கருத்துடன் வேலை செய்திருக்கிறார்கள். ஒளவையின் நூலோ, மிகத் தெளிந்த, மிக எளிய நடையில் எல்லா ஜனங்களுக்கும் பொருள் விளங்கும்படியாக எழுதப்பட்டிருக்கிறது.
>
> ''சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்'' என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில். இதில் ஒளவை ஒப்பற்றவள். இத்துடன் மிகவும் அருமையான, நுட்பமான விஷயங்களை யாவருக்கும் அர்த்தமாகும்படி மிகவும் எளிய நடையில் சொல்வதாகிய அற்புதத் தொழிலில் உயர்ந்த கவியர

சர்களே தெய்வீகத் தொழில் என்றும், தெய்வ சக்தி பெருத சாதாரணக் கவிகளுக்கு சாத்தியப்படாத தொழில் என்றும் கருதுகிருர்கள். இந்த அற்புதத் தொழிலிலும் ஔவை நிகரற்ற திறமை வாய்ந் தவள்.''

*[பாரதி நூல்கள்—கட்டுரைகள்]*

தமிழ் நாட்டில், அறிவையும் தனிவுடைமையாக்கி விடும் ஆதிக்க வாதிகள் ஔவையார் காலத்திலும் இருந் தனர். அன்ஞர் வேதாகம சாத்திரங்களையும் யோக சாதனங்களையும் பெண்கள் பயிலக் கூடாதென்ற ஆணையையும் அமுல் நடத்தினர். அந்தத் தடையைத் தகர்த்து, ஞானக்குறள் — விநாயகரகவல் — வேழமுகம் முதலிய யோக சாதனங்களைத் தந்த பெருமை ஔவை யின் தனியுரிமையாகும். இந்தவகையில், பெண் குலத் தின் விடுதலைக்கு வித்திட்ட பெருமையும் அவரையே சாரும்.

# சோஷலிசம்!

ஔவையார், சிலர் இருந்துண்ணவும் பலர் இரந்து திரியவுமான இழிநிலை இருந்து வருவதனை வெறுத்தார். "இந்த நிலை நீடித்தால், சமுதாயம் அழிந்து தொலையும் என என் மனச்சாட்சி கூறுகின்றது" என்றும் பாடினார். இதனை,

> **"ஒருபொழுது ஒருவன் ஊண்ஒழிதல் பார்க்கும்**
> **நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே!"**

என்னும் தனிப் பாடல் வரிகளால் அறிகிறோம். "உழைக்கின்ற மக்களை உணவின்றித் தவிக்க விட்டால், புரட்சி தோன்றும்" என்பதே ஔவை தந்த எச்சரிக்கை. இதையே, "தனியொருவனுக் குணவிலை யெனில், ஜகத்தினை அழித்திடுவோம்" என்னும் வரிகளில் வலியுறுத்தினர் பாரதியார். வள்ளுவரும்,

> **அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே**
> **செல்வத்தைத் தேய்க்கும் படை**

என்றும்,

> **இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
> **கெடுக உலகியற்றி யான்**

என்றும் கூறி, தனிவுடைமையாளரையும் அவர்தம் ஆதிக்கக் கொடுமைக்கு அரண் செய்து நிற்கும் ஆட்சியாளரையும் எச்சரித்தார்—இல்லை, சபித்தார்.

'...பத்தும், பசிவந்திடப் பறந்துபோம்' என்னும் ஔவை வாக்கு, தமிழர் இல்லந்தோறும் வழங்கிவரும் பழமொழியாகிவிட்டது. ஆம்; "மக்களைப் பசியிலிருந்து

மீட்காத ஆட்சியிலே, ஒழுக்கம் தழைக்காது" என்பது ஔவையின் கொள்கை. பசி வந்தால் பறந்துபோம் பத்து நெறிகள் இன்னின்னவை யென்று பட்டியல் தரு கின்றார் 'நல்வழி'யிலே.

> மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை,
> தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை,—தேனின்
> கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
> பசிவந் திடப்பறந்து போம்.

வள்ளற் பெருமானும் "கருணையிலா ஆட்சி கடுகி யொழிக" என்று வறுமையை வளர்க்கும் ஆதிக்கத்தைச் சபித்து, "நல்லோர் நினைத்த நலம் பெறுக; எல்லோரும் வாழ்க இசைந்து" என்று, பொதுமை மணக்கும் புதுஉல கத்தை வாழ்த்தினார்.

## வருணாசிரமம்!

ஔவையார் காலத்தில் நால்வருண ஆசாரம் நடை முறையிலிருந்தது. அந்தணர் — அரசர் — வணிகர் — வேளாளர் என்ற வருணங்கள், சமுதாயத்தின் தொழில் வழிப் பிரிவுகளாக அமைந்திருந்தன. இதனால், குடி தழீஇக் கோலோச்சும் பொறுப்பு ஒரு வருணத்தாருக்கே உரிமையாக்கப்பட்டிருந்தது. அவர்களிலும் ஒரு குலத் தாரே — ஒரு குடும்பத்தாரே, அப்பன், அப்பனுக்குப் பின் மகன், மகனுக்குப் பின் பேரன் என அரசு கட்டில் ஏறினர்.

அந்நாளில் 'போர்' என்றால், அரசுரிமையைக் கைப் பற்ற ஒரே வருணத்தைச் சார்ந்த இருவேறு குடும்பங் களிடையே நடக்கும் ஆதிக்கச் சண்டையாகத்தான் இருந்தது. மற்றபடி, தேச பக்தியோ, தேச மக்கள் நலனோ போருக்குக் காரணமாக இருந்ததில்லை. இதனால், அடிக்கடி சண்டை மூண்டு, சமாதானம் குலைக்கப்பட்டு

வந்தது. இந்தக் கொடுமைக்கு வாழ்த்து கூறி வந்தனர் அந்தண வருணத்தினர். பொருள் வழங்கினர், வணிக வருணத்தினர். இப்படி, அரசியலில் மேல் வருணத்தினரே ஆதிக்கம் செலுத்தினர். மக்கள் தொகையில் மிகுந்திருந்த நான்காவது வருணத்தினரான வேளாளர்கள்—அதாவது, உழுது பயிர்செய்து சமுதாயம் முழுவதற்கும் உணவளித்துக் காக்கும் உழவர்கள், மக்கள் தொகையில் மிகுதியானவர்களாக இருந்தும், அவர்களுக்கு அரசியலில் தலையிட, ஆட்சிபீட மேற உரிமையில்லாதிருந்தது.

## பாட்டாளி ராஜ்யம்!

இந்த நிலை சமதருமத்தை விரும்பிய ஔவையாரின் உள்ளத்தை வருத்தியது. அவர், "போர் தொலைந்து உலக சமாதானம் நிலைபெற வேண்டுமானால், உழுது பயிர் செய்யும் உழவர்களான நான்காவது வருணத்தினரே நாடாளவேண்டும்" என்று பாடினார். அந்தப் பாடல் வருமாறு:

**நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்**
**கோலெனிலோ ஆங்கே குடிசாயும்—நாலாவான்**
**மந்திரியும் ஆவான் வழிக்குத் துணையாவான்**
**அந்த அரசே அரசு.**

இந்தப்பாடல் அரசனொருவனைப் பார்த்து ஔவையார் பாடிய பாவனையில் அமைந்துள்ளது. பாடலின் பொருள் வருமாறு:

"அரசே! ஒரு குலத்துக் கொருநீதி கூறும் மனுநீதி போன்ற நூலுக்கு முதன்மை தரும் அந்தண வருணத்தினர் அரசாண்டால், செங்கோல் சிறக்காது; உன்னுடைய வருணத்தினராகிய க்ஷத்திரியர் ஆதிக்கம் நீடித்தால்,

ஓயாது போர் நிகழும்; துலாக்கோல் தாங்கிய வணிக வருணத்தினர் நாடாண்டாலோ, அன்னூர் லாபத்திலேயே குறியுடையோராதலால், குடி மக்களைச் சுரண்டி, அவர்களை மீளா வறுமையில் ஆழ்த்துவர்; நாலாம் வருணத்தினராகிய வேளாளர் (உழவர்) ஊராண்டால், அவர்கள் மண்ணுளும் மந்திரியானல், மக்கள் எல்லோரையும் சமமாக நடத்தி, அவர்தம் வாழ்க்கைக்கு வழித்துணையாக இருப்பர். மக்கள் தொகையில் உழவர்களே பெருந் தொகையினராதலால், அவர்களது அரசுதான் அரசு; மற்றுள்ள மூன்று வருணத்தினரும் மிக மிகச் சிறுபான்மையினராதலால், அவர்களது அரசு அரசாகாது; பெரும்பான்மையோர் மீது சிறுபான்மையோர் செலுத்தும் ஆதிக்கமாகவே இருக்கும்.''

இந்தப் பாட்டு, அரசியல் - பொருளாதார - சமுதாயத் துறைகளில் ஔவையாருக்கிருந்த தெளிந்த ஞானத்தைப் புலப்படுத்துகின்றது. ஔவையார் காலத்தில், பெருந் தொழில்கள் தோன்றியிருக்க வில்லை யாதலால், அவர் உழவர்களையே சமுதாயமாகக் கருதினர். தொழில்கள் மிகுந்துள்ள இன்றைய உலகில், ''உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்'' என்ற கோஷம் செவிகளில் ஒலிக்கின்றது. இதையே, தம் காலத்தின் நிலைமைக்கேற்ப, ''ஊராளும் திறமை உழவர்களுக்கே உரிமை'' என்று கோஷித்தார் ஔவையார்.

## நிலவுடைமைக்கு வரம்பு

உழவர் குலத்தின் உரிமைக்குப் பாடிய பெருமாட்டியார், நகர்ப்புறங்களில் வளர்ந்துவரும் கொடுமையையும் மறந்துவிடவில்லை. சமுதாயத்தின் பொதுச் சொத்தாகவுள்ள நிலங்களை யெல்லாம் ஆதிக்க வாதிகள் சுற்றி வளைத்துக்கொள்வதனை அவர் எதிர்த்தார். ''பொது

நிலத்தில் ஒருநாளும் இருக்கவேண்டாம்'' என்று உலகினருக்குப் போதித்தார் 'உலக நீதி'யில்.

பெரிய நகரங்களில் குடியிருக்க வீடுதேடி, வீடுகட்ட மனைதேடி மக்கள் அலைவதை இன்றும் கண்கூடாகக் கண்டு வருகிறோம். ஆம், நகரங்களில் மக்கள் தொகை பெருகப் பெருக, நிலம் பற்றாக் குறையாகிவிட்டது. இந்த நிலையிலும், அறுபது சதுர அடி நிலத்தில் சின்னஞ் சிறு மாளிகை அமைத்துவிட்டு, அதைச் சுற்றிலும் ஆயிரம் சதுர அடி நிலத்தை வளைத்துக்கொண்டு, சுற்றிலும் மதிலெழுப்பும் கொடுமை நிகழாமலில்லை.

இந்த நிலவுடைமை ஆதிக்கம் ஔவையார் காலத்திலும் இருந்ததுபோலும். அதனால், ''இடம்பட வீடெடேல்'' என்று அறிவுரை கூறினார் 'ஆத்திசூடி'யில்.

போர் மூண்டால், பருவ மழை தவறினால், பண்டங்களின் உற்பத்தி குறைந்து, பற்றாக்குறை தோன்றுவது இயற்கை. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளை லாபம் அடிக்கின்றனர், வணிகர்களிலே சிலர். அவர்களைப் பார்த்து, ''கொள்ளை விரும்பேல்'' என்றார் ஔவையார்.

## வறுமை கொடிது!

முருகப் பெருமான், ஔவையாருக்குக் காட்சியளித்து, 'கொடியது எது?' என்று கேட்டபோது, ''கொடிது கொடிது வறுமை கொடிது'' என்று வறுமையின் கொடுமையை முதலில் கூறிய பின்னரே, ஏனைய கொடுமைகளை எடுத்துக் காட்டினார். அந்த நாளில், வறுமையின் பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் விளங்கின கிராமங்கள். அந்தக் கிராமங்களில் நடமாடி, வறுமையின் கொடுமையால் வாடிய மக்களோடு பழ

கிறார் ஔவையார். அதனால், வறுமையை நினைத்தும் 'கொடிது, கொடிது...கொடிது' என்று மும்முறை கூறி அலறினார். பின்னர் "அதனினும் கொடிது இளமையில் வறுமை" என்றார் அக்கவியரசியார். ஆம், ஒருவன் இளமையில் வறுமையுற்று, பசியாலும் பட்டினியாலும் வாடுவானாகில், கொடும்பசியின் வெப்பத்தால் குடல் வெந்து புண்ணாகிவிடும். அப்புறம் அவனுக்கு வேளா வேளையில் உணவு கிடைத்தாலும் அவனால் உண்ண முடியாது. இதனை உணர்ந்தே, "எந்த வயதானாலும் வறுமை கொடிதுதான் என்றாலும் இளமையில் தாக்கும் வறுமையே கொடிதினும் கொடிது" என்றார்.

சமதருமத்தின் சிறப்பான அம்சம் உழைத்துப் பிழைப்பதாகும். உழைக்காத சோம்பேறிக்கு சமதரும சமுதாயத்தில் உயிர்வாழவே உரிமையில்லை. இந்த உண்மையை உணர்த்துபவர் போல, 'கைவினை கரவேல்'— அதாவது, 'உனக்குத் தெரிந்த தொழிலை ஒளிக்காமல் செய்து வாழ்' என்று போதித்தார்.

பிச்சை எடுப்பதும் கொடுப்பதும் சமதரும சமுதாயத்தில் இல்லையாதலால், 'ஏற்பது இகழ்ச்சி' என்றும், 'உரவோ ரென்கை இரவா திருத்தல்'—அதாவது, 'வல்லவர் என்போர், பிறரிடம் இரக்காமலிருப்பதாம்' என்றும் கூறினார். தானே உழைத்துப் பொருள்தேடி வாழாமல், முன்னோர் தேடிய பொருளைச் செலவழித்து வாழும் ஊதாரித்தனத்தை வெறுத்தவராய், 'தேடா தழிக்கின் பாடா முடியும்' என்றார்.

## தருமகர்த்தா முறை

ஔவையார் காலத்தில் தனிமனிதனிடம் செல்வம் குவிவது வெறுக்கப்படவில்லை. ஆனால், செல்வத்தை, தனக்கும் தன் குடும்பத்தாருக்காகவுமே குவிப்பது

வெறுக்கப்பட்டது. மாறாக, பிறருக்கும் வழங்குவதற் கென்று செல்வம் திரட்டும் பண்பு பாராட்டப்பட்டது.

இதனையே, "இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்" என்ற வரியில் அறிவுறுத்தினார் ஔவை யார். பெருஞ் செல்வத்தைத் திரட்டி, அதனைத் தாமும் அநுபவிக்காமல், பிறருக்கும் வழங்காமல், பூமியில் புதைத்து வைத்துக் காக்கும் பணப் பூதங்கள் பண் டைக் காலத்திலும் இருந்தன. அந்தப் பூதங்களைச் சாடியும் சபித்தும் பாடினார் ஔவையார். இதோ, அந்தப்பாடல்:

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்**
**கேடுகெட்ட மானிடரே! கேளுங்கள்—கூடுவிட்டிங்கு**
**ஆவிதான் போயினபின்பு யாரே அநுபவிப்பார்**
**பாவிகாள் அந்தப் பணம்.**

மற்றும், 'தனந்தேடி யுண்ணுமற் புதைக்க வேண் டாம்' என்ற வாக்கியத்திலும் தனிவுடைமையின் கொடுமையைக் கண்டித்தார்.

வணிக முதலாளிகள், தாங்கள் விற்கும் பொருளுக் குக் கொள்ளை விலை சொல்வதும், விலைக்குக் கொடுக்கும் பொருளைக் குறைவாகக் கொடுப்பதுமான கொடுமை களுக்கு எதிராக, 'அஃகம் சுருக்கேல்' - அதாவது, 'தானி யங்களைக் குறைவாகக் கொடுத்து, கொள்ளை லாபமடிக் காதே!' என்றார், ஔவையார்.

# சமுதாயத் தலைவி

ஔவைப் பெருமாட்டியார், முத்தமிழ் கற்ற புலவ ராக மட்டுமல்லாமல், மனித சமுதாயம் முழுவதுக்கும் தலைவராக விளங்கும் தகுதியும் பெற்றிருந்தார் என் பதனை, அவர் யாத்து வைத்துள்ள கவிதைகளால் அறி கின்றோம். மக்களில் ஒவ்வொருவருடைய நலனையும் நினைவில் கொண்டு எல்லா நாட்டினருக்கும் எல்லாக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய அறிவுரைகளை, ஆலோ சனைகளை வழங்கியுள்ளார். இத்தகைய பெருமைக்குரிய புலமையும் சமுதாயத் தலைமையும் பெற்றோர், வாழை யடி வாழையெனத் தோன்றிய புலவர் பெருமக்களிலே வேறெவரும் இல்லையெனச் சொல்லலாம்.

தாம் பாடிய நீதி நூல்களிலே—உணவு, உறக்கம், ஒழுக்கம், கல்வி, போர் ஆகிய மனித வாழ்க்கையோடு உறவு கொண்டுள்ள ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் அவர் எளிய தமிழில் அறிவுரை கூறியுள்ளார்.

பசியும் பட்டினியும் பாரத மக்களை வாட்டி வதைக் காத—வாட்டி வதைத்தாலும் அதற்குப் பரிகாரம் காணும் நல்லாட்சி நடந்த காலத்தில் வாழ்ந்தவராதலால், மக்கள் மிகுதியாக உண்டு நோய்ப்படுவதைத் தடுக்க, "மீதூண் விரும்பேல்" என்று அறிவுரை கூறினார்.

மிதமாக உண்பதுபற்றி அறிவுரை கூறியவர், உண்டபின் உறங்குவதுபற்றியும் ஆலோசனை கூறியுள் ளார். உறங்கவேண்டிய நேரம் பற்றிக் குறிப்பிடுகை யில், "சேமம் புகினும் யாமத் துறங்கு" என்றார். உறங்க வேண்டிய இடம்பற்றிக் கூறுகையில், "இலவம் பஞ்சிற் றுயில்", "ஒத்த விடத்து நித்திரை கொள்" "மெத்தை

யில் படுத்தல் நித்திரைக் கழகு'', ''தையும் மாசியும் வையகத் துறங்கு'' என்றெல்லாம் மக்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

''வை அகம்'' என்பதன் பொருள், 'வைக்கோல் வேய்ந்த வீடு' என்பதாம். ஆம், ஓலைக் குடிசையின் கூரைக்கு மேலே வைக்கோல் போடவில்லையானல், பனிக்காலமாகிய தை—மாசி மாதங்களிலே நோய்ப்பட நேரும் என்பதனை நினைப்பூட்டுகின்ருர்.

சமநிலமாக அல்லாமல் மேடும் பள்ளமுமாக உள்ள விடத்துப் படுத்தால் உடல் நலம் கெடக்கூடுமாதலால், 'ஒத்த விடத்து நித்திரை கொள்'' என்ருர்.

## கல்வியிலே கருத்து

ஔவையார், மக்களுடைய கல்வி நலனிலும் கவனம் செலுத்திஞர்.

**ஓதுவது ஒழியேல்,**
**எண்ணெழுத்து இகழேல்,**
**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்,**

என்றெல்லாம் கூறி, ஏட்டுக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்திஞர். ஔவையார் காலத்தில், புராண—இதிகாசங்களைக் கேட்பதால் வரும் செவிவழிக் கல்வியோடு திருப்தி அடைந்து ஏட்டுக் கல்வியை மதியாதிருந்தனர் மக்கள். அதஞற்ருன், 'ஒழியேல்'—'இகழேல்' என்னும் சொற்களால், மக்களுடைய தவறை எடுத்துக் காட்டி இடித்துக் கூறிஞர். 'எண்ணும் எழுத்தும்' என்னுஞ் சொற்ருெடர், கணிதத்தையும் மொழியையும் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். 'கல்வி' என்னும் பெயரால் இன்று என்னென்ன வெல்லாமோ பாடங்களாகி விட்டன. காந்தியடிகள்கூட தாம் வகுத்த ஆதாரக்

கல்வித் திட்டத்தில் ஆரம்பக் கல்வியிலே கணிதம்—மொழி ஆகிய இரண்டைத் தவிர வேறெதையும் சேர்க்கக் கூடாதென்றார்.

கல்வியானது ஒழுக்கத்தைத் தரக்கூடியதாக இருக்க வேண்டுமென்பது ஔவையாரின் கொள்கை. இதனை வலியுறுத்த, 'கல்வி ஒழுக்கம்' என்ற பெயரில் தனி நூல் இயற்றினார். அது, 'ஆத்திசூடி'போல 'அகர' வரிசையில் 86 சூத்திரங்களைக்கொண்டதாகும். ஐரோப்பிய ரொருவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு உரையும் எழுதப்பட்டுள்ளது. அவர் தமது பெயரை 'ஜே. எஸ்.' என சுருக்கமாகத் தந்துள்ளார். அவரது முழுப் பெயர் தெரியவில்லை.

## லஞ்சம் ஒழிக!

மக்களுடைய ஒழுக்கத்தை வளர்ப்பதிலே ஔவையார் பெரிதும் அக்கறை காட்டினார். இந்நாளில் நாட்டில் நிலவிவரும் ''லஞ்சத்''திற்கு ஔவையார் தந்த பெயர் ''கைக்கூலி'' என்பதாகும். அவர் காலத்திலும் இந்தக் கொடிய பழக்கம் நீதி மன்றங்களிலும் நிலவியது போலும்! அதனால்,

உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—யெள்ளளவும்
கைக்கூலி வாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சமிறும் என்றால் இறு.

வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி
வழக்கை அழிவழக்கு செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமிறும் என்றால் இறு.

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை

என்றெல்லாம் பாடி, கைக்கூலி வாங்கும் கயமையைக் கண்டித்துள்ளார்.

இந்த வெண்பாக்களை நிர்வாகத் துறைக்கான ஐ. ஏ. எஸ். தேர்வுக்குப் பாடமாக வைக்கலாம். 'மன்று பறித் துண்ணேல்' என்னும் வாசகத்திலும் லஞ்சம் வாங்கும் கொடுமையைத் கண்டித்துள்ளார்.

இந்நாளில், 'ஒருத்தனுக்கு ஒருத்தி' என்ற நீதியை நியதியாக்க இருதார மணம் தடை செய்யப்பட்டிருக் கிறது. இதனை, ஔவையாருடையதாகக் கருதப்படும் 'உலக நீதி'யிலே, "இருதாரம் ஒருநாளும் தேட வேண் டாம்" என்னும் வாசகத்தில் வலியுறுத்தியுள்ளார் அப் பெருமாட்டியார்.

## தேசபக்தி !

சங்க காலத்தில், தெய்வ பக்தியினும் அரச பக்தியே மக்கள் மனத்தில் முதலிடம் பிடித்துக்கொண்டிருந்தது. இடைக்காலத்தில், அரச பக்தியினும் தெய்வ பக்தியே மக்கள் வாழ்வில் மிகுந்திருந்தது. சங்க காலத்திலும் சரி, தெய்வபக்தி மிகுந்திருந்த புராண காலத்திலும் சரி; நாடு முழுவதையும் நேசிக்கும் தேசபக்தி அருகியிருந்தது. அதனால், தனி மனிதன் வாழ்விலே தன்னலம் தலைவிரித் தாடியது. இந்தக் குறைகளை அகற்ற விரும்பிய ஔவையார், தெய்வ பக்தியைப் போதித்ததுபோல, தேசபக்தியையும் வலியுறுத்தினர். "தேசத்தோ டொத்து வாழ்", "நாடொப்பன செய்" "ஊருடன் கூடிவாழ்", "நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை" என்னும் வாக் கியங்கள் தேசபக்தியை விரும்பும் மக்கள் நாள்தோறும் ஓதி உணரத்தக்க மகா மந்திரங்களாகும். ஆம்; பிள்ளைப் பருவத்திலேயே தேசபக்தியைப் போதிக்க விரும்பினு ராதலால், 'ஆத்திசூடி'யிலும் 'கொன்றை வேந்தனி'லும் மேலே எடுத்துக் காட்டிய மகா மந்திரங்களைச் சேர்த்து

வைத்துள்ளார். தேசபக்தியை முதன் முதலில் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடமாக்கிய பெருமை நம் ஔவை மூதாட்டிக்கே உரிமை.

ஔவையார், கைத்தொழில்—வாணிபம்—உழவு ஆகிய துறைகளிலும் மக்களுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார். 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற வாசகம் தமிழர் சமுதாயத்திற்கு அவர் இட்ட கட்டளையாகும். சங்க காலத்தில் தமிழக வணிகர்களிலே பலர் கடலோடிகளாகவே வாழ்ந்தனர். புராண காலத்தில் இந்த நிலை மாறியது போலும்! அதனால், இரு காலத்திலும் வாழ்ந்தவரெனக் கருதப்படும் ஔவையார், 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று தமிழனுக்கு ஆணையிட்டார்.

## உழவே இனிது!

உழவுத் தொழிலின் சீரும் சிறப்பும் தமிழ் இலக்கியங்களிலே அதிகமாகப் பேசப்படுகின்றது. நிலத்தை ஐவகையாகப் பிரித்த இலக்கண நூலோர், வயலுக்கும் வயலைச் சார்ந்த இடத்திற்கும் 'மருத நிலம்' எனப் பெயரிட்டனர். அதனையே மனித நாகரிகத்தின் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும் கருதினர். வள்ளுவர், 'உழவு' என்னும் தலைப்பிட்டு ஒரு அதிகாரமே பாடியுள்ளார்.

ஔவையார், உழவுத் தொழிலின் பெருமையைப் பேசுவதை விட, உழவர்களின் கடமையைக் கூறுவதிலேயே கவனம் செலுத்தினார்.

**பூமி திருத்தியுண்**
**சீரைத்தேடின் ஏரைத்தேடு**
**பருவத்தே பயிர்செய்**

தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும்
மேழிச் செல்வம் கோழை படாது

என்னும் வரிகளிலே, உழவர்களின் கடமைகளை எளிதில் விளங்குமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

உழவுத் தொழிலின் பெருமைகளைக் கூறவும் ஔவையார் மறந்துவிடவில்லை.

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வர எளிதாய் செய்வாரும் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது

என்ற வெண்பாக்களிலே, உலகத் தொழில்களிலே ஒப்பற்றது உழவுத் தொழிலே என்றும், உழுது வாழும் தொழிலே பழுதுபடாத தொழில் என்றும் உலக மக்களுக்கெல்லாம் உணர்த்தியுள்ளார்.

## கருத்து வேற்றுமை

ஔவையாரின் நீதி மொழிகளிலே இந்நாளைய பகுத்தறிவாளர்கள் கருத்து வேற்றுமை கொள்ளத்தக்க மொழிகளும் உண்டு—குறிப்பாக, 'முனைமுகத்து நில்லேல்' என்னும் 'ஆத்திசூடி' வாசகம், மக்களைக் கோழைகளாக்கக்கூடியதென்று கருதுவாரும் உண்டு. இப்படிக் கருதித்தானோ என்னவோ, தாம் இயற்றிய 'புதிய ஆத்திசூடி'யில், 'முனைமுகத்து நில்' என்று கூறினார் பாரதியார். 'வெஞ்சமரிற் புறங்கொடுத்து மீள வேண்

டாம்' என்று வீரம் புகட்டும் ஔவையார், 'போர்முனைக் குப் போகாதே' என்று கூறுவாரா ?

சங்க காலத்திலாகட்டும் இடைக்காலத்திலாகட்டும் 'ஔவை' என்ற பெயர், வீரத்தின் வடிவமாகவே தோன் றக் காண்கிறோம். அத்தகைய வீராங்கனையார், முனை முகத்தைப் பார்க்கவும் கூடாதென்று மக்களுக்குக் கூறு வாரா? 'மூவர் கோவையும்' எனத் துவங்கும் தனிப் பாடலில், தங்களைப் பாடவேண்டுமென்று ஔவையை வேண்டிய செல்வந்தர்களின் கோழைத்தனத்தை எடுத் துக் காட்டுமிடத்து, 'களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர்' எனக் கூறி, 'களங்காணவும் அஞ்சுகின்ற உம்மை எங்ஙனம் பாடுவேன்' என்று இடித்துரைத்த கருத்தோடு, 'முனைமுகத்து நில்லேல்' என்ற 'ஆத்திசூடி' வாக்கியத்தையும் சேர்த்துப் பார்த்துப் பொருள்காண வேண்டும். 'நில்லேல்' என்பதன் பொருள், 'வீர உணர்ச்சியின்றி, வேடிக்கை பார்க்கும் புத்தியுடன் நிற்காதே' என்பதாகும்.

'உலகநீதி'யில் வரும் 'பொருவார்தம் போர்க்களத் தில் போக வேண்டாம்' என்னும் வாக்கியத்திற்கும் இதுவே பொருளாகும்.

''போர்த்தொழில் புரியேல்'' என்றும் ஔவையார் புகன்றுள்ளார். எதிலும், தொழில் வேறு; தொண்டு வேறு. அந்நாளில், வீரர்கள் ஆயுதமேந்திப் போர் புரிந்தது, தம் அரசர் ஆணைக்குட்பட்ட நாட்டைக் காப் பதற்கேயாம். இதனால், பண்டைத் தமிழ் மறவர்கள், போர் செய்வதை அரசருக்கும் நாட்டிற்கும் செய்யும் தொண்டாகவன்றி, தம்முடைய வயிற்றுப் பிழைப்புக் கான தொழிலாகக் கருதியவரல்லர் என்பது விளங்கும். தொழிலாக மட்டுமே கருதிப் போர் செய்வோன், கூடுத லான வருவாய்க்கு வழி கிடைக்குமானால், தன் தலைவ

ஞன அரசனுக்கும் தன்னைப் பெற்றெடுத்த நாட்டுக்கும் துரோகியாக மாறிவிடுவான். இதனை உணர்த்தவே, "போரை ஒரு தொழிலாகக் கொள்ளாதே" என்று போதித்தார் ஔவையார். 'போர்' என்பதற்கு 'கலகம்' —'சண்டை' என்றும் பொருள் கொள்ளலாம். அப்படிக் கொண்டால், 'பிறருடன் சண்டை செய்து கொண்டிருப்பதையே தொழிலாகக் கொள்ளாதே' என்றும் சொல்லலாம்.

## பெண்மைக்குப் பெருமை

"தையல்சொற் கேளேல்" என்ற வாசகம் ஆண் குலத்துக்குப் பெண் குலத்தை அடிமைப்படுத்துவதாகும் எனக் கருதுகின்றனர் சிலர். இதுவும் பிழையாகும். பெண்பாற் புலவரான ஔவையார், தன் குலத்தையே இழிவாக எண்ணியிருப்பாரா? 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' என்பதும் ஔவையார் வாக்குதானே! "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றும் அவர்தானே கூறினர். "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்றாரே, அந்தத் தாயும் ஒரு பெண்தானே! 'தையல்' என்னும் சொல் மனைவியைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும் 'தையல்சொற் கேளேல்' என்பதன் பொருள், 'புற வாழ்க்கைக்கான காரியங்களில் நீ உன் அறிவின் துணைகொண்டு செயல்படு' என்பதாகும். மனைக்கு அரசி மனையாட்டி! அதனால், குடும்பக் காரியங்களில் "மனையாளைக் குற்றமொன்றும் சொல்ல வேண்டாம்" என்றார்.

'துறவு' என்று கூறிக் கொண்டு பெண்ணினத்தை வெறுக்கும் பேதைமையைக் கடிந்து, 'இல்லற மல்லது நல்லற மன்று' என்றும், 'மெல்லினல்லாள் தோள்சேர்' என்றும் கூறியுள்ளாரே, அதெல்லாம் பெண்ணினத்தின் உரிமை பற்றிய பேச்சுதானே!

'உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு' என்ற வாக்கிலும் குறை காண்போர், ஆணுக்கும் பொருந்துகின்ற வகையில் 'மீதூண் விரும்பேல்' என்று கூறியுள்ளாரே, அதனையும் நினைவில் கொள்ளவேண்டும்.

"காவல் தானே பாவையர்க்கு அழகு" என்றும் கூறியுள்ளார் ஔவையார். இதில் வரும் 'காவல்' என்பதற்கு ஆண்கள் பெண்களைக் காத்துவரும் காவல் என்று பொருள் கொள்ளக்கூடாது. ஔவையின் இந்த வாக்கியத்தை,

> **சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்**
> **நிறைகாக்குங் காப்பே தலை**

என்னும் குறட்பாவோடு பொருத்திப் பார்த்து உரை காணவேண்டும். மகளிர் தங்களைத் தாங்களே காத்துக் கொள்வதுதான் காவல் என்பது மேற்படி குறட்பாவின் பொருள். ஔவையார் கூறும் காவலும் இதுவேயாம்.

"பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்பது ஔவை வாக்கு. இங்கு "பேதைமை" என்பதற்கு, "வெள்ளை மனம்" அல்லது "வஞ்ச மற்ற குணம்" என்றே பொருள் கொள்ளவேண்டும்.

## ஔவையார் வழிபாடு

ஔவைப் பெருமாட்டியாரை மக்கள் தெய்வமாகவே கருதி வழிபட்டு வருகின்றனர். இந்தப் பழக்கம் தமிழகம் முழுவதும் பரவியிருப்பதாகச் சொல்வதற்கில்லை. திருநெல்வேலி மாவட்ட மக்களிடையே மட்டும் ஔவை வழிபாடு சிறந்து விளங்குகின்றது. இதுபற்றி திரு. அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் விவரித்திருப்பதை இங்கு தருகின்றோம் :

"தென்னாட்டில், ஸ்திரீகள் செவ்வாய்க் கிழமையொன்று தெரிந்து அன்றிரவு அவ்வையாரை

நோக்கி நோற்கின்றனர். இந்த நோன்பினை ஆண்பாலார் எவரும் காணப்படாது. இதிற் படைக்கும் நைவேத்தியங்களைப் பெண்பாலாரே தின்றொழிக்க வேண்டுமாம் இந்த நோன்பினைக் காண விரும்பிப் பெண் வேடந் தரித்து ஸ்திரீகள் நடுவுட் சென்றோரும், நோன்பு நோற்கும் வீட்டின் மேற்கூரையைத் திறந்து பார்த்தோரும் கண்ணிழந்தும், கால் ஒடிந்தும் வருந்தினரெனக் கதைகள் பல வழங்கும். இந்நோன்பு நோற்றலால் ஸ்திரீகள் தங்களுக்கும், தங்களைச் சார்ந்தவர்க்கும் ஆயுள், செல்வ முதலியன அபிவிருத்தியாகுமென்று நம்புகின்றனர். இந்நோன்பு ஔவையார்க் கிழவி விரதம் என்றே வழங்கும்.''

—'அவ்வையார்' முன்னுரையில்.

## பிள்ளையார் நோன்பா?

ஔவையார் வழிபாடுபற்றி தண்டபாணி சுவாமிகள் தமது புலவர் புராணத்துள் பின்வருமாறு கூறியுள்ளார் :

''ஔவையார் ஒரு குடிலின்முன் சென்று நின்று உணவு வேண்டும் என்று கேட்டார். அவ்வீட்டிலிருந்த பெண்ணொருத்தி, ஔவையாரை வணங்கி, அன்போடு அவருடன் பேசி, தன்னிடத்திலிருந்த கூழை உண்பித்தாள். பின், அம்முதாட்டியைப் பார்த்து, 'தாயே! தாங்கள் தோற்றத்தால் மனித உருவம் பெற்றிருப்பினும் உண்மையில் தாங்கள் எனக்குத் தெய்வமாகவே தோன்றுகிறீர்கள். என் வறுமை நீங்கி, இரந்தார்க்கு இட்டுண்ணும் வாழ்வைப் பெறும்படியாக யான் மேற்கொள்ள வேண்டிய நோன்பொன்றினை, எனக்குச் சால்லியருளுங்கள்' என்று வேண்டினாள்.

"அந்தப் பெண் தன்பால் கொண்ட பக்திக்கு வியந்து, அவளை நோக்கி, 'இப்படிக் கேட்டதற்கு நீ முற்பிறப்பில் அதிகப் புண்ணியம் செய்துள்ளாய். பொய், வஞ்சனை முதலிய தீய குணங்கள் அனைத்தையும் விட்டுச் செவ்வாய்க்கிழமை யன்று விநாயகப் பெருமானுக்கு நைவேத்தியங்கள் அமைத்து அந்த மூர்த்தியை வழிபட்டு வருவாயானால் வேண்டிய செல்வம் உண்மையிலேயே கிடைக்கும். இதில், ஆண்களுக்குச் சிறிதும் தொடர்பிருக்கக்கூடாது என்று உபதேசித்துவிட்டு, தன் வழியே சென்றாள் ஒளவை. அவளும் அவ்வாறே வழிபட்டுப் பெருஞ் செல்வத்தை அடைந்தாள். அன்று தொட்டுச் சில பகுதிகளில் ஒளவை வழிபாடு என்றும், சில பகுதிகளில் செவ்வாய்ப் பிள்ளையார் வழிபாடு என்றும் அந்நோன்பு வழங்கி வருகின்றது. அதற்கு இடையூறு செய்த ஆண்கள் கண்ணிழந்து வறுமையாலும், நோயாலும் வருந்துவர் என்பது வழக்காகும்."

## அனவரதர் மறுப்பு

தவத்திரு தண்டபாணி சுவாமிகள் சொல்லுகின்றபடிப் பார்த்தால், தற்போது தமிழகத்தின் தென்கோடியில் தமிழ்ப் பெண்கள் கடைப்பிடித்துவரும் செவ்வாய்க்கிழமை வழிபாடு, ஆதியில் ஒளவையாரால் உபதேசிக்கப்பட்ட விநாயகர் வழிபாடாகப் பிறந்து, பின்னர் ஒளவையார் வழிபாடாக மாறியதென்று கொள்ள வேண்டி யிருக்கின்றது. ஆனால், இதனை மறுக்கிறார் திரு. அனவரத விநாயகம் பிள்ளை. அவரது கருத்து வருமாறு :

"திருநெல்வேலி முதலிய சில இடங்களில் அந்நோன்பு நோற்கும் முறையைப்பற்றி ஆராய்ச்சி

செய்ததில், செவ்வாய்ப் பூஜையில் பெண்கள் வணங்குவது ஔவையாரையே யன்றி விநாயகரையுமன்று வேறு கடவுளரையுமன்று என்பது தெளிவாகின்றது. இன்னும் அந்நோன்பானது தை, மாசி, ஆடி யென்னும் திங்கள்களில் தலைச் செவ்வாயிலாதல் கடைச் செவ்வாயிலாதல் நோற்கப் படுமென்றும், ஔவையார் விக்கிரகத்தோடு வேறிரண்டு இள மாதர் விக்கிரகங்களும் சேர்த்துப் பூசையில் வைக்கப்படுகின்றன வென்றும், இவ்விருவருள் ஒருத்தி ஔவையாரிடத்து உறுதியாகிய பக்திபூண்டு நன்னிலையில் நின்றாளும், மற்றொருத்தி உறுதியாகிய பக்தியின்றித் தன்னிலையினின்றிழிந்து பின்பு நற்புத்தி யுதித்து விரதத்தை நன்கு அனுசரித்து உயர்நிலை பெற்றாளு மாவரென்றும், ஏழு குளத்தில் மண்ணெடுத்து விக்கிரகங்கள் செய்யப்படுமென்றும், கன்றீனாத பசுவின் சாணத்தோடு கூட்டிய மஞ்சளானும் அவை செய்யப்படுமென்றும், விக்கிரகம் செய்ய இயலாதபோது சாணிப் பிள்ளையார்போலப் பிண்டமாகப் பிடித்து வைப்பனவும் ஔவையார் முதலிய மாதர் விக்கிரகங்களையே குறிப்பன வென்றும், பூஜையில் செந்நிறப் பூக்களும் புன்கினிலையும் உபயோகமாகுமென்றும், கொழுக்கட்டையும் கூழும் நிவேதிக்கப் படுமென்றும், பூஜாகாலத்துக் கொழுக்கட்டையில் எண்ணெய் விளக்கு எரிந்துகொண்டே யிருக்குமென்றும், நள்ளிரவு கழிந்தே பூஜை செய்யப்படுமென்றும், பூஜை முடிவதற்கு முன் இந்த நோன்பை நோற்று நற்பயனெய்திய நல்லார் சரித்திரங்களைச் சொல்வதுண்டென்றும் பூஜை கழிந்தபின் விக்கிரகங்கள் நெற்பானையில் வைத்து சேமிக்கப்படுமென்றும் தெரிகின்றது.''

## ஔவையார் கோயில்

ஔவைப் பிராட்டியாரின் கோயில் தஞ்சை மாவட்டத்தில் வளவனுற்றின் கீழ்க்கரையில் திருவிடும்பாவனம் என்ற ஊருக்குக் கீழ்த்திசையில் துளசியார்பட்டி என்ற ஊரில் உள்ளது. அதில், ஔவையார் உருவம் கிழப்பருவமுடையதாய்க் காணப்படுகின்றது. அதனுடன் இளம் பெண்ணின் உருவச்சிலை ஒன்றும் உளது. அதனை, 'உப்பை' என்று சொல்கிருர்கள். இவள், ஔவையாரின் உடன்பிறந்தாருள் ஒருத்தி என்று கபில ரகவலில் கூறப்பட்டிருப்பது இங்கு நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

ஔவைக் கோயிலுக்கு வடமேற்கில் அரை மைல் தூரத்தில் 'கொல்லன் திடல்' என்று ஒன்று இருக்கிறது. அத்திடலில், ஒரு ஆல மரமும் ஒரு மேடையும் இருக்கின்றன.

ஒருநாள் மழையால் நனைந்து வருந்திய ஔவையை கொல்லன் ஒருவன் வரவேற்று, தன் உலையின் நெருப்புக் கனலில் குளிர்காயச் செய்து ஆதரித்தான் என்று ஒரு கதை சொல்லப்படுகிறது. ஔவை குளிரால் வாடி கொல்லனிடம் அடைக்கலம் புகுந்த அந்நாளில், ஊரெல்லாம் வெள்ளக்காடானபோது, "வள்ளையுங் கொள்ளையாகி வளவனும் பேராகிக், கொல்லன் திடல் ஒழியக் கொள்ளாய் பெருங்கடலே" என்று ஔவை பாட, அக் கொல்லன் இருந்த திடல் நீங்கலாக மற்றவை அழிந்தன என்பர்.

குமரி மாவட்டத்தில் முப்பந்தல் என்னுமிடத்திலும் ஔவையார் கோயில் ஒன்று உளது. இவ்விடத்தில், புனங்காவல் செய்து கொண்டிருந்த சிறுமி யொருத்தியின் திருமணத்தின் பொருட்டு ஔவையார் அழைக்க தமிழ் மூவேந்தரும் வந்தனரென்றும், அம் மூவேந்தரும்

தனித்தனியே இருப்பதற்கென்று மூன்று பந்தல்கள் அமைக்கப்பட்டனவென்றும், இந்த நிகழ்ச்சியின் காரண மாகவே 'முப்பந்தல்' என்ற பெயர் தோன்றியதென்றும் கூறப்படுகின்றது.

ஔவையாருக்குப் பின் தோன்றிய புலவர்களிலே தவத்திரு தண்டபாணி சுவாமிகள் ஒருவரே அம் மூதாட்டியாரை தாம் தோன்றிய தென்பாண்டி மண்டலத்தின் வழக்கத்தை யொட்டி பெண் தெய்வமாகக் கருதி வழி பட்டார். 'ஔவையார் பதிகம்' என்னும் சிறு நூலொன்றையும் இயற்றி வைத்துள்ளார். அதன் காப்புச் செய்யுள் வருமாறு :

**இருளார்ந்த நெஞ்சத்தின் ஈனர்க்கு இனியா**
**அருளார்ந்த செஞ்சொல்ஔவை யாரே—தெருளார்ந்த**
**பாக்கொடுத்த தெய்வம் பகர்ந்த படிநடத்தும்**
**நாக்கொடுக்கு மாறு நவில்.**

சாதாரணப் பொது மக்களிடையே ஔவையார் பற்றி நிலவிவரும் நம்பிக்கைகள் பலவாகும்.

சந்திரனிலுள்ள களங்கத்தைக் காணும் நம்முடைய பாட்டிமார்கள் அந்தச் சந்திரனிடத்தில் ஆலமரமொன்று இருப்பதாகவும், அந்த மரத்தினடியில் ஔவையா ரென்கிற கிழவி யொருத்தி உட்கார்ந்து நூல் நூற்றுக் கொண்டு இருப்பதாகவும் சொல்வதுண்டு.

"ஔவை - யார்?" என்ற வினவுக்கு, தமிழ் இலக்கிய ஏடுகளும், ஔவையின் பெயரால் வெளியாகியுள்ள நூல் களும் கர்ணபரம்பரைச் செய்திகளும் தரும் விடைகள் வருமாறு :

**தமிழ்மொழி வளரவும் தமிழர் வாழ்வு சிறக்கவும் பாடு படுவதற்கென்று இல்வாழ்க்கையை வெறுத்த துறவி :**

**கடைச்சங்க காலத்துத் தோன்றிய கவிஞர் ;**

அரசரிடையே போர் தவிர்க்கத் தூது சென்ற சமாதான வாதி :

சேரமன்னன் அதியமானின் அரசவைப் புலவர் ;

தற்காப்புக்காகப் போர்புரிந்த அதியமானின் வீரத்தைப் பாடிய போர்க்களப் புலவர் ;

நீதி நூல்கள் இயற்றிய சமுதாயக் கவிஞர் ;

பக்திக் கவிதைகள் பாடிய பக்தை ;

ஞானக்குறள் தந்த தத்துவ மேதை ;

குழந்தை இலக்கியம் படைத்த புதுமைக் கவிஞர் ;

மரணத்தை வென்ற சித்தர் ;

தமிழ் மக்கள் கோயில் அமைத்து வழிபடும் அறிவுத் தெய்வம்.

# முடிவுரை

இதுவரை ஔவையார் பெயரால் வழங்கி வரும் செய்திகளையும், அவர் பெயரால் உலவும் இலக்கியங்களி லுள்ள சீரிய கருத்துக்களையும் ஓரளவுக்கு தொகுத்துக் கொடுத்தோம் ஔவையார் ஒருவரா, இருவரா, அல்லது மூவரா? என்ற வினாக்குறிகள் எழுப்பி புலவர்கள் நடத்தி வரும் ஆராய்ச்சி பற்றியும் நமது கருத்தை இங்கு எடுத்துக் கூற வேண்டியது அவசியமாகும். ஏற்கனவே, ஔவை யாரின் பெயரால் உலவும் இலக்கியங்களைப் பற்றி குறிப் பிட்டவிடத்து, ஔவையார் ஒருவர் என்றே பொது மக் கள் கருதுவதை எடுத்துக்காட்டி, இந்த நம்பிக்கை நீடிக்கு மாறு விட்டு விடுவதே நல்லது என்று கூறியிருக்கிறோம். ஆயின், ஆராய்ச்சி ரீதியில் நமக்குத் தோன்றும் சில கருத்துக்களையும் இங்கு விரித்துரைக்க விரும்பு கின்றோம்.

ஔவையார், கி. மு. 2ஆம் நூற்றாண்டில் கடைச்சங்க காலத்தில் தோன்றியவர் என்றும்; 'கபிலர் அகவல்' கூறுகின்றபடி ஆதி என்னும் தாய்க்கும், பகவன் என்னும் தந்தைக்கும் மகவாகப் பிறந்தவர் என்றும்; திருவள்ளுவர், அதியமான், கபிலர் ஆகியோர் உள் ளிட்ட அறுவரை உடன்பிறந்தோராகப் பெற்றவர் என்றும்; பெற்றோரால் கைவிடப்பட்ட காரணத்தால் பாணர் இல்லத்தில் வளர்ந்தவர் என்றும்; தகடூர் ஆண்ட அதியமான் என்ற குறுநில மன்னனுக்கும் அவன் மறை வுக்குப் பிறகு அவனுடைய மகன் எழினி என்பவனுக் கும் அவைக்களப் புலவராக இருந்தவர் என்றும்; அதிய மான் சார்பில் தொண்டைமானிடம் தூது சென்று அவர்களிடையே நடக்கவிருந்த போரைத் தவிர்த்தவர்

என்றும்; ஆயுளை நீட்டிக்கும் நெல்லிக்கனியை அதியமான் தர உண்டதால் நீண்ட காலம் வாழ்ந்தவர் என்றும் நாம் நம்புகின்றோம். இதுவரை நாம் தொகுத்துக் கூறிய செய்திகள் அனைத்தும் புலவர் உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளவையாகும்.

இதற்கு மேல் ஔவையாரைப் பற்றியுள்ள செய்திகளில் கருத்து வேற்றுமை எழக் காரணம் உண்டு. குறிப்பாக, ஔவையார் அதியமான் தந்த நெல்லிக் கனியின் ஆற்றலால் மரணத்தை வென்று கி. பி. 9 ம் நூற்றாண்டு வரை வாழ்ந்து, பின்னர் யாக்கையுடன் கயிலாயம் சேர்ந்தார் என்று கூறப்படும் கதை கருத்து வேற்றுமைக்குரியதாகும். அறிவு ரீதியான ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டதாகும். ஆனால், தகடூர் மன்னன் அதியமான் தந்த நெல்லிக்கனியின் ஆற்றலால் ஔவையார் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் வாழ்ந்திருக்கக்கூடும் என்று நம்பலாம். தம்முடைய புலன்கள் மீது ஆட்சி செலுத்திய ஞானியாகவும் அவர் விளங்கினார் என்று தெரிவதால் சில நூற்றாண்டு காலம் அவர் உயிர் வாழ்ந்திருக்கக்கூடும் என்று நம்புவதில் தவறில்லை.

கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகியோர் காலத்தில் ஔவையார் வாழ்ந்திருந்தார் என்பதற்கு சான்றாகச் சொல்லப்படும் கதைகளையும், அந்தக் கதைகளோடு தொடர்புடைய கவிதைகளையும் நம்புவதற்கில்லை இனி ஔவையார் பெயரால் உலவும் இலக்கியங்களைப் பற்றிக் கூறுவோம்.

கடைச்சங்க காலத்து இலக்கியமான எட்டுத்தொகையுள்—'நற்றிணை'யில் 7 செய்யுள்களும், 'குறுந்தொகை'யில் 15 செய்யுள்களும், 'அகநானூற்'றில் 4 செய்யுள்களும், 'புறநானூற்'றில் 33 செய்யுள்களும் ஆக மொத்தம் 59 செய்யுள்கள் ஔவையார் பெயரில் காணப்படு

கின்றன. இவை அனைத்தும் ஔவையார் இயற்றியவை என்றே நாம் நம்புகின்றோம். புலவர் உலகத்திலும் இது பற்றிக் கருத்து வேறுபாடு இல்லை.

'ஆத்திசூடி', 'கொன்றை வேந்தன்', 'மூதுரை' ஆகிய நீதி நூல்கள் மூன்றும் ஆதிபகவன் மகளான ஔவையாருடையவை என்பதே நம் கொள்கை. இதற்கான சான்றுகள் சிலவற்றை ஏற்கனவே எடுத்துக் காட்டினோம். இன்னும் சிலவற்றையும் இங்கு தருகின்றோம்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினர் என்று கருதப்படுகின்ற இளம்பூரணர், பேராசிரியர் நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்கள் தத்தம் உரைகளில் கொன்றைவேந்தன், மூதுரை ஆகிய நூற்களிலுள்ள செய்யுள்களை எடுத்துக்காட்டுகளாகக் கையாண்டிருக்கின்றனர்.

தொல்காப்பியம் செய்யுளியல் உரையில் "கொன்றைவேந்தன்" காப்புச் செய்யுளை எடுத்துக் காட்டாகத் தந்துள்ளார் இளம்பூரணர். இதே காப்புச் செய்யுளை தொல்காப்பியம் செய்யுளியலுக்குத் தாங்கள் இயற்றியுள்ள உரையில் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் எடுத்தாண்டுள்ளனர். நச்சினார்க்கினியர் 'அட்டாலும்' எனத் துவங்கும் மூதுரைப் பாடலையும் தொல்காப்பியம் செய்யுளியலுக்கான உரையில் எடுத்துக் காட்டாகக் கையாண்டுள்ளார்.

இவற்றால், கொன்றைவேந்தன்—மூதுரை ஆகிய இரண்டு நீதி நூல்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரையாசிரியர்கள் காலத்திற்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றி, அவர்கள் காலத்தில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கினவென்று நம்ப வேண்டியிருக்கின்றது. ஆத்திசூடி பற்றியும் இதே நம்பிக்கை கொள்ள வேண்டிய

வர்களாக இருக்கிறோம். ஆகவே, 'நல்வழி' ஒன்றைத் தவிர, மேலே எடுத்துக் காட்டிய நீதிநூல்கள் மூன்றும் கடைச்சங்க காலத்து ஔவையார் இயற்றியவை என்றே கொள்ளலாம்.

மற்றொரு நீதி நூலான 'நல்வழி'யை சங்க கால ஔவையாரின் நூலாகக் கொள்வதற்குச் சில தடைகள் உள்ளன. சான்றாக, 'பாலும் தெளிதேனும்' எனத் துவங்கும் காப்புச் செய்யுளில் சங்ககாலத் தமிழரிடை வழக்கத்தில் இல்லாதது எனக் கருதப்படும் பிள்ளையார் வழிபாடு குறிப்பிடப்படுவதாலும், 'தேவர் குறளும்' எனத் துவங்கும் செய்யுளில் எட்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள் எனக் கருதப்படும் சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர் ஆகியோரின் தேவார—திருவாசக—திருமந்திர நூற்கள் குறிப்பிடப்படுவதாலும், 'நல்வழி' சங்க கால ஔவையாரல்லாத வேறொருவரால் இயற்றப்பட்டிருக்கலாம் என்று புலவர்களிலே ஒரு சாரார் கருதுகின்றனர். ஆனால், இந்த ஒன்றிரு ஐயப்பாடுகளை வைத்துக் கொண்டு நல்வழியை ஔவையாருடைய வாக்கு அல்லவென்று எளிதில் தள்ளி விடுவதற்கில்லை. சங்க காலத்தில் இல்லாத பிள்ளையார் வழிபாட்டை நல்வழியின் வாயிலாக ஔவையார்தான் முதன் முதலில் துவக்கி வைத்தார் என்று ஏன் கொள்ளக்கூடாது? 'தேவர் குறளும்' எனத் துவங்கும் செய்யுள் இடைச்செருகலாக இருக்கலாமென்று கொண்டால் குறையென்னவோ ? நம்மைப் பொருத்த வரை நல்வழியும், நெல்லிக்கனியின் ஆற்றலால் நீண்ட காலம் வாழ்ந்த கடைச்சங்க கால ஔவையார் இயற்றியதென்றே கருதுகின்றோம்.

இனி, ஔவையார் பெயரால் உள்ள தனிப்பாடல்களைப் பற்றிய பிரச்னை எழுகின்றது. இதிலும் சிக்கல்கள் இருக்கின்றன. கம்பரோடும், ஒட்டக்கூத்தரோடும்

தொடர்பு படுத்தப்பட்டுள்ள செய்யுள்களெல்லாம் ஔவையாருடையவை அல்லவென்று தள்ளி விடலாம். இதற்கு நீண்ட ஆராய்ச்சி தேவையில்லை. ஆனால், மற்ற தனிப்பாடல்களை —குறிப்பாகச் சங்க காலத்தில் வாழ்ந்த மன்னர்களோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ள தனிப் பாடல்களை சங்க கால ஔவையாருடையவை அல்ல வென்று எளிதில் தள்ளி விடுவதற்கில்லை. 'நல்லம்பர்' எனத் துவங்கும் தனிப் பாடலை திருமுருகாற்றுப் படைக்குத் தாம் இயற்றியுள்ள உரையில் 'ஆவினன்குடி' என்பதற்குப் பொருள் கூறுமிடத்தில் எடுத்தாண்டுள் ளார் நச்சினார்க்கினியர். ஆகவே, ஔவையார் பெயரால் உலவி வரும் தனிப் பாடல்களிலே மிகப் பெரும் பாலானவை அவருடையவை என்றே நாம் உறுதியாக நம்புகின்றோம். டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் தாம் பதிப்பித்துள்ள புறநானூற்றில் 'பாடினோர் வரலாறு' பற்றிய பகுதியில் ஔவையாரைக் குறிப்பிடுங் கால், ''இவர் அவ்வச் சமயத்தில் செய்தனவாகவுள்ள தனிப் பாடல்கள் மிகப்பல'' என்று கூறுகின்றதையும் நமது நம்பிக்கைக்குச் சான்றாகக் கொள்கின்றோம்.

ஔவையார் பெயரால் வழங்கப்படும் 'அசதிக் கோவை' என்னும் நூல்பற்றி உறுதியாக எதுவும் நூல் வதற்கில்லை. ஏனெனில், அந்த நூலின் சில செய்யுள் களே தற்போது வழங்கி வருகின்றன. ஆகவே, அந்தச் செய்யுள்கள் ஔவையாருடையவை என்று உல கோர் கொண்டுள்ள நம்பிக்கையை நாம் மதிப்போ மாக.

'ஞானக் குறள்', 'வேழமுகம்', 'விநாயகரகவல்' ஆகிய சமய நூல்கள் சங்கால ஔவையாருடையவை என்று கொள்வதற்குத் தடைகள் அதிகமாக உள. அதனால், இவற்றை இயற்றியவர் இரண்டாவது ஔவையாராக

இருக்கலாம் என்கின்றனர் புலவர பெருமக்களிலே ஒரு சாரார்.

இந்த சமய இலக்கியங்களை சங்ககால ஔவையாருடையவை என்று சொல்வதில் சங்கடம் இருக்கும் காரணத்தால் அன்றிவேற்று வகையில் இரண்டாவது ஔவையார் ஒருவர் இருந்தார் என நம்புவதற்கு ஒரு சான்றும் இல்லை. இந்த சமய நூற்களிலுள்ள செய்யுள்களில் காணப்படும் இலக்கியச் செறிவையும், பொருள் ஆழ்த்தையும், தத்துவப் புலமையையும் நோக்குங்கால், அவை ஔவையாரின் பெயரால் வழங்கி வந்ததிலும் உண்மை இருக்கக்கூடுமோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதி நூல்களை இயற்றியவர் இரண்டாவது ஔவையார் என்றும்; ஞானக் குறள், வேழ முகம், விநாயகரகவல் ஆகிய ஆகிய சமய நூற்களை இயற்றியவர் மூன்றாவது ஔவையார் என்றும் சிலர் கருதுகின்றனர். இரண்டாவது ஔவையார் இருந்தார் என்பதையே ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில் மூன்றாவது ஔவையார் ஒருவர் இருந்தார் என்பதை ஏற்பது எங்ஙனம்? நீதி நூற்களையும் சமய நூற்களையும் சங்க கால ஔவையார் இயற்றியிருக்க முடியுமா என்ற ஐயப்பாடு எழுவதனுலேயே இரண்டாவது, மூன்றாவது ஔவையார்களை நாமாகப் படைத்துவிடுவது அறிவுடைமையாகுமா?

நீதி நூற்களை இயற்றியவர் இரண்டாவது ஔவையாராக இருக்கலாம் என்ற கருத்தை அவற்றிலுள்ள செய்யுள்களைத் தத்தம் உரைகளில் கையாண்ட உரையாசிரியர்களே உறுதிப்படுத்தவில்லையென்பது கவனிக்கத் தக்கதாகும்.

தொல்காப்பியம் செய்யுளியல் முதலாவது சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையில்,

"தொல்காப்பியரோடு ஒருசாலை மாணாக்கராகிய காக்கைபாடினியாரும் உறுப்பென்றனர். பின் தோன்றிய காக்கைபாடினியார் முதலியோர் கொள்வர்; அது பொருந்தாது"

என்று கூறுமிடத்து, 'காக்கைபாடினியார்' என்ற பெயரால் இடைச்சங்க காலத்தில் ஒருவரும், கடைச்சங்க காலத்தில் ஒருவரும் ஆக இருவர் இருந்தனர் என்று குறிப்பு தந்துள்ளார். ஔவையார் விஷயத்தில் இது போன்ற குறிப்பு எதனையும் நச்சினார்க்கினியர் உள்பட உரையாசிரியர்களில் எவரும் தரவில்லை.

ஔவையாரின் செய்யுள்களை எடுத்துக் காட்டுமிடங்களில், ஓரிடத்தில் "ஔவை பாடியது" என்றும்; மற்றோரிடத்தில் 'ஔவையுங்......கூறின" என்றும் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். ஔவையார் இருவர் என்பதற்கான குறிப்பு எதையும் அவர் தரவில்லை. இளம்பூரணர், பேராசிரியர் ஆகிய உரையாசிரியர்கள் நிலையும் இதுதான். இதனால் நீதி நூல்களையும், தனிப்பாடல்களையும் இயற்றியவர் சங்ககால ஔவையார் என்றே உரையாசிரியர்கள் அனைவரும் கருதினர் என்பது புலனாகின்றது.

'கல்வி ஒழுக்கம்' என்னும் பெயரால் உள்ள நீதிநூல் ஔவையாருடையவை யென்று நாம் கொள்ளுகின்ற ஏனைய நீதி நூற்களைப் போன்று கருத்துச் செறிவோ, புலமை நயமோ உடையவை என்று சொல்வதற்கில்லை. ஆகவே, இதுபற்றி நாம் முடிவான கருத்தாக எதையும் கூற விரும்பவில்லை. படிப்பவர்களுடைய விருப்பத்திற்கே அதனை விட்டுவிடுகின்றோம்.

ஔவையார் பெயரால் உலாவரும் 'பந்தனந்தாதி', 'பெட்டகம்', 'கணபதி ஆசிரிய விருத்தம்' முதலிய நூற்கள் அந்தப் பெருமாட்டியினுடையவை அல்லவென்று

துணிந்து கூறிவிடலாம். இதற்கு ஆராய்ச்சி தேவை யில்லை.

'உலகநாதன்' இயற்றியது என்று கருதப்படும் 'உலகநீதி' ஔவையாருடையதுதான். இதற்கான சான்றுகளை ஏற்கனவே விரிவாகக் கூறியிருக்கின்றோ மாதலால், மீண்டும் ஒருமுறை 'உலகநீதி' ஔவையா ருடையது என்ற நமது கருத்தை இங்கு உறுதிப் படுத்துவதோடு அமைகின்றோம்.

ஔவையாரின் பெயரால் வழங்கிவரும் சிறந்த இலக் கியங்களை அப்பெருமாட்டியின் பெயரிலிருந்து பிரித் தெடுக்க நமக்குத் துணிவு வரவில்லை. அதனால், பொது மக்களைப் போலவே நாமும் ஔவையார் ஒருவர் என்றே கருதி அவர் பெயரால் உள்ள சிறந்த இலக்கியங்களைப் போற்றுவதே கடன் என்று நம்புகின்றோம்.

ஔவையார் புகழ்பரப்பிய நம் நாட்டுப் புலவர்களைப் பற்றியும் அயல்நாட்டு அறிஞர்களைப்பற்றியும் ஏற் கனவே குறிப்புகள் சிலவற்றைக் கொடுத்திருக்கிறோம். இந்தத் தலைமுறையிலே கலைஞர்கள் உலகத்திலும் ஔவைப் பெருமாட்டியின் புகழ்பரப்பும் தொண்டு நிகழ்ந் திருக்கிறது.

டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகக் குழுவினர் "ஔவையார்" என்னும் பெயரிலே திரு. எத்திராஜ் என்பவர் இயற்றிய சீரிய நாடகத்தை மிகவும் சிறப்பாக நடத்தி வருகின்றனர். தமிழகத்தில் மட்டுமல்லாமல் ஆந்திரம்—கேரளம்—கன்னடம்—ஆகிய பிற மாநிலங் களிலும், வட பாரதத்திலும், இலங்கை—சிங்கப்பூர்—மலாசியா ஆகிய அயல் நாடுகளிலும் இந்த நாட கத்தை நடத்தி ஔவையாரின் புகழைப் பரப்பி யுள்ளனர்.

கலைஞர் தி. க. சண்முகம் அவர்கள் ஔவையார் வேடம் தாங்கி நடிக்கையில் ஔவையாராகவே மாறிவிடும் அற்புதத்தைக் காண்கிறோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழர்கள் ஔவையாரைக் காணவும் அவருடைய அறிவுரைகளைக் கேட்கவும் பேறு பெற்றனர். ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு ஔவையார் வேடத்தில் தோன்றி நம் அகக் கண்களுக்கு ஔவையாராகவே காட்சியளித்து, தாமும் 'ஔவை' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றுவிட்டார், கலைஞர் தி. க சண்முகம்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் வெளியிட்டுள்ள கலைக் களஞ்சியத்திலே ஒப்பனைக் கலைக்கு ஔவையார் வேடத்தில் காட்சியளிக்கும் சண்முகத்தின் படத்தையே சான்று காட்டியிருக்கின்றனர்

ஜெமினி திரு. எஸ் எஸ். வாசன் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு ஔவையாரின் புகழ்மிக்க வரலாற்றைத் திரைப்படமாக்கி அப்பெருமாட்டியின் புகழ் பட்டிதொட்டிகளிலெல்லாம் பரவுவதற்குப் பாடுபட்டுள்ளார்.

பண்டைக்கால ஔவையாரைப் போன்றே சமூகத் தொண்டு புரிந்து, ஆணுலகம் பெண்ணுலகத்திற்கு இழைத்து வரும் கொடுமைகளை எதிர்த்துப் போராடி, முதுமைப் பருவத்திலும் பெண்ணினத்துக்குப் பணி புரிந்து வரும் திருமதி. முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் அடையாறிலே 'ஔவை விடுதி' ஒன்று அமைத்து அந்த மகாகவியின் நினைவுச் சின்னமாக அது நிலைபெறச் செய்து விட்டார்.

இன்னும் ஔவையாரின் பெயரால் தமிழகத்திலே ஒரு பல்கலைக்கழகமோ, ஒரு கல்லூரியோ விரைவில் அமையும் என்றும் நம்புவோமாக!

**வாழ்க, ஔவையார் புகழ்!**